

KALKI
3-2-85
ரூ.1-50
AUSTRIA
கல்கி




# 50,00,00,000 டம்ளர்களிலே கோலாகலமிக்க நறுமணம்.

ரஸ்னா நாட்டில் மிக அதிகமாக விற்பனையாகும் ஸாஃப்ட் ட்ரிங்க், கான்ஸென்ட்ரேட். சென்ற ஆண்டில் மட்டுமே 50 கோடி டம்ளருக்குமேல் ரஸ்னா பருகத் தூண்டும் ஆர்வமுடன் பருகப்பட்டது.

**தயாரிப்பது சுலபம்:** சர்க்கரையையும் நீரையும் சேருங்கள். நிமிடங்களில் இரண்டுபாட்டில் ஸிரப் தயார். 32 சுவைமிக்க டம்ளர்கள் ரஸ்னாவுக்கு போதுமானது. நீங்கள் விரும்பும் நேரத்தில் பெறலாம். 1 விருந்து 32 டம்ளர்கள்.

**சிக்கனமானது:** ஏனெனில் நீங்கள் அதை வீட்டிலேயே தயாரிக்கிறீர்கள். இயற்கைதானே— இதர ஸிரப்/ஸ்குவாஷைவிட இதற்கு பாதிக்கும் குறைந்த செலவுதான். முழுச் சுவையுடன். ஆம் அது உங்கள் படைப்பு

**தேர்ந்தெடுக்க நற்சுவை:** ரஸ்னா 9 நறுமணங்களில் கிடைக்கிறது-ஆரஞ்ச், அன்னாசி, எலுமிச்சை, காலாகாட்டா, மிக்ஸ்டு ஃப்ரூட், ரோஜா, கசகசா, மசாலா மில்க், மசாலா சோடா. சாதாரணமாகவோ அல்லது சோடாவுடனோ அருந்தினால் அதன் சுவையே அலாதி.

**முழுக்க முழுக்க சுகாதாரமானது:** ரஸ்னா முழுவதும் ஆட்டோமாடிக் தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகிறது. ஆதலால் அது முழுவதும் சுகாதாரமானது. சுவை மாறாமல் நீடிக்கும்மற்றும் தரமோ உயர்வாக இருக்கும்.




## ரஸ்னா

ஸாஃப்ட் ட்ரிங்க
கான்ஸென்ட்ரேட்
**சுவைமிக்கது**
**சிக்கனமானது**
**பல நறுமணங்கள்**
**கொண்டது.**

தயாரிப்பவர்கள்: பயோமா இண்டஸ்ட்ரீஸ், அஸர்வா, அஹமதாபாத்-380 016

Mudra:A:PI:2118

## படம் சொல்லும் கதை

# ஒரு 'கின்னஸ்' காலரியின் கதை

**18** மீட்டர் உயரம், 25 மீட்டர் அகலம், 350 மீட்டர் நீளம் ஒரே சமயத்தில் 50 ஆயிரம் பேர் இருந்து சுகமாய் ரசிக்கலாம், பார்க்கலாம்.

என்ன இது ?

நான்காவது அகில உலக நேரு கோப்பைக் கான கால் பந்துப் போட்டி எர்ணாகுளம் மகாராஜா மைதானத்தில் நடக்கிறது.

இதற்காகத் தற்காலிகமாய் அமைக்கப்பட்டிருக்கும் காலரியின் அளவுகள்தான் முதல் பாரா.

82ல் எர்ணாகுளத்தில் நடந்தபோதும் ஒரு காலரி அமைக்கப்பட்டது. அன்றைய நிலவரத்திற்கு அதைப் பெரிசாய்ப் பேசினார்கள். அதைவிடப் பெரியது இது.

இதை சாதித்தது குமரேச நாடார் என்கிற தமிழர். இவருக்கு இத்துறையில் 10 வருட அனுபவம். தஞ்சாவூர், புதுக்கோட்டையிலிருந்து சவுக்கு மரங்களைத் தருவித்து 250 தமிழர்களைக் கொண்டு இதை அமைத்திருக்கிறார்.

இவ்வளவு பெரிய காலரியை உருவாக்கிக் கொண்டிருக்கும்போது ஒரு எதிர்ப்பு கிளம்பியது.

மூன்று மாதங்களுக்கு முன்பு திருவனந்தபுரத்தில் ஒரு கால்பந்து போட்டிக்காகத் தற்காலிக காலரி கட்டப்பட்டு, இடிந்து சரிந்து, மூவர் மரணமடைந்ததைக் காரணம் காட்டி இங்கேயும் அப்படி நடக்கலாம், என்றார்கள்.

கேஸ்கூடப் போட்டார்கள் — காலரி ஆடவோ, பின்புறம் சரியவோ வாய்ப்பு இருப்பதாகச் சொன்னார்கள்.

'எந்தவிதத்திலும் சரிவதற்கும் ஆடுவதற்கும் வாய்ப்பில்லை. பிரத்யேக என்ஜினீயர்களின் திட்டப்படி கட்டப்பட்டிருக்கிறது. காலரியின் பாதுகாப்பிற்கு உத்திரவாதம் தருகிறோம்' என்று அடித்துச் சொன்னார் நாடார்.

சீனா, இத்தாலி, யுகோஸ்லேவியா, ஈரான், ஈராக், முதற்கொண்டு பதினொரு நாட்டு டீம்கள் பந்து உதைக்கப் போகிறார்கள்.

உலகத்திலேயே பெரிய தற்காலிக காலரியான இது 'கின்னஸ்' புத்தகத்தில் இடம் பெறப் போவதாய் நம்பத் தகுந்த செய்தி.

என். பி. மோகன்தாஸ்

படம்: பிரீஸ் ஸ்டுடியோ, கொச்சின்



# சென்றோம் பார்த்தோம்

# பாடம் பெற்ற

மீன் பிடித்தல் ஒன்றையே தங்களின் ஜீவனோபாயமாகக் கொண்டிருக்கும் நமது மீனவர்கள், இலங்கையின் ரோந்துப் படையினரால் துன்புறுத்தப்பட்டு வருவது அன்றாட நிகழ்ச்சியாகி விட்டது. கச்சத்தீவு பறி போனதிலிருந்தே கஷ்டத்திற்கு ஆளாகி வருகிறார்கள் நமது மீனவர்கள்.

டிசம்பர் 5-ம் தேதி, I.P.P.–154' என்ற எண்ணுள்ள விசைப்படகை முற்றிலுமாக எரித்துள்ளார்கள் இலங்கைப் படையினர்.

டிசம்பர் 10-ம் தேதி, அந்தோணி பிரான்ஸிஸுக்குச் சொந்தமான I. B. 337 படகில் நால்வர் மீன் பிடிக்கச் சென்றிருக்கின்றனர் கடலில்.

மீன் பிடித்துக் கொண்டிருக்கும்போது இரவு பதினொன்றரை மணியளவில் டிரைவர் அறையின் மீது சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு. உள்ளேயிருந்த 22 வயது கூட நிரம்பப் பெறாத இளைஞர் முனியசாமி தலையை நீட்டி வெளியே எட்டிப் பார்க்க, சன்னத்தில் குண்டு பாய்ந்து சுருண்டு விழுகிறார். என்ன நடக்கிறது என்பதை அறிவதற்குள் ஒருயிர் பலியாகிவிட்டது. படகின் விளக்குகள் அணைக்கப்பட்டு, இலங்கை கப்பற்படையினரிடமிருந்து ஒருவாறு தப்பித்து அழுது புலம்பிய கண்களுடன் 11-ம் தேதி காலை கரையை அடைகிறார்கள் மற்றவர்கள்.



✕ அல்போன்ஸின் குழந்தைகள்

தேர்தல் சந்தடியில் இவ்விஷயம் காணாமற் போனது. ரூ. 2000 அளித்ததோடு தனது கடமையும் முடிந்து போனதாகத் திருப்திப் பட்டுக் கொண்டது மாவட்ட நிர்வாகம்.

புது வருடம் பிறந்ததும் இலங்கை ரோந்துப் படையினரின் அச்சுறுத்தல்கள் அதிகமாயின. ஜனவரி 2-ம் தேதி பிடிபட்ட 'ராயப்பன்' படகும் அதில் இருந்த 10 மீனவர்களும் என்ன ஆனார்கள் என்பதே தெரியவில்லை. தேடுதல் முயற்சி நடந்ததா என்பதை அறிய மீன் துறை அதிகாரியைச் சந்தித்தோம். அன்று அவர் மௌன விரதம் போலும். மனுஷன் வாயைத் திறக்கவே இல்லை!

ஜனவரி 6-ந் தேதி மாலை. வழக்கம் போலவே படகுத்துறையில் இருந்துபடகுகள் புறப்பட்டன. அடுத்தநாள் இரவு நடக்கப் போகிற பயங்கரத்தை அறியாததாலோ என்னவோ, ஆனந்தமாக ஆடி அசைந்து கிளம்பியிருக்கிறது சேசுமகன் சார்லஸுக்குச் சொந்தமான 'லவகுசா ஜெய்ஹிந்த்' என்ற P. B.–108 விசைப்படகு. அப்படகில் சார்லஸ், சூசைநாயகம், அல்போன்ஸ், ராஜ், ராஜ்தந்தை ஆகிய ஐவர் பயணித்திருக்கின்றனர்.

சாதாரணமாகவே ஒருஇரவு – இரண்டு பகல் அல்லது இரண்டு இரவுகள் – ஒரு பகல் கடலில் தங்கி மீன் பிடிப்பார்களாம். இதைத் 'தங்கு கடல்' என்றழைக்கிறார்கள் மீனவர்கள்.

அடுத்தநாள் நடந்ததென்ன? லவகுசாவின் உரிமையாளரும் சம்பவம் நடந்த அன்று படகை ஓட்டிச் சென்றவருமான சேசுமகன் சார்லஸ் சொல்கிறார்:

''பாம்பன் தென்கடலான அரிச்சகடல் (தனுஷ்கோடிக்குத் தெற்கே 4 கி. மீ.) பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தோம். அப்போது எங்களுடன் எஸ். எஸ். ஆர். சகாயம் என்பவருக்குச் சொந்தமான 'சுசேதா' விசைப்படகும், சேர்ந்து கொண்டது. அப்போது மணி நாலிருக்கும்.

''இரு படகுகளும் பாடு வைத்து இழுத்துக் கொண்டிருந்தபோது, திடீரென்று எங்களின் படகு அருகே பிளாஸ்டிக் போட் ஒன்று வந்தது. அதில் இலங்கைக் கடற்படை ஆட்கள் ஏழு பேர் இருந்தனர். மிஷின் துப்பாக்கியைக் கையில் ஏந்தியபடி நின்றிருந்த அவர்கள் எங்கள் அருகே வந்து படகின் மடி, போடு–கம்பாக்சயிறை வெட்டினார்கள். எங்கள் படகு ஆடத் துவங்கி விட்டது. பின்னர் சுடத் துவங்கினார்கள். எங்களுடன் இருந்த சூசைநாயகத்தின் மண்டையில் குண்டுமோதி கீழ்த்தாடை வழியாக வெளியேறியது. சிங்களவர் மூன்று 'பேர் படகினுள் வந்து, இரத்தம் பீறிட விழுந்து கிடந்தவரைக் கடலில் தூக்கி எறிந்தார்கள். அவரை மீட்க முயன்றால் உங்களுக்கும் அதே கதிதான்' என்று அவர்களுடன் இருந்த ஒருவன் தமிழிலேயே எச்சரித்தான்.

''மீண்டும் எங்களை நோக்கிச் சுட ஆரம்பித்தார்கள். அல்போன்ஸ் குண்டடிக்கு ஆளாகி மயங்கி விழுந்தார். வயிற்றில் பாய்ந்த குண்டு இடுப்பைப் பிய்த்துக் கொண்டு வெளியேறியது!

# சொல்கிறோம்

# சிங்களப் படையினர்

''மீதமிருந்த எங்கள் மூன்று பேரையும் கசேதாவில் ஏற்றினார்கள். கசேதாவில் நால்வர் இருந்தனர். நங்கூரம் இட்டார்கள். எங்களை ஒவ்வொருவராகக் கடலில் தூக்கிப் போட்டு, சுட்டார்கள். தண்ணீருக்குள் மூழ்கி, மூழ்கி எழுந்ததால் துப்பாக்கிப் பசிக்கு இரையாகாமல் தப்பித்தோம்!


''சிங்களக் கடற்படையினர் போன பிறகு ஒவ்வொருவராக நீந்தி கசேதாவில் ஏறினோம். லைகுசாவின் மசல் பைப் வெட்டப்பட்டதால், அது செயலற்ற நிலைக்கு வந்துவிட்டது. அல்போன்ஸ் பாதி மயங்கிய நிலையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார். சிரமப்பட்டு உணர்வு வரச் செய்தோம். அவரால் பேச முடியவில்லை. தண்ணீர் கேட்டார். அதைக் கூடத் தர முடியாத பாவிகள் ஆகிவிட்டோம். தண்ணீர் கேனையெல்லாம் கடலில் எறிந்து விட்டார்களே. எங்கள் படகைக் கசேதாவில் கட்டிக் கரைக்கு வந்தோம். வரும் வழியிலேயே அல்போன்ஸின் ஆவி பிரிந்து விட்டது. கரைக்கு வந்து சேர இரவு 11 மணி ஆகிவிட்டது. பின்னர் போலீசுக்குத் தகவல் கொடுத்தோம்.''

மரண அவஸ்தை என்பார்களே அது எப்படி இருக்கும் என்பதை அறியாத நமக்குக் கூட இரத்தம் உறைந்து விடும் போலத் தோன்றுகிறது என்றால் சார்லஸ் போன்றவர்கள்...

ஜனவரி ஏழாம் தேதி இரவு மீண்டும் 'பாங்கோ' என்ற விசைப்படகின்மேல் ஹெலிகாப்டர் பலமுறை சுட்டிருக்கிறது.

மீனவர்கள், இரண்டு, உணர்ச்சி வயப்பட்டு, பாம்பன் பால ரயில்வே தண்டவாளத்தை ஆக்கிரத்துடன் அகற்றியிருக்கிறார்கள். சென்னைக்கும் — டெல்லிக்கும் தந்தி பறந்திருக்கிறது. இதுவரை கண்டும் காணாமல் இருந்த நமது 'ஐந்து வருட குத்தகைக்காரர்கள்' ஒசோ இது கவனிக்கப்படவேண்டும் போலிருக்கிறதே என்ற உணர்வு பெற்றார்கள்.


○ அல்போன்ஸ்



மீனவர்களின் கொந்தளிப்பைக் கண்டு வேகம் பெற்ற மாவட்ட நிர்வாகம் நீண்ட அறிக்கையினைச் சென்னைக்கு அனுப்பியது. மீனவர்கள் சட்டம் ஒழுங்கைத் தம் கையில் எடுத்துக் கொள்வதைத் தவிர்ப்பதற்காகவாவது உடனடியாகக் கப்பற்படையைச் சார்ந்த கப்பல் ஒன்றினை அனுப்புமாறு போலீசும் பரிந்துரைத்தது.

மீனவர்களுக்கு நமது கடல் எல்லை பாதுகாப்புப் படையின் மீது அவ்வளவாக நம்பிக்கை இல்லை. பலமுறை சிங்களப் படையினரின் ஊடுருவல் குறித்துத் தெளிவாகத் தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையாம். இதனை உயர் போலீஸ் அதிகாரியே நம்மிடம் தெரிவித்த போது வியக்கத்தான் வேண்டி இருந்தது.

மண்டபத்தில் உள்ள கடல் எல்லைப் பாதுகாப்புப் படை அலுவலகத்திற்குச் சென்று உண்மை நிலவரத்தை' அறியலாம் என்றால், சொல்லி வைத்தாற்போன்று 'பத்திரிகைக்காரர்களிடம் பேசுவது பாவம்' என்பது போல் ஒருவருமே வாய் திறக்கவே இல்லை.



○ சூசைநாயகத்தின் மருமகள் மிக்கேல் ராணி, மகன் ஜார்ஜ் (நடுவில்) மனைவி புஷ்பம்

ஜனவரி 11 அதிகாலை. நமது மீனவர்களின் சில விசைப்படகுகள் அமைதியாகக் கரையை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. எல்லாவற்றிலும் சுமாராக ரூ. 6,000 பெறுமானம் உள்ள மீன்கள். திடீரென்று இலங்கைப் படகு இவர்களை நோக்கி விர்...ர்ர்ரென்று... கண்டவுடனே மீனவர்கள் தங்கள் விசைப்படகுகளைத் திசைக்கொன்றாகத் திருப்புகின்றனர். தப்பித்தால் போதுமென்று. இலங்கைப் படகில் ஏழு பேர். துரத்தி, விசைப்படகுகளைத் துப்பாக்கி முனையில் நிறுத்துகின்றனர். முன்னர்போன்றே மூவர் மட்டும் விசைப்படகுகளில் ஏறி, பிடித்து வைத்த மீன்கள், வலைகள், கயிறுகள், மசல் கேன்கள், மீதமிருந்த சப்பாத்திகள் ஆகியவற்றைத் தங்களின் படகுக்கு மாற்றுகின்றனர்.

வேலு என்பவருக்குப் பலமான அடி. துப்பாக்கியைத் திருப்பி, மண்டையில்

ஒரே போடு. மயங்கி விழுகிறார். அவர். நல்லு, சாமி, பாலு என்பவரையும் நையப் புடைக்கிறார்கள். நல்லவேளை துப்பாக்கி இருப்பதை மறந்து விட்டார்கள் போலும். ஏதோ பெரிய வெற்றியைப் பெற்றுவிட்டது போல், எக்காளமாகச் சிரித்துவிட்டு, படகி லுள் குதித்து இலங்கை எல்லையை நோக்கிப் படகினைத் திருப்புகிறார்கள். இதற்குள் பயந்து, நான்கு திசையிலும் சென்ற நமது படகு ஒன்றுக்கு எதிரில் நமது ரோந்துக் கப்பல் ஜுஜுபாய் டி.—64 கம்பீரமாக மூவர்ணக் கொடியைப் பறக்கவிட்டு வந்து கொண்டிருப்பது புலப்படுகிறது.

கேப்டன் கன்வாரிடம் செய்தியைப் பகர் ந்ததுடன், பயத்துடன் மீனவர்கள் எடுத்துச் சொல்கிறார்கள். தமிழ் புரியாவிட்டாலும், நிலைமையை உணர்ந்த காப்டன் கன்வார், அவர்களிடம் எங்கே எந்தத் திசையில் என் பதை எல்லாம் விவரமாகக் கேட்டறிகிறார்.

பின்னர் அவர் ஆணையின் பேரில் நீரைக் கிழித்துக் கொண்டு ஜுஜுபாய் பாய்ந்து செல் கிறாள். வழியில் மேலும் சில படகுகள். அடிபட்டு, இரத்தம் வழிய நிற்கும் நமது மீனவர்களைப் பார்த்ததும், நிலைமையின் கடுமையைப் புரிந்து கொண்ட கன்வார், தம்மிடம் இருந்து முதலுதவிப் பெட்டியைத் தந்துவிட்டு டெலஸ்கோப் வழியே தமது கண்களை அலைய விடுகிறார்.

சிறுபுள் ஏதோ பறப்பது போல் தோற்றம். பின் தூரத்தில், நெருங்கி, பின்னர் மைக் மூலம் ஆங்கிலத்தில் எச்சரிக்கை விடுக்கிறார். துப்பாக்கி முனைகளும், பீரங்கி முனைகளும் குறி வைக்கின்றன.

வேறு வழியின்றி — தப்ப முயன்றால் உயிர் மிஞ்சாது என்பதையறிந்த அவர்கள் கைகளைத் தூக்குகிறார்கள். அதற்குள் அவர்கள் அருகே சென்ற காப்டன் கன்வார் படகோடு இழுத்து வந்து, தமது கப்பலில் இணைக்கிறார். ஒவ்வொருவராக நமது கப்ப லில் ஏற்றப்படுகிறார்கள். போலீஸ் கன்ட் ரோலுக்கும், கப்பற்படைத் தலைமையகத்திற் கும் செய்திகள் துள்ளிக் குதித்துப் பறக் கின்றன.

கரை திரும்பிய மீனவர்கள் கொணர்ந்த செய்தி கேட்டுத் தீவே சந்தோஷத்தில் மிதக் கிறது. ஓய்வெடுத்துக் கொண்ட படகுகள் அனைத்தும் கடலில் திருப்பப்படுகின்றன. காட்டுத் தீ போல் செய்தி பரவுகிறது. ஆயிரக்கணக்கில் மக்கள் குழுமுகிறார்கள். எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி... மலர்ச்சி..

சிங்களப் படையினரைப் பிடித்த இடம் கொடிக்கடல். டிசம்பர் 11 அன்று அநியாய மாக முனியசாமி கொல்லப்பட்டானே அதே இடம்.

இராமேஸ்வரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் இராம் மோகனுடன் நாமும் பயணமாகிறோம். அந்நேரம் காலை 11 மணி இருக்கும். ஜுஜு பாயுடன் இணைக்கப்பட்ட சிங்களக் கப்பல் கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிய ஆரம்பிக் கிறது.

பிடிக்கப்பட்ட சிங்களப் படையினர் தளத் தில் அமர்ந்திருக்கின்றனர். கன்வாரே அவர்களிடம் ஆவி பறக்கும் டீயைக் கொடுக் கிறார்.

இராமநாதபுரம் மாவட்ட போலீஸ் முழுவதுமே மண்டபம் வந்ததோ என்று திகைக்கும் வண்ணம் பூட்ஸ் ஒலி. திரும்பிய பக்கமெல்லாம் காக்கிச் சட்டை. ஏறக் குறைய 3,500 காவலர்களின் பாதுகாப் புடன் பிடிபட்ட கேப்டன் லெப். குண திலகா, பிரேமகிரி, பிரேம திலகா, லலித குமார், சுபே சூர்யா, சமத்ர பால ஆகி யோர் இராமநாதபுரம் அழைத்துச் செல்லப் பட்டனர்.

மூன்று மீனவர்களைப் பலி கொடுத்த பின்னர், மீனவர்களின் பல போராட்டங் களுக்குப் பிறகு, இலங்கை அரசின் மறுப் புகள் பொய்யாக்கப்பட்டுள்ளன, சிங்களப் படையினரை நமது எல்லையிலேயே பிடித்த தன் மூலம், பாடம் பெற்றனர்; கற்றனரா தெரியாது.

# ஐயோ பாவம் தமிழர்கள்...

மண்டபம், இராமநாதபுரம் மாவட் டத்தில் இராமேஸ்வரம் செல்லும் சாலையில் அமைந்துள்ள சிறிய ஊர். புண்ணியம் தேடி இராமேஸ்வரம் செல்லும் பயணிகள் மட் டுமா இங்கே வருகிறார்கள்? வீடிழந்து, வாசல் இழந்து — உற்றார் உறவினரை இழந்து நாடற்ற அனாதைகளாக — அகதிகளாகத் தமிழ் மண்ணை மிதித்தாலாவது வாழ்வு கிட் டும் என்ற எதிர்பார்ப்பில் — ஏக்கத்துடன் ஆயிரக்கணக்கான வாழ்ந்து கெட்ட குடும் பங்கள் கண்ணீர் மல்க, தேற்றுவார் இன்றி இங்கே சங்கமித்து இருப்பதால்தான் மண் டபம் என்று பெயர் வந்ததோ என்னவோ.

மண்டபம் முகாமிற்கு வருவோரிடம் நான்கு வகைக்கும் மேற்பட்ட பாஸ்போர்ட் கள் உள்ளன. உலகத்தில் வேறு எந்தநாட்டு மக்களும் பெற முடியாத இந்தப் பாக்கியம் தமிழர்களுக்கு மட்டும் கிடைத்திருப்பதைக் கண்டு அழுவதா சிரிப்பதா?

1964ல் ஏற்பட்ட சாஸ்திரி — சிரிமாவோ ஒப்பந்தப்படி இந்தியா திரும்பி வருவோர் களுக்கு அளிக்கப்படும் முதல் வகையான

அகதியாக வந்து முகாமில் இடம் கிடைக்காது திண்டாடும் பெரியவர் அருணாசலம் செல்லையா



# மண்டபம் முகாம்

பாஸ்போர்ட் இந்தியா வர மட்டுமே அனுமதிக்கிறது. இவர்களைத்தான் அகதிகள் என்கிறது அரசு. இவர்கள் இந்தியக் குடியுரிமை கோருபவர்கள்.

நேரு – கொத்வால் பாஸ்போர்ட் என்பது இன்னொரு வகை. 1954ம் ஆண்டில் அமலுக்கு வந்தது இது. 55 வயது வரை இந்தியா வந்து இலங்கை திரும்பலாம். 55 வயதுக்குப் பிறகு இந்தியாவில் தங்கிவிட வேண்டும். இவர்கள் இந்தியப் பிரஜைகளே.

எமர்ஜென்ஸி சர்டிபிகேட் எனப்படும் மூன்றாவது வகை இலங்கையில் உள்ள இந்திய ஹைகமிஷனால் வழங்கப்படுவது. நெருக்கடி காலத்தில் மட்டும் தற்காலிகமாக இந்தியாவில் தங்கிட அனுமதி கொடுக்கும் சான்றிதழ் ஆகும் இது.

'அடையாள அட்டை' என்பது புகைப்படம் எதுமின்றி, உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடி வரும் மக்களுக்கு இலங்கை அரசு வழங்கும் சான்றிதழ்.



○ முகாமில் இடம் கிடைக்காது ஒரு வருடமாக மரத்தடியில் வாழ்க்கை நடத்தும் கணபதி குடும்பத்தினர்

இவையன்றி – 1949ம் ஆண்டு பாஸ்போர்ட் என்பது ஸ்பெஷல் சேஸ். ரூ 500 கட்டினால் ஒருவருடம் இலங்கையை விட்டு வெளிநாட்டில் இருக்க இலங்கை அரசு அனுமதிக்கும் சான்றிதழே இது.

சாஸ்திரி – சிரிமாவோ ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா வருபவர்களுக்கு மட்டும் தான் புனர் வாழ்வு தரப்படுகிறது. இவ்வொப்பந்தத்தின் கீழ் வருபவர்களுக்கு இலங்கையிலேயே இந்திய ஹைகமிஷனால் குடும்பக் கார்டு வழங்கப்படுகிறது. இவர்கள் பணமாகவோ பொருளாகவோ ஒரு குறிப்பிட்ட அளவு வரை எடுத்து வர அனுமதியும் உண்டு.

இந்தியா வந்ததும் மண்டபம் முகாமிற்கு அனுப்பப்படுகிறார்கள். புனர்வாழ்வை மேற்கொள்ள ரூ3,000–வரை உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது. கட்டுப்படுத்தப்பட்ட விலையில், அரிசி, மண்ணெண்ணெய், உடுக்க இலவசமாக ஆடை வழங்கப்படுகிறது.



○ மண்டப முகாமில் ராமகிருஷ்ண மிஷன் குழந்தைகளுக்குப் பால் தரும்போது...

மண்டபம் முகாமில் தற்போது சுமார் 400 குடும்பங்கள் உள்ளன. உள்ளே தங்கிட அனுமதி, கடந்த ஒரு வருட காலமாகக் கிடைக்காததால் கணபதி தம்பதியினர் முகாம் எல்லைக்கு வெளியே மரத்தடியில் வசித்து வருகின்றனர். 20 முறைக்கும் மேலாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் குருமூர்த்தியிடம் மனு கொடுத்தும் பலனில்லையாம். உள்ளே தங்கியுள்ள மற்றவர்கள் கொடுக்கும் உணவுப் பொருட்களை வைத்து ஏதோ கால் வயிறு – அரை வயிறு நிரப்பி வருகின்றனர். சசிகுமார் (வயது 3), ராஜ்குமார் (வயது ஒன்றரை) ஆகிய இரண்டு குழந்தைகளோடும் போராடி வருகின்றனர். கணபதி காபி போர்டில் பணியாற்றி மாதமொன்றிற்கு ரூ2000 சம்பளமாகப் பெற்றவர். கொழும்புவை அடுத்த பாமன் கடையில் இவருக்குச் சொந்தமான வீடு இவரின் கண்ணெதிரிலேயே பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தப்பட்டதால் கட்டிய துணியோடு இந்தியா வந்தவர்.

''இங்க வந்து இப்படியெல்லாம் கஷ்டப்படுவோம்னு தெரிஞ்சிருந்தா அங்கேயே நிம்மதியா செத்திருப்போம்'', என்று திருமதி கணபதி கூறியபோது ஆறுதல் சொல்ல வார்த்தைகளைத் தேடி அலைய வேண்டியதாயிற்று.

அருணாசலம் செல்லையா. பெரியவர். 58 வயது ஆனவர். கொழும்புவை ஒட்டியுள்ள கொச்சிக் கடையில் சொந்தமாக மரம் வியாபாரம் செய்து வந்தவர். 1948ல் இதே மண்டபம் முகாம் வழியாக ஒளி மிகுந்த எதிர்காலத்தை எண்ணி மகிழ்ச்சியுடன் இலங்கைக்குச் சென்றவர். 1984ல் அதே மண்டபம் முகாமிற்கு, மனைவி – பிள்ளைகளைப் பறி கொடுத்து விட்டு, சொத்துகளையும் இழந்து தனிமனிதனாகத் திரும்பியுள்ளார்.

''17 முறை மனு கொடுத்தேன். ராமநாதபுரம் கலெக்டர் என்னை உள்ளே விடணும்னு சொல்லி எழுதிக் கொடுத்தார். அந்த மனுவையும் வாங்கிகிட்டாங்க. என்னோட அடையாள அட்டையையும் (எண் 212255) வாங்கிக் கொண்டு திருப்பித் தரவில்லை இங்குள்ள அதிகாரிகள். சாப்பாட்டுக்கும் வழியில்லை உடுத்திக்கவும் துணியில்லை. சாகணும்னு நினைச்

சாலும் விதி முடிய மாட்டேன் என்கிறதே' என்று கண்களில் கண்ணீர் புரண்டோட அருணாசலம் செல்லையா நம்முன் நின்றபோது என்ன செய்வது என்றே தெரியவில்லை.

இப்படி எத்தனையோ சோகக் கதைகள்.

தீபாவளிக்கும் பொங்கலுக்கும் ஆடை வழங்க அரசிடமிருந்து துணிகள் கிடைத்ததும் வழங்குவது கிடையாது. பல மாதங்கள் கோடவுனில் வைத்துப் பின்பு தருவதால், கிடைப்பது எதற்குமே பயன்படாத செல்லரித்துப்போன ஆடைகள்தான்! கோடவுனில் வைத்திருக்கும் நேரத்தில் சரியாக பராமரிக்க வேண்டாமா? யாராவது வினா எழுப்பினால் அவருக்கு அடுத்த வார ரேஷன் அதோகதி!

பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை செலவுக்கு நபர் ஒன்றிற்கு ரூ55 தருகிறார்கள். 12 வயதுக்குக் கீழே உள்ளவர்களுக்குக் குறைவான பணம் தரப்படுகிறது. 'ஆனால் பல குடும்பங்களில் 15 முதல் 20 வயது அனவர்களுக்குக் கூட குழந்தைகளுக்கான பணமே தரப்படுவதாகப்பலர் சொன்னார்கள். இலங்கையில் இருந்து இந்தியா வரும்போது பாஸ்போர்ட்டில் என்ன வயது குறிக்கப்பட்டிருக்கிறதோ அதைத்தான் ஐந்து ஆண்டானாலும் வயதாகக் கணக்கில் கொள்வதால் ஏற்படும் பிரச்னை இது!

அரசின் நிர்வாகம் தான் இப்படி இருக்கிறது என்றால் பல சமூக அமைப்புகளும் அலட்சிய நோக்குடன்தான் செயல்பட்டு வருவதாகத் தோன்றுகிறது. மண்டப முகாமில் பத்துக்கும் மேற்பட்ட சமூக அமைப்புகள் உள்ளன. அமெரிக்காவிலிருந்து பல்லாயிரக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள குழந்தை சத்துணவான மாவு வந்திருக்கிறது. பல மாதங்கள் வரை திண்டப்படாமலேயே இருந்ததால் செட்டுவிட்டிருக்கிறது. குழி வெட்டி, செட்டுப் போன மாவைக் கொட்டியிருக்கிறார்கள்.

சீர் செட்டு வந்தவர்களை வெண் சாமரம் வீசி வரவேற்க வேண்டாம். மழைக்கு ஒழுகாத — மறைப்புகள் கொண்ட வீடுகளையாவது அளிக்கலாமே. பிரிட்டிஷ்காரன் காலத்தில் வெள்ளையடித்தது. சிமை ஓடு வேய்ந்த வீடுகள். இன்று கல்லறைகளாகிச் சரித்திரம் படைத்துக் கொண்டு இருக்கின்றன. இதைச் சீர் செய்ய வேண்டாமா? இந்தக் கேள்வியைத்தான் எல்லோரும் அதிகாரிகள்உட்படக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சீர்படத்தான் காணோம். பூனைக்கு மணியை யார் கட்டுவது என்பதுதான் பிரச்னை.

இவ்வளவு பிரச்னைகளுக்கிடையேயும் 1700 நபர்கள் இங்கே வாசம் செய்கிறார்கள என்றால் அது இராமகிருஷ்ண மிஷன் ஆஸ்ரமப் பணியிருல் தான். நாம் சந்தித்த ஒவ்வொரு நபரும் மறக்காமல் இதனைக் குறிப்பிட வேண்டும் என்று உத்தரவே இட்டார்கள்.

காலையில் குழந்தைகளுக்கு வயிறார பாலும் பெரியோர்களுக்கு உணவும் நித்தமும் வழங்கி வருகிறது. மருத்துவ உதவியினையும் அளித்து வருகிறது. உடைகளையும் இலவசமாக வழங்கிவருவதோடு பெண்களுக்கு இலவசமாகத் தையற் பயிற்சியையும் அளித்து வருகிறது.

ஆஸ்ரமத்தின் நிர்வாகி திருமதி பார்வதியைச் சந்தித்தபோது:

''நாங்க இங்க இருக்கற சுமார் 400 குழந்தைகளுக்குத் தனியா பள்ளி நடத்திவரோம். கல்வி அமைச்சர் கிட்ட பலமுறை பேசி இந்தக் குழந்தைகளுக்கு இலவசமா பாடப் புத்தகம் வழங்கச் சொல்லிக் கேட்டோம். முதல்வர் எம். ஜி. ஆரும். அரை மணி நேரத்துல அதற்கான ஆணையையே போட்டு என்னிடம் கொடுத்தார். பல மாதங்கள் ஆகியும் புத்தகங்கள் வழங்கப் பெறவில்லை. இதுதான் நம்ம நிர்வாகம்!

''சோம்பேறியா வைத்து ஏன் சோறு போடறீங்க. எல்லோருமே நல்ல உழைப்பாளி. கஷ்டப்பட்டுச் சாப்பிடத் தயாராய் இருக்கிறார்கள். சுயமாய்ச் சம்பாதித்துச் சாப்பிடத் தயாராய் உள்ளவங்களை இழுத்து வைச்சு பல கட்டுப்பாடுகளைப் போட்டு அரிசியும் பணமும் தர்றது எந்த விதத்தில் சேர்த்தி?

''எங்களுக்குக் கிடைக்கிற பணமெல்லாம் 'இந்தியன் எக்ஸ்பிரஸி'ன் நிவாரண நிதி தான். அதனால மார்ச் 85 முடிந்தவுடனே இங்கே நாங்களும் எங்களின் பணிகளை நிறுத்தப் போறோம். மனசுக்குக் கஷ்டமாகத் தான் இருக்கிறது. கடவுளின் சித்தம் எப்படியோ யாருக்குத் தெரியும்?'' என்று பார்வதியம்மாள் கூறி முடித்தபோது வேதனையாகத்தான் இருந்தது.

சரைசேர, தண்ணீரில் மிதந்து வந்தவர்களைக் கண்ணீரில் மிதக்க வைத்திருக்கிறோம். தமிழ் — தமிழன் என்று வாய் கிழியப் பேசுகிறார்கள். ஆனால் இதுவரை எத்தனை தலைவர்கள் மண்டபம் முகாமிற்கு வந்திருப்பார்கள்?

அரசியல்வாதிகளின் போக்கைத் தெளிவாகக் கண்ட அதிகாரிகளும் அவர்களுக்கு நாங்கள் சளைத்தவர்கள் அல்ல என்று நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஐயோ பாவம் தமிழர்கள என்று உச்சுக் கொட்டினாலே போதுமென்று நம்மவர்கள் நினைக்கும்வரை, பாவங்களின் ஆட்சிதான் பத்திரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும்.

—ராஜேன்

படங்கள்: **சிவகுரு-பொன்னையன்**

''வரதட்சணை இல்லாம கல்யாணம் செய்துக்கப் போறேன்னியே, என்ன ஆச்சு ?''

'' ஒரே பெண்ணுள்ள பணக்கார இடமா கிடைக்கலியே, என்ன செய்யறது...''

—வி. பி. ஸ்ரீதர்



# உங்கள் குழந்தையின் எடை அவனது வயதிற்கேற்றதாக இருக்கிறதா?




அவன் சரியான அளவு தூக்கம் பெறுகிறனா?
அவனுக்கு முதல் பல் எப்போது முளைக்கும்?
அவனுக்குத் தேவையான ஊட்டம் முழுதும் நான் அளிக்கிறேனா?''
அவன் நிலையாக எப்போது உட்காருவான், பிடித்துக்கொள்ளாமல் எப்போது நிற்பான்?

ஒரு ''புதிய தாயின்'' மனதில் தோன்றும் இதுபோன்ற பற்பல கேள்விகளுக்கும் பதில் கிடைக்கிறது கைக்கடக்கமான ஒரு புத்தகத்தில். அதுதான் ''**குழந்தையின் முதலாண்டுப் புத்தகம்.**'' உங்களுக்காகவே புதிய ஃபாரெக்ஸ் வழங்கும் இலவச அன்பளிப்பு.

''**குழந்தையின் முதலாண்டுப் புத்தகம்,**'' குழந்தை பராமரிப்பு பற்றிய மிக உபயோகமுள்ள ஏராளமான குறிப்புகள் அடங்கியதாகும். உங்கள் குழந்தையின் உணவு நேரத்தை ஆனந்தகரமாக்க இதில் விசேஷமாக தொகுக்கப்பட்ட 23 சுவை மிக்க ஃபாரெக்ஸ் உணவுக் குறிப்புகளைக் காண்பீர்.

இன்றே உங்களது பிரதிக்கு எழுதவும்.

புதிய

## பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு

உடல் நலத்தின் உறைவிடம்—**க்ளாக்ஸோ**

இக்கூப்பனை அனுப்பவேண்டிய முகவரி:
க்ளாக்ஸோ லாபரடரீஸ் (இந்தியா) லிமிடெட், தபால் பெட்டி எண் 19119 **(FCM-19)**
பம்பாய் 400 025.

Glaxo Laboratories (India) Limited, P.O.Box 19119 **(FCM-19)**, Bombay 400 025.

தயவுசெய்து எனக்கு ''குழந்தையின் முதலாண்டுப் புத்தகம்'' ஒரு பிரதி அனுப்பி வைக்கவும். தபால் மற்றும் இதர செலவுகளுக்கு இத்துடன் ரூ. 1/-க்கான தபால்தலை இணைத்துள்ளேன்.

பெயர் ____________________

முகவரி ____________________

____________________

CLARION/B/GX/7/203 TAM

# கல்லூரி அல்ல, கோயில்!

**கோ**யமுத்தூருக்கு ஒருமுறை போய் வந்தால் யாருக்குமே ஐந்து முதல் பத்து வரை வயது குறைந்து போன மாதிரி ஓர் உற்சாகம் ஏற்படும். அந்த அளவுக்கு அங்கே உழைப்பார்வமும் சாதனைத் திறனும் காணக் கிடக்கின்றன.

''தண்ணீர் மட்டும் தாராளமாக இருந்து விட்டால்...?'' என்று ஒருவர் ஆரம்பித்த போது நண்பர் இடைமறித்தார்:

''தண்ணீர் பற்றாக்குறை இருப்பதாலேயே இத்தனை சுறுசுறுப்பாக இருக்கிறார்களோ என்னவோ!'' என்றார்.

கடவுள் எல்லாவற்றையும் எல்லோருக்கும் வழங்கி விடுவதில்லை. ஓரிரு குறைகளை வைத்து விடுகிறார். அதுவே ஒரு சவாலாக அமைந்து சாதனைத் திறனை வளர்க்கிறது.

தண்ணீரில்லாக் காட்டிலே பயிர் செய்தவர் திரு. பி. எஸ். கோவிந்தசாமி நாயுடு. வெற்றிக்கு அரும்பாடு பட்டு செல்வம் சேர்த்தார். நான்கு பிள்ளைகளையும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளச் சொன்னார்.

மூத்தவர் பி. எஸ். ஜி. வேங்கடசாமி நாயுடு கபிலை இறைக்கும் போதே ஒரு காரியம் செய்வார். மாடுகள் முன்னேறி நிற்கிற எல்லையில் கம்பராமாயணப் பத்தகத்தை ஒரு மேடைமேல் பிரித்து வைத்திருப்பார். அதில் ஒரு வரியைப் படித்துவிட்டு மாட்டைப் பின்னுக்குக் கொண்டு சென்று மறுபடி முன்னேறி சாலில் நீர் இறைக்கும் வரை அந்த வரியை மனனம் செய்வார். இப்படியே கம்பராமாயணத்தைக் கரைத்துக் குடித்த அவருக்குக் குகனையும் சேர்த்து, ''இனி நாம் ஐவர் உளர் ஆனோம்'' என்று ராமன் கூறியது மனத்தைத் தொட்டது.

ஐந்தாவது சகோதரனாகத் தர்மத்தை ஏற்றுக் கொள்ளத் தீர்மானித்துத் தம்பிமார்களிடம் சம்மதம் பெற்றார். தகப்பனார் பி. எஸ். கோவிந்தசாமி நாயுடு சேர்த்த சொத்து நான்கு பாகங்களாகப் பிரியாமல் ஐந்தாகியது. தர்மத்தின் பங்கை நிர்வகித்தவர் இரண்டாவது மகன் பி. எஸ். ஜி. ரங்கசாமி நாயுடு. இதைக் கொண்டு அவர் ஒரு தொழில் நுட்பக் கூடம் தொடங்கினார். பலருக்குத் தொழில் கற்றுத் தந்த அதே நேரத்தில் தர்மச் சொத்து பன்மடங்காகப் பெருக வழியும் வகுத்தார். இன்று அது பல்வேறு பள்ளிகளாகவும், கலைக்கல்லூரிகளாகவும், பொறி இயல் கல்லூரிகளாகவும் விரிவடைந்துள்ளது. ரங்கசாமி நாயுடுவுக்குப் பிறகு அந்த அறக்கட்டளையைப் பராமரிக்கும் பொறுப்பு அவரது மகன் ஜி. ஆர். கோவிந்தராஜுலுவைச் சேர்ந்தது.

''பி. எஸ். ஜி. ஸன்ஸ் சாரிடீஸ்'' தொடங்கி விரிவடைந்த கதை இதுதான். இதற்கிடையில் தனிப்பட்ட முறையிலும் சகோதரர்களின் செல்வம் லக்ஷ்மி கடாட்சத்துடன் பல்கிப் பெருகி வந்திருக்கிறது.

திரு. ஜி. ஆர். கோவிந்தராஜுலு தமது முன்னோர்களைப் போலவே தர்ம சிந்தனை மிகுந்தவராகி தமது திரு. ஜருணி நீராகப் பலருக்கும் பயன்படக் கருதி ''ஜி. ஆர். ஜி. அண்டு ஸன்ஸ் சாரிடீஸ்'' என்ற மற்றொரு அறக்கட்டளை தொடங்கினார். இந்த தர்ம ஸ்தாபனமும் பல்கிப் பெருகி விரிவடைந்து கிருஷ்ணம்மாள் பெண்கள் கல்லூரியாகவும் பள்ளிக்கூடங்களாகவும் ஹாஸ்டலாகவும் பெண் குலத்துக்கு அளப்பரிய சேவை செய்து வருகிறது. சுமார் எட்டாயிரத்து ஐந்நூறு மாணவ மாணவியர் இந்த இரு அறக்கட்டளைகளாலும் பயனடைந்து வருகின்றனர்.


கிருஷ்ணம்மாள் கல்லூரியின் ஸ்தாபகர் தினத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பு அண்மையில் கிட்டியது. அந்தக் கல்லூரிக்குள்

○ என். ஸி. ஸி. அணிவகுப்பு



○ திருமதி. சந்திரகாந்தி





சீருடையில் சீரான உடற்பயிற்சி



திரு. ஜி. ஆர். கோவிந்தராஜுலு

நுழைந்ததுமே நம்மைக் கவர்கின்ற விஷயங்கள் இரண்டு. ஒன்று அதன் விசாலமான சூழலும் நெடிதுயர்ந்து நிற்கும் கனமான கட்டிடங்களும். மற்றது திரும்பின பக்கமெல்லாம் காணப்படும் பரிசுத்தம். இன்றுதான் கட்டிமுடித்தார்களோ என்று நினைக்கும்படி இருக்கிறதே என்று எண்ணி முடிப்பதற்குள் அங்கே ஒருவர் வராந்தா சுவரின் அடிவாரக் கால் அங்குல விளிம்பில் படிந்திருக்கக் கூடிய அசிங்கை ஈரத்துணியால் துடைத்துக் கொண்டிருப்பதைக் கண்டு பிரமித்துப் போனேன். சுத்தமாய் இருப்பதில் அதிசயமில்லை என்பது எங்களை உடன் அழைத்துப் போய்ச் சுற்றிக் காட்டிய திருமதி சந்திரகாந்தி கோவிந்தராஜுலு செய்த காரியத்தி லிருந்து புரிந்தது. இருபது லட்சம் செலவில் கட்டி முடிக்கப்படும் தறுவாயில் உள்ள ஹாஸ்டல் கட்டிடத்தில் தச்சு வேலை நடப்பது காரணமாக இறைந்து கிடந்த சில கூளங்களைத் தாமே பொறுக்க ஆரம்பித்தார். உடனே ஆசாரிகளும், உதவியாளரும் ஓடோடி வந்து அத்தனையையும் திரட்டி எடுத்தனர்.

திருமதி சந்திரகாந்தி தமது கணவர் திரு. கோவிந்தராஜுலுவுடன் சேர்ந்து "ஜி. ஆர். ஜி. அண்டு ஸன்ஸ் அறக்கட்டளை"யின் ஸ்தாபக அறங்காவலராக மட்டுமின்றி கிருஷ்ணம்மாள் கல்லூரியின் "சூப்பரின்டென்டெண்ட்" டாகவும் இருக்கிறார். அவரது திறமையாலும் மேற்பார்வையாலும் தான் கல்வி நிலையங்கள் இவ்வளவு வளர்ச்சியும் பெருமையும் அடைந்துள்ளன என்று சொன்னால் உபசாரமாகத் தோன்றலாம்.

ஆனால் ஸ்தாபகர் தினத்தில் பேசிய ஒவ்வொருவருமே இதைக் குறிப்பிட்டார்கள் என்பதால் மிகையில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடியும். அதிலும் திரு கிருஷ்ணராஜ் வாணவராயர், "கோவை மாநகராட்சி தேர்தல் நடந்து சபை அமையுமானால் முதல் மேயராக திருமதி சந்திரகாந்தி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்" என்று கூறிய போது விண்ணளாவிய கரவொலி எழுப்பி ஆமோதித்தனர், அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான கோவை நகரப் பிரமுகர்களும், பெருமக்களும்.

குடிநீருக்காகவே ஒருநாளைக்கு நூறு ரூபாய் செலவழிக்க வேண்டிய நிர்ப்பந்த நிலையில் நிர்வாகம் இருந்த போதிலும், சற்றும் மனம் தளராமல் வெற்றிகரமாகக் கல்லூரிகளை நடத்துவது என்பது இலேசுப்பட்ட காரியமா? நடத்திக் கொண்டு போவது மட்டுமல்ல, பிள்ளைகள் படிப்பிலும் விளையாட்டிலும் ஒழுக்கத்திலும் சம அளவில் சிறந்தோங்குமாறும் செய்கின்றார்கள். "மனப்பூர்வமான முழு ஈடுபாட்டுடன் பணியாற்றும் முதல்வரும் மற்ற ஆசிரியைகளும் கிடைத்திருப்பது என் பாக்கியம்" என்கிறார் சந்திரகாந்தி. அவர்களோ, "எங்களை வழி நடத்திச் செல்லச் சந்திரகாந்தி கிடைத்திருப்பது எங்கள் அதிர்ஷ்டம்" என்கின்றனர்.

மாணவிகளோ என்றால் பள்ளி நிர்வாகமே வழங்கும் சீருடை தரித்து, இளைஞர் ஆண்டை வரவேற்கும் இளநகையுடனும், தன்னம்பிக்கையுடனும் காணப்படுகின்றனர். தேவைப்பட்டவர்களுக்கெல்லாம் பாட நூல்கள் இலவசம். தகுதி உள்ளோருக்கெல்லாம் உபகாரச் சம்பளம். பள்ளி மாணவிகளுக்கு நிஜமான சத்துணவு. கல்வியிலும், விளையாட்டிலும் என். ஸி. ஸி. போன்ற மற்ற அம்சங்களிலும் சிறந்து, கல்லூரி அளவில் மட்டுமின்றி தேசிய அளவிலும் பரிசுகள், உபகாரச் சம்பளங்கள் முதலியன பெற்றுச் சிறக்கிறார்கள்.

விழாவுக்குத் தலைமை தாங்கிய டி.ஐ.ஜி. துரைராஜ், "இந்த மாணவிகளின் அணி வகுப்பையும், *Mass Drill* ஐயும் பார்த்துப் பிரமித்துப் போனேன். போலீஸ் இலாகாவில் கூட இந்த அளவுக்கு "டிஸிப்ளி"னும் ஆற்றலும் உண்டா என்று சந்தேகிக்கிறேன்" என்றார். இந்தச் சான்றிதழுக்கு மேலாக யார் என்ன சொல்லி அந்த மாணவிகளை வாழ்த்திவிட முடியும்!

திரு. கோவிந்தராஜுலு, திருமதி சந்திரகாந்தி, தம்பதியின் விருந்தோம்பல் அவர்களது குடும்ப நண்பர்கள் நன்கு அறிந்ததே. அவர்கள் வீட்டு இட்டிலி புஷ்பம் போல்

கி. ராஜேந்திரன்

மென்மையானது எனில் அந்த மலரை விட மென்மையான உள்ளமும் வார்த்தையும் உடையவர் திருமதி சந்திரகாந்தி. மலர்களின் தொடுப்பாக மிருதுவான பேச்சு. எதைச் சொல்லுங்கள். ."சரிங்க," "சரிங்க" தான். மேடை ஏறினால் மலர்களின் மணமும் நிறமும்போல் அழகாகவும், அர்த்தமுள்ளதாகவும் உரையாற்றுவார். அப்படிப்பட்ட மிருதுவான உள்ளம் அன்று வரவேற்புரையில் ***Self Financing Educational institutions*** எனப்படுகிற கேலிக்கூத்தை ஒரு சாடு சாடியது பாருங்கள்! அதைக் கேட்டு அந்தச் சுய முதலீட்டுநிதிக் கல்வி நிறுவனங்கள் மட்டுமின்றி அவற்றைப் புதிதாகத் தொடங்கி வைத்துள்ள தமிழக அரசும் முகம் மறைய முட்டாக்குப் போட்டுக் கொள்ள வேண்டியதுதான்! 'அடேயப்பா! இத்தனை மென்மையான தோற்றத்துக்கும் குரலுக்கும் பின்னால் இத்தனை உறுதியான, வீரமான நெஞ்சமா!' என்று பிரமித்துப் போனேன். இவ்வளவு பெரிய பொறுப்புக்களை ஏற்று இத்தனை மாபெரும் நிறுவனங்களை நிர்வகிப்பதென்றால் கருணையுடன் கண்டிப்பும் தேவைதான் என்பதைப் புரிந்து கொண்டேன்.

சந்திரகாந்தியின் மருமகள்களான கருணா, நந்தினி ஆகியோர் அறப்பணிகளில் அவருக்கு உதவி வருவதுடன் வாழையடி வாழையாக அறம் தொடரத் தங்களைத் தகுதி உடையவர்களாக்கிக் கொண்டு வருகின்றனர்.

"கல்வி,—அன்பு -சேவை" என்ற கல்லூரியின் பொன்மொழி ஜி. ஆர். ஜி. குடும்பத்தை வழிநடத்தும் வாசகமாகவும் அமைந்திருக்கிறது.

ஜேசுதாஸின் கணீரென்ற குரல் திக்கெட்டும் பரவ, அவரது இசை விருந்தினரைவின் வெளிக்கே உயர்த்த, இனிது நிறைவெய்தியது கிருஷ்ணம்மாள் கல்லூரியின் ஸ்தாபகர் தின விழா. பாடத் தொடங்குமுன் ஜேசுதாஸ் ரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிட்டது போல:

"இது கலைக் கல்லூரி அல்ல; கலைக் கோவில்!"

---

அமெரிக்காவின் புகழ்பெற்ற ஜனாதிபதியான 'கால்வின் கூலிட்ஜ்'ஜை ஒரு நிருபர் பேட்டி கண்டபோது நடந்த விவாதம் இது :

நிருபர் : "உலக 'கோர்ட்' பற்றி உங்களது அபிப்பிராயத்தைக் கூற முடியுமா ?"

ஜனாதிபதி : "இல்லை !"

நிருபர் : " மதுவிலக்கு பற்றி ஏதாவது கூற விரும்புகிறீர்களா ?"

ஜனாதிபதி : "இல்லை !"

நிருபர் : "அடுத்த 'செனட்' தேர்தல் பற்றி ஏதும்...?"

ஜனாதிபதி : "இல்லை !"

ஜனாதிபதியிடமிருந்து 'அவல்' எதுவும் கிடைக்காமல், ஏமாற்றத்துடன் திரும்பிய நிருபரைக் கூப்பிட்டு அதிபர் சொன்னார் : " நான் சொன்ன கருத்துக்களையெல்லாம் பத்திரிகையில் வெளியிட்டுவிடாதீர்கள் !"

தகவல் : "சம்பத்குமாரி"

ஆதாரம் : "ஸொஸைட்டி."



---



"நீரில் நடப்பது பெரிதல்ல; சருகும் அவ்வாறு செல்லும். வானில் பறப்பது பெரிதல்ல; கொசுவும் அவ்வாறு பறக்கும். மண்ணில் மனிதனாக நடப்பதே கடினமானது."

• அறிஞர் சூஃபி அப்துல்லா அன்சாரி

**—தகவல்: சிவகங்கை அ.ரமணி**

" நேற்று செயற்குழு கூட்டத்திலே கட்சிக்குவிரோதமாபேசினீங்களாம்மே?"

" இல்லையே...! எல்லாரும் ஆக்கபூர்வமா வேலை செய்யணும்னுதானே சொன்னேன் !"

—ஜெயந்தி



# மங்கையர் மலர்

## ஐந்தாம் ஆண்டு சிறப்பு மலர்

★ சமையல் 'காஸ்' என்ன
குதிரைக் கொம்பா?

★ ரூ. 2000/- மதிப்புள்ள
வெள்ளிப்பாத்திரம்-
பரிசு பெறும் கட்டுரைகள்

★ 'டேம்ப்பன்'களைப் பற்றிய சில உண்மைகள்

★ 'டயட்'டில் இருந்தும் வயிறு குறையலியே!

★ மதுவை மறக்கப் புதிய சிகிச்சை


\+

பொக்கிஷம் போன்ற இலவச இணைப்பு

கால் + கை வலிப்பு
நரம்பியல் நிபுணர் டாக்டர் பி. ராமமூர்த்தி

அதிக பக்கங்கள்! மற்றும் ஏராளமான சிறப்பம்சங்கள்!!

※ பிப்ரவரி '85 இதழ் மட்டும் விலை ரூ. 3/-


எம்.பி- எம்.எல்.ஏ.க்களை
வாங்க- விற்க
சில்லறை + மொத்த வியாபாரம்
கட்சித் தாவல் தடுப்பு மசோதா வந்த பிறகு சில்லறை வியாபாரத்திலிருந்து மொத்த வியாபாரத்துக்குத் தாவலாம்னு...
பாதுகாப்பு இலாகா
நீதி இலாகா
தேசத் துரோகம்
பிரதமர் அலுவலகம்
பிப்ரவரி 4ந் தேதி



கல்கி

1985 பிப்ரவரி 3
மலர் : 43 இதழ் : 27
ரக்தாக்ஷி தை 21



# தேசத் துரோகிகள் தண்டனை பெறட்டும்!

நூல்களில் படிப்பதை விட ஆச்சர்யமாக இருக்கிறது. ஒரு பெரிய ஒற்றர் பட்டாளமே தலைநகரில் நீண்ட காலமாக இயங்கி வந்திருக்கிறது. அந்த அயல் நாட்டு ஒற்றர்களின் ஆசை காட்டலில் ஏராளமாகப் பணம் கைமாறியதில் நம்மவர் பலர் தேசத் துரோகிகளாகி, ராணுவ மற்றும் தேசிய ரகசியங்கள் பலவற்றை அவர்களுக்கு அம்பலப்படுத்தி வந்துள்ளனர்.

பிரதமர் ராஜீவ்காந்தி விஷயம் தெரிய வந்ததுமே கடுமையான நடவடிக்கை எடுத்ததோடு நில்லாமல் உடனடியாக நாடாளுமன்றத்திலும் அளவான அறிக்கை வெளியிட்டுக் கௌரவமாக நடந்து கொண்டிருக்கிறார்.

தேர்தலுக்கு முன்பே இந்த விஷயம் பிரதமருக்குத் தெரியும் என்றும், தேர்தலை முன்னிட்டு வேண்டுமென்றே காலதாமதம் செய்யப்பட்டது என்றும் திரு சரண்சிங் குற்றம் சாட்டியுள்ளதை ஒப்புக் கொள்வது கடினமாயிருக்கிறது. இந்த நடவடிக்கையைத் தேர்தலுக்கு முன் எடுத்திருந்தால் ராஜீவின் பெருமை முன்னெப்போதையும் விட உயர்ந்திருக்குமேயன்றி லவலேசமும் மக்கள் மத்தியில் குறைந்து விட்டிருக்காது. தாமதங்கள் இருந்திருக்கலாம், தவறுகள் சில நடந்திருக்கலாம். ஆனால் ராஜீவின் அல்லது அவரது அன்னையின் தேசபக்தியையே சந்தேகிப்பதுபோல் பேசுவது அழகல்ல.

ஒற்றர் பட்டாளமும் உளவாளிகள் கூட்டமும் கைதானதன் உடன் விளைவாகப் பிரதம மந்திரி காரியாலயத்தில் அவரது நன்மதிப்புக்கு உரியவரும் மகா திறமைசாலியுமான திரு. அலெக்ஸாந்தர் தார்மீகப் பொறுப்பேற்று ராஜினாமா செய்ய நேர்ந்தது கண்களைப் பனிக்கச் செய்வதாகும்.

பிரதமராகப் பதவி ஏற்ற நாள் முதலே சுறுசுறுப்புடன் இயங்கிவரும் ராஜீவ் இந்த வேவுக் கும்பலைச் சுற்றி வளைப்பதிலும் அசாதாரணத் திறமை காட்டியிருக்கிறார். இவர்களில் யாரையுமே தப்பவிடமாட்டார் என்றும், தேசத்துரோகம் கடுமையான தண்டனைக்கு உள்ளாகும் என்றும் நம்புவோம். அதோடு ராணுவ ரகசியங்களையும் இதர ரகசியக் கோப்புக்களையும் உளவாளிகளிடமிருந்து எதிர்காலத்தில் காக்கத் திறமையான நடவடிக்கையும் எடுக்கப்படல் வேண்டும்.

இந்த நாளில் ராணுவ பலத்தை ஒற்றர்கள் மூலம்தான் அறிய வேண்டுமென்பதில்லை. விண்வெளியில் ஒற்றுவேலை செய்வதற்கென்றே அனுப்பப்படும் கோள்கள் பல தகவல்களை எதிரிகளுக்கு அல்லது எதிரிகளின் நண்பர்களுக்கு அறிவித்துவிடும்.

எனவே பாதுகாப்பைப் பலப்படுத்துதல், உளவாளிகளுக்கு இடம் கொடாது இருத்தல் என்பனவற்றோடு அண்டை நாடுகளுடன் நட்புறவை வளர்த்துக் கொள்வதிலும் பிரதமர் ஆர்வம் காட்டவேண்டும். இந்திராகாந்தி மறைந்த சமயம் ராஜீவ் ஜியாவுடன் நடத்திய சில நிமிட நேரப் பேச்சு வார்த்தை அடுத்து ஒரு கட்டத்தில் சில பல தினங்களுக்குத் தொடரப்பட வேண்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்



⌘ பாரபட்சமான தணிக்கை முறையைச் சாடுகிறார் அமோல் பலேகர்

இனிய வாசகர்களுக்கு,
சென்னையிலிருந்து ஜெயமன்மதன்!

இந்த வார்த்தையை நீங்கள் வாசிக்கும் போது திரைவிழா வந்தனம் என்று கைகூப்பிவிட்டது. காட்டிய படங்கள் கப்பல் ஏறிவிட்டன. பரிசு வாங்கிய பிற தேச ஆசாமிகள் தங்க மயில் களையும், வெள்ளி மயில்களையும் கஸ்டம்ஸ் காரர்களிடம் காட்டிவிட்டுப் பெட்டியோடு, சொந்த ஊரில் கனவுக்கடை பரப்ப விமானம் ஏறியிருப்பார்கள். மேடை அறிவிப்பாளர்கள் பாட்டைக் கழற்றிவிட்டுப் பெருமூச்சு விட்டிருப்பார்கள்.

நிற்க.

விக்ரான் பவன் வாசல். கூடைக் கிழவன். உரிபடாத வேர்க்கடலைகள். ஒரு ரூபாய்க்கு வாங்கி ஒவ்வொன்றாய் மூக்கு உடைத்து வாயில் போட்டால் பத்தில் நாலு சொத்தை. அதே கதை தான் பார்த்த படங்களும்.

நாளைக்கு ஆறுபடம். காலையில் உருப்படியான படம் எனில், மாலையில் திரை அகலத்திற்கு ரம்பம். முதலில் மனத்தில் நிற்கும் படங்கள்:

*Why was I born (China)*

புரட்சித் தலைவரின் தலைப்பு. ஆயினும் கொள்கை விளக்கமற்ற படம்.

ஒரு சின்னப்பையனும், கூடப் படிக்கும் இரட்டைப் பிள்ளையும்.

பையன் அப்பாவுடன் இருப்பவன். அம்மாவைக் கோர்ட் மூலம் பிரிந்தவன். அப்பா புகைக்கும் இன்ஜினை அநாயாசமாகக் கையாண்டு, சின்னப்பையனை ஆளத்தெரியாமல் தவிப்பவர். இரண்டாம் கல்யாணத்திற்காக ஏங்குபவர். புரிந்த பையனின் கேள்வி. 'புது அம்மா வந்தா, என்னை வெளியே விரட்டிடுவியா அப்பா?'

அப்பாவுக்குத் தெரியாமல் அம்மாவைப் பார்க்கப் போகும் நாளெல்லாம் அப்பா விடம் அடி, உதை.

கடைசியில் ஒரு மழைநாளில் புரிகிறது. அம்மாவும் இப்போது தனியாய் இல்லை என்று. அவளுக்குத் துணையாய் இன்னொரு மனிதர். அன்புக்கு இன்னொரு பையன்.

அப்பாவுக்கும் வேண்டப்படாத—
அம்மாவும் கவலைப்படாத—நான், ஏன் பிறந்தேன்?

குழந்தைகள் சைக்காலஜியை நரம்பு பிடித்து உணர்த்தும் படம். காட்சிகளின் சோகம் இன்னும் வெகுநாட்களுக்கு



⌘ ஆயிரம் வயலின்களின் சோக நாதம் ஏன்? எதற்காக?

மனத்தில் கனக்கும்.
ஜெ. ம. *Comments. Very good*

*Parahyba Woman*

பிரேசில் படம் என்றாலே கூட்டம் நிறைப்பாகிறது. சுலபமாய் உடைகள் களையப்படும் சாத்தியங்கள் அதிகம்.

1920–1930. பரைபா நாட்டை கர்னல்கள் ஆண்ட காலம். புரட்சி வெடிக்கத் தயாரான தருணம். இது பின்னணி.

பட்டம் பெற்ற இளம் பெண் ஒருத்தி. கவிதை, கதைகள் புனையும் திறமைசாலி. அவளைக் காதலிக்கும் வக்கீல்—கம்—பத்திரிகையாளன்.

டைரக்டர் காதலையும், புரட்சியையும் மாற்றி மாற்றிக் காண்பித்துக் குழப்பாமல் இரட்டைப் பாதை போட்டிருக்கிறார்.

படத்தில் முதல் பாதியில் இன்திரி

# கூவம் நதிக்கரைதனிலே தொஞ்சு

பெட்டியை விடச் சூடான காட்சிகள். கடைசி நிமிடங்களில் கவிதை, புரட்சி! விஷயம் தெரிந்து டிக்கெட் வாங்கியவர்கள் மட்டும் பாதிப் படத்தில் எழுந்து வந்து விடுவார்கள்.

ஜெ. ம. கமெண்ட்ஸ்: O.K.

**ஒரு சின்ன இன்டர்வெல்:**

நம்மூர் டீக்கடை மாதிரி மூலைக்கு மூலை புதுதில்லியில் ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள். கேக்கை வெட்டி வைத்த மாதிரி அழகாய் கட்டிடங்கள். நுழைந்ததும் கார் சாவியைப் பிடுங்கிக் கொண்டு காரைப் பார்க்கிங்கிற்கு ஓட்டிச் செல்லச் சீருடை டிரைவர்கள்.



✱ இந்திய வாடை தோய்ந்த படம்: காதலின் விலை

அப்படிப்பட்ட ஒரு 5★ மௌர்யா ஷெரட்டானின் பரந்த திறந்த வெளியில் பத்திரிகையாளர்களுக்காக ஒரு விருந்து. அச்சடித்த அழைப்பிதழ்களை வாங்கிக் கொண்டு உள்ளே விட்டார்கள். சின்னச் சின்னத் துணிக்கொட்டகைகள். தொப்பி சமையற்காரர்கள் சூடாய் பூரி பொரித்தார்கள், சப்பாத்தி சுட்டார்கள். ஜாங்கிரி பிழிந்தார்கள். பஃபே என்று அழைக்கப்பெறும் கையேந்தி சிஸ்டம். சைவம் மட்டும் என்று போனால் கால்வயிறு நிரம்பாது.

வெளிநாட்டுக்காரர்களுக்காக ஒட்டுப் போட்ட ஜிகினாத்துணிகளுடன் பொய்க்கால் குதிரை, வாயைக் கட்டிய கரடியை 'ஆடு ராமா ஆடுராமா' என்று அதட்டும் ஜிப்பா, பல்டியடித்துக் கழைக் கூத்தாடும் க்ரூப் — பார்த்த சில சினிமாக்களை விட சுவாரஸ்யமான பகல் நேரம் அன்று.

**மறுபடியும் விஞ்ஞான் பவன்**

# பனி மாலையிலே

# தில்லியில் திரைப்பட விழா

சூடேற்றிய ஹால். அடக்கமான வெளிச்சம்.

ரஷ்யாவிலிருந்து *Youth of a Genius*

கிழக்கு நாடுகளில் பிரசித்தமான விஞ்ஞான வைத்தியர் அவிசின்னாவின் இளமை வாழ்க்கை. டாக்குமெண்டரி மாதிரி ராகித் தள்ளாமல் விறுவிறுப்பாய்ப் போனது ஒரு ஆறுதல். இருதயத்தைப் பற்றியும், அதன் அமைப்பு பற்றியும் தெரியாத புராதன புக்காராவில் ஒரு விஞ்ஞானக் கூடம். ஒரு சவம். அதை அறுத்துப் பரிசோதிக்கும் ஸீனியர் டாக்டர், இருதயம் பற்றி அறிந்து கொள்ளும் துடிப்போடு பையனும் டாக்டருக்கு உதவி செய்ய, சட்டத்திற்குப் புறம்பான விஷயம் ஆதலால் மாட்டுகிறார்கள். ஸீனியருக்கு சிரச்சேதம். குட்டி அஸிஸ்டெண்டுக்கு வார்னிங். அறிவு தாகம் அவனை விடாமல் முடுக்க, எத்தனை இன்னல்களைத் தாண்டி அவன் அறிஞனாகிறான் என்பது படம்.

புக்காரா நகரம், அவனின் அந்தக பவனி, எல்லோரும் மனத்தில் ஊர்வலம் வருகிறார்கள். அதுவும் எதிரிகளிடமிருந்து தப்பி வந்து ஆற்றுக்கணக்கான அடி உயர மலைமுகட்டிலிருந்து குதிரையோடு தண்ணீரில் குதிக்கும் அந்தக் கடைசி ஸீன் அட்டகாசம்.

ஜெ. ம. Comments: Interesting



✱ புரிந்த நல்லவரின் நல்லபிள் ஒரு பார்

ஒரேயடியாய் வித்தியாசமான படங்களை எடுத்துத் தள்ளிவிடுகிறார்கள் அயல் தேசத்தார் என்று பெருமூச்சு விடாதீர்கள். ஜெயமன்மதன் தலையெழுத்து. அங்கே போனாலும் இந்திய

**ஜெயமன்மதன்**

வாடை தோய்ந்த படங்கள் சில எச்சரிக்காமல் இடறின.

*The Price of Love: (Greece)*

படத்தின் காலம் இந்த நூற்றாண்டின் துவக்கம்.

கையாலாகாத தகப்பன். எந்நேரமும் சாராய மடியில் உருளும் குணம். குடும்பத்தின் அச்சாணி அம்மாக்காரி. அவர்களுக்கு நான்கைந்து பெண்கள். மூத்த பெண் (அப்பா, என்ன அழகு) பொறுப்பாய் மூங்கில் தட்டுகள் பின்னித் தரும். இன்னொன்று தட்டு எடுத்து வைக்கும். அடுத்தது அப்பாவுக்குப் படுக்கை போடும். பருவக் குமரியான மூத்தவள் காதலில் சிக்கிச் சீரழிகிறாள். அவளைக் கவர்ந்தவன் அரசியலில் ஆதாயம் தேடும் கடத்தல் இளைஞன். அப்புறம்? டட்டய்ங்...! வரதட்சிணை கேட்கிறான். நிறைய வரதட்சிணை. அம்மாக்காரி என்ன சொல்கிறாள். இவனுக்கே நான் கொடுத்து விட்டால் அடுத்த பெண்களுக்கு என்ன செய்வது? என்று மறுக்கிறாள். சுவர் மாதிரி கொள்கைப் பிடிப்புடன் நிற்கிறாள், கர்ப்பமான பெண்ணை அந்த மிஸ்டர் மாப்பிள்ளை, 'நீயே வைத்துக் கொள் உன் பெண்ணை' என்று திருப்பியனுப்பும் வரை. அப்புறம் வாயில் அடித்து, வயிற்றில் அடித்துக் கொண்டு அம்மா பணம் தர ஒப்புகிறாள். அப்போது அந்தக் கர்ப்பப் பெண் 'ஐ ம் ஸாரி, இனிமேல் உன்னுடன் எவள் வாழ்வாள்? நீயும் ஒரு புருஷனா? கெட் அவுட்!' என்கிறது. முடிகிறது.

சில படுக்கை அந்தரங்கங்கள் படத்திற்குக் கூடுதல் கவர்ச்சி.

ஜெ. ம. Comments: O. K.

*When the Raven Flies*

பனி நகரிலிருந்து (Iceland) ஒரு படம். பிக்னிக் போன இடத்தில் கொள்ளையர் அம்மா அப்பாவைத் தீர்த்துக் கட்டுவதைச் சாட்சி பார்க்கும் சின்னப் பையன் ஓடிப்போய் வேறு இடத்தில் வளர்ந்து இருபது வருடம் கழித்துக் குதிரையில் ஒவ்வொருவராய்ப் பழி தீர்க்க வரும் 'ஸலீம்–ஜாவித்' டைப் கதை. கதையில்தான் இந்தியத்தனம். மற்றபடி படம் பண்ணியிருப்பவர்கள் இல்லாடிகள்.

என்ன இயற்கையான பிரதேசம்! உயர உயரமாய்ப் பாறைமலைகள். கடல் அலைகளின் நீலம். வெகு ஆரோக்யமான குதிரைகள். பவுடர் போடாத வில்லன்கள். நம்பும்படியான பாரபட்சமற்ற சண்டைக் காட்சிகள்.

காமிராவிற்குத் தனியாய் 'ஜே!'

ஜெ. ம. Comments: Enjoyable

**WARNING: DEADLY BORING MOVIES**

உஷார்! பின்னால் சொல்லப் போகும் படங்களில் ஏதாவது உங்கள் அபிமானத் தியேட்டர்களுக்குத் தவறிப் போய் வந்தால், தலை வைத்துக் கூடப் படுக்காதீர்கள். இது உங்கள் நலம் விரும்பும் ஜெயமன்மதனின் வேண்டுகோள்.

*L' Amour Amort (France)*

இறந்து போனவன் மறுபடி பிழைத்து மறுபடி இறந்து போகும் கதை. அவன் காதலியும் அவனைத் தேடி சுயமுடிவு தேடிக் கொள்ளும் க்ளைமாக்ஸ். இரண்டு நிமிஷத்திற்கு ஒரு முறை திரையில் வெறுமை. பின்னணியில் ஆயிரம் சோக வயலின்கள். இன்னும் இரண்டு நிமிடம் கழித்துப் பறக்கும் பஞ்சுக் குமிழ்கள். மறுபடி ஆயிரம் வயலின்களின் உச்ச சோக கீதம். ஏன்? எதற்காக இத்தனை முறை இந்த அர்த்தமில்லாத வெறுமை இடைக் காட்சிகள்? கடவுளுக்கு மட்டுமே தெரியும்.

கூந்தல் உள்ளவர்கள் படத்திற்குப் போனால் வழுக்கையாய்த் திரும்பி விடுவார்கள்.

*Vibrations (Bulgaria)*

ஒரு அணுசக்திக் கூடம். ரஷ்ய அமைச்சர் திறந்து வைக்க நாள் கொடுத்தாயிற்று. திடீரென்று ஒரு பகுதி இயந்திரத்தில் கோளாறு. அதைச் சரி செய்ய வேண்டும் என்கிறான் இளைஞனை தலைமை என்ஜினியர். மந்திரி வருகைக்குள் முடியாது. அவர் ரிப்பன் வெட்டிப் போன பிற்பாடு ரிப்பேர் செய்யலாம் என்கிறார்கள் மூத்த மானேஜர்கள். உடனே மாற்ற வேண்டும் என்று இளைஞன். விஞ்ஞானக் கூடம் — இவர்களில் சம்பாஷணைகள் — மந்திரியுடன் பேச்சுவார்த்தை — மறுபடி விஞ்ஞானக் கூடம் — இவர்களில் சம்பாஷணைகள் — மந்திரி...

அக்கிரமம்! கல்லூரி மாணவர்களுக்கான 'காண்போம், கற்போம்' பகுதிக்குக் கூட லாயக்கில்லை!

*Where the Green Ants Dream* (ஜெர்மனி)

ஆஸ்திரேலியா. யுரேனியம் தேடி மண்ணைத் தோண்டும் ஒரு பெரிய கம்பெனி. அசுர இயந்திரங்கள். திடீரென்று எல்லாம் ஸ்தம்பித்துப் போகிறது.

'பூமிக்குள் உறங்கும் பச்சை எறும்புகளை தொந்தரவு செய்தால் சாபம் சொல்லும், உலகம் அழிந்து போகும்' என்று காரியங்களை மறித்துக் கொண்டு, ஒரு பழங்குடி இனம். கம்பெனி கோர்ட்டில் கேஸ் போட்டு 'யார் ஜெயிக்கிறார்கள்?' என்ற மகாவறட்சியான கதையை, நூறு நிமிஷங்களும், உட்கார்ந்து பார்ப்பவர்கள் அனைவருக்கும் ஒவ்வொரு தங்க மயில் பரிசு தரலாம்.



பூஸ்ட் துள்ளித்திரியும் பள்ளிப் பருவத்திற்கு நாள்தோறும் ஈடுகொடுப்பது
உங்கள் மகன் அருந்தும் காலைக் கோப்பை பாலுடன் கலந்துக் கொடுங்கள் சக்தியளிக்கும் பூஸ்ட், நாள்தோறும், காலை தோறும்.
பிறகு பாருங்களேன்! நாள் முழுவதும் அவனே ஒரு அதிவேக ரயில் வண்டி தான்!
காலை ஸ்கூலில் ஆரம்பித்த நேரங்கள், தொடர்ந்து உருண்டு புரண்டு களித்திடும் கால் பந்தாட்டம், பிறகு முழு கவனத்துடன் முடிக்கப்படும் வீட்டுப்பாடங்கள் வரை ...
இதற்கென்றே பூஸ்டின் சக்தி.
உங்கள் மகன் துடிப்புடன், களிப்புடன் ஒவ்வொரு நாளையும் கழிக்க உதவுகிறது.
காலை முதல் இரவு வரை.
பூஸ்ட் புது ஆடைப்பால், பொன்னிற கோதுமை, மால்டெட் பார்லி மற்றும் சுவையான கோக்கோவை ஒருங்கே சேர்த்து, உங்கள் குழந்தைக்குதேவையான சக்தியளிக்கும் கார்போஹைட்ரேட்டுகளையும், திடமான உடற்கட்டிற்கு ப்ரோடீன்களையும் அளிக்கிறது.
Boost
துடிதுடிப்புடனும், ஊக்கத்துடனும் விளங்க சக்தியளிக்கும் எரிபொருள்.


8342



# மோகினித் திருக்கோலம்

## 16

### திருமலைப் பெருமாள் செழித்த விதம்

**கா**லையில் செஞ்சுகா கலக்கமான கண்களுடன் வர்மனிடம் விவாதித்துக் கொண்டிருந்தான்.

'' ஐயா ! நீங்கள் செய்தது தவறு. என்னைத் தப்புவித்திருக்கக் கூடாது. தாங்கள் எனக்குச் செய்தது உதவி அல்ல!'' என்று வருத்தமுடன் கூற,

வர்மன் ஸ்தம்பித்து நின்றான்.

'' தேவி ! தாங்களா இப்படிக் கூறுகிறீர்கள் ?'' என்றான்.

'' ஆமாம், வீரரே ! என்னை அபகரித்து விட்டது பெரிய வீரமா? நானேகூட இவர்களை ஏமாற்றி ஓடியிருக்கலாமே ! அப்புறம் என் தந்தை கொடுத்த வாக்கு என்னாவது ?'' என்றாள் செஞ்சுகா.

காலைப் பசும் வெய்யில் இளம் பொன் போல எங்கும் சிதற, அசப்பில் அவள் ஒரு பிரதிமம் போல விகசித்தாள். சுற்றிலும் மாமரச் சோலை மின்னும் இலைகளாக அடர்ந்திருந்தது. ஆர்க்காட்டுக்குக் கிழக்கே ஒரு காத தூரத்தில் செங்கிப் பாளையம் என்ற சிற்றூரில் அவர்கள் இருந்தார்கள்.

அங்கேதான் இரவில் அவர்கள் பரிசில் ஒதுங்கியது.

அதுவரை உற்சாகத்தில் இருந்த வர்மன், கண்களை நிதானமாக்கி அவள் மீது வைத்தான்.

'' தேவி! ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்?'' என்றான் தழுதழுப்புடன்.

''ஆமாம், ஐயா ! தாங்கள் இப்போது செய்த காரியம் அனைத்தும் அனர்த்தமே ! சிந்தித்துப் பார்த்தீர்களா?'' என்றாள் அவள்.

''எப்படி அனர்த்தம், தேவி ?'' என்றான் அவன்.

'' என் தந்தை இதை விரும்புவாரா ?''

'' அவர் விருப்பம் இதில் என்ன இருக்கிறது? ஒரு தந்தை தன் மகளைப் பணயமாக அனுப்பலாமா ?''

'' அவர் சாதாரணத் தந்தை அல்ல, ஐயா ! ஒரு ஜமீனுக்கு அதிபதி !''

'' அதனால் என்ன?''

மென்ன நகைத்தாள் அவள்.

'' நாடு என்று வந்தால் வீட்டைத் தியாகம் பண்ண வேண்டும்.''

அவன் திகைத்தான்.

''ஆமாம், வீரரே ! நாட்டுக்கு நன்மையானால் வீட்டைத் துறக்கலாம். என் தந்தை அதைத்தான் செய்திருக்கிறார் !''

'' நாட்டுக்கு இப்போது என்ன நன்மை?''

''திருப்பதி என்னும் திரு எங்கள் ஜமீனில் தான் இருக்கிறது. இந்த மாபெரும் பொக்கிஷத்தை அவர் காப்பாற்ற வேண்டாமா?''

''உங்களை அனுப்புவதால் எப்படிக் காப்பாற்றப் போகிறார் !''

'' 'காலம்' ஏதாவது செய்கிறதா என்று பார்ப்பார் ! நவாபுச் சண்டையில் யார் வெற்றி பெற்று வருவார்கள் என்று கவனிப்பார். அதற்குமுன் திருமலை என்னும் அந்தத் 'திரு'வை வாரி இறைத்து விண்



ஸ்ரீ வேணுகோபாலன்

விரயம் செய்யமாட்டார். அத்தனையும் மக்கள் சொத்து ஆயிற்றே! அதைஇந்தநவாபு யுத்தங்களில் செலவு ஆவதற்கு விடுவார்களோ ?''

'' ஓகோ ! நவாபு முடிவு தெரியும்வரை நீங்கள் பணயமாக இருப்பீர்களோ ?''

'' அது ஒரு ராஜ யுக்தி. அதைப் பற்றி நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்?''

'' தேவி ! நன்றாகக் கூறுகிறீர்கள்! யுத்தம் முடிந்து, முடிவு தெரிந்துவிட்டால் மாத்திரம் உங்கள் திருப்பதித் 'திரு'வைக் காப்பாற்ற முடியுமோ ?''

மெள்ள நகைத்தான் அவன்.

'' ஐயா ! 'திரு' என்றால் வெறும் செல்வம் மட்டுமல்ல, சீர்மை, அழகு, செழிப்பு என்று எத்தனையோ பொருள் உண்டு. இதைக் குறித்துத்தான் வைணவப் பெரியவர்ராமாநுஜர் திருவரங்கத்தைத் திருவரங்கத் 'திரு' என்று குறிப்பிட்டார். திருவரங்கம் என்பதே அவருக்கு ஒரு செல்வம் !''

'' இளவரசி ! நான் அதிகம் படித்தவனல்ல !''

'' நானும் பிரமாதமாகக் கற்கவில்லை. கேள்விப்பட்டதே அதிகம். ஆயிரம் ஆண்டுகளாக இருந்து வரும் இந்தத் திருமலைத் 'திரு'வை அழிவிலிருந்து காப்பாற்றியவர் யார் தெரியுமா ?''

'' தெரியாது.''

''அதே ராமானுஜர்தான் ! காடாகவும் வனமாகவும் இருந்தஇந்தவேங்கிட மலையைப் புதுப்பித்து புஷ்பமாக்கியவர் அவர்தான், வீரரே !''

'' எனக்குத் தெரியாது, இளவரசி !''

''திருமலை என்னும் இந்த வேங்கிட மலை மேல் அர்ச்சகர் தினம் ஏறி வருவதே கஷ்டம்! சந்திரகிரி பாரிசத்தில் அர்ச்சகரும், இதர கோவில் பரிவாரங்களும் தங்கி, தினமும் மலை ஏறி சுவாமிக்கு வழி பாடு செய்து வந்தார்கள் அந்நாளில் ! சந்திரகிரி வழியாக ஏறுவது கடினம் ! செங்குத்தான இறக்கம். மழை நாளில் ஓடைகள் ஓடி வரும். வழுக்கும். இத்தனை இடர்ப்பாடுகளும்போதாது என்று, மலை ஏறித்தொடர்ந்து பத்து நாள் வேலை செய்தவர்கள், நிச்சயம் கொடிய ஜுரத்துக்கு ஆளாவார்கள்.''*

'' ஓகோ ! திருமலை மேலே யாரும் தங்கமாட்டார்களா?''

''சொற்பப் பேர்தான் தங்குவார்கள்... அவர்கள் யாவும் துறந்தவர்களாகவும் கடவுள் கைங்கரியமே வாழ்க்கையில் முக்கியம் என்று கருதுபவர்களாகவும் இருந்தார்கள். மற்ற யாரும் கொடிய ஜுரத்துக்குப் பயந்து அங்கேதங்கமாட்டார்கள். தினமும்அடிவாரத்திலிருந்து மேலே போய்ச் சேவைகள் செய்துவிட்டு இறங்கி வந்தார்கள். ஆனால் இதற்குக் கூட மகத்தான சோதனைகள் தோன்றியதால் யாருமே திருமலைக் கோவில் கைங்கரியத்தை மனமுவந்து ஏற்றுக்கொள்ளமுன்வரவில்லை.''

'' அப்படியானால் கோவில் க்ஷீணித்திருக்குமே !''

'' அதைத்தான் நானும் சொன்னேன். திருமலை என்னும் 'திரு' ராமானுஜர் காலத்தில் க்ஷீணித்து மோச நிலையில் இருந்தது. அதை அவர்தான் சீர்திருத்தம் செய்து செப்பனிட்டார் !'' என்றாள் செஞ்சகா.

செஞ்சகாவுக்கு அழகு வன்மை மட்டுமல்ல, சொல் வன்மையும் இருப்பது கண்டு

---

* (கொசுக்கள் தொல்லையால் எழுந்த மலேரியா நோய் என்பது பின்னால்வந்தவர் கண்டுபிடிப்பு!)

அதிசயப்பட்டான் வர்மன். எத்தனை விஷயங்களைத் தெரிந்து வைத்திருக்கிறாள்!.... கேட்கக் கேட்கச் சுவையாக இருக்கிறதே !

'' ராமானுஜர் எப்படித்தான் சீர்திருத்தம் செய்தார், இளவரசி ?'' என்று ஆவலுடன் கேட்டான் அவன்.

'' திருப்பதி என்று ஊரை ஸ்தாபித்தவரே அவர் !''

'' அப்படியா ?''

''ஆமாம் ! கோயிலும் கட்டி நான்கு மாட வீதிகளோடு ஊரையும் ஸ்தாபித்தார். சந்திரகிரி பாரிசத்தைவிட இந்த இடம் வசதியாக இருந்தது. அர்ச்சகர்களையும் இதர பரிவாரங்களையும் இங்கே குடியேற்றினார். அது மட்டுமல்ல ! அப்போதெல்லாம் கோயிலை அடுத்தால் காடுதான் ! பயங்கரமான வனம்! அந்த வனத்தைத் திருத்தி நந்தவனம் ஆக்கியவரும் ராமானுஜர் தான் !''

'' அப்படியா ?'' என்று ஆச்சரியமுடன் கேட்டான் வர்மன்.

''ஆமாம் ! பெருமானுக்குத் தினமும் நடத்தவேண்டிய புஷ்பக் கைங்கரியம் நடத்த முடியாமல் போகிறது என்பதை உணர்ந்து காரணம் என்னவென்று யோசித்தார் அந்த மகான்! அடிவாரத்திலிருந்துதான் மேலே புஷ்பங்கள் போய் வந்தன. அவற்றை எடுத்துச் செல்லச் சமயங்களில் பரிவாரர் அகப்படமாட்டார்கள். இதற்காக ராமானுஜர், மலை மேலேயே, அதுவும் கோயிலைச் சுற்றியே நந்தவனம் ஏற்படுத்தத் தீர்மானித்தார்.''

'' அது முடியுமா ? மலைமேல்தான் யாரும் தங்க மாட்டார்கள், என்றீர்களே!''

'' ஆமாம் ! கொடிய ஜுரம் வந்தாலும் வரட்டும், நீ போய்த் தங்கு ! பகவானுக்குப் புஷ்பக் கைங்கரியம் செய் !'' என்று தமது சீடன் அனந்தாழ்வானை அனுப்பித்தார்.

'' அவர் போய்த் தங்கினாரா ?''

'' தங்கினாராவா ? மனைவியோடு தங்கி நந்தவனத்தையும் செழிக்க வைத்து, பெருமானுக்குக்குறைவறபுஷ்பங்கள்கிடைக்கும்படி செய்தார்.''

அந்த வைணவ மகானின் பல வேறுதரப்பட்ட சேவைகளைச்சில கணங்கள்வரை மனத்தில் நினைத்துப் பார்த்தான் அவன்.

''அப்படியெல்லாம் இந்தத் திருமலைத் 'திரு'வை க்ஷீணத்திலிருந்து காப்பாற்றியது மட்டுமல்ல, அது மேலும் மேலும் வளர்வதற்கு வழிவகுத்தார் அந்த வைணவப் பெரியவர். அவரும், அவர் வழி வந்தோரும் பட்ட அரும்பாடுகளினால்தான் இன்று திருமலைக் கோயிலும் செழித்திருக்கிறது. திருப்பதியும் செழித்திருக்கிறது. கோயிலுக்கு இந்த வருஷத்தின் வருமானம் தெரியுமா ?''

'' உங்கள் தந்தை பேசிக் கொண்டிருந்தார் அதைப் பற்றி !''

'' உண்டியலும், நில வருமானமும் சேர்ந்து இரண்டு லட்ச ரூபாய்!''*

'' அப்போதே கேள்விப்பட்டு மலைத்துவிட்டேன் !''

'' மலைத்துப் பிரயோசனமில்லை ! இதைக் காப்பாற்றி மேலும் மேலும் திருமலைத் 'திரு'வை நாம் வளர்க்க வேண்டாமா ?''


''ஆமாம், இளவரசி !''

''அந்த வேலையில்தான் ஈடுபட்டிருக்கிறார், என் தந்தையார் ! திருமலையின் 'திரு' அநியாயப்பட்டவர் கையில் போய்விடக் கூடாது. நல்லவரிடம் போனால்தான் அந்தக் கோயிலுக்கு நன்மை பிறக்கும். திருமலைச் செல்வமும் செழிக்கும். எனவே இந்த நவாபு சண்டையைக் கருவியாக உபயோகித்துக் கொண்டு, திருமலையின் திரவியத்தை யாருக்கும் கொடாமல் இருக்கிறார். இனியும் அப்படியே இருக்க விரும்புகிறார். இதனால் தான் என்னைப் பணயமாக அனுப்பித் தனது குடும்பத்தில் ஒரு தாற்காலிக சோகம் ஏற்

* கி.பி. 1751-ல் கணக்கிடப்பட்ட வருமானம்

'' எங்க கட்சியிலே என்ன கொள்கை இருக்குன்னு கேட்கிறீங்க. நான் முதலமைச்சரா வரணும். இந்தக்கொள்கை போதாதா ?''





'' உங்க கட்சியிலும் உட்பூசலா ? கட்சியின் தலைவரும் தொண்டரும் நீங்க ஒருவரேதானே !''

**கோகுலம் குழந்தைகளுக்கு ஔவையின் ஆசிகள்**

**பிப்ரவரி கோகுலம் இதழ் பல ரசமான அம்சங்களுடன்**





பட்டாலும் பொருட்களை, இருமலைச் செல்வத்தைத் தான் காக்கவேண்டும் என்று இருக்கிறார். புரிந்ததா வீரரே !''

வர்மனின் கண்கள் அப்போது நிறைந்திருந்தன.

அவன் கண் முன்னால் ஒரு பெரிய சித்திரத்தைச் செஞ்சகா எழுதிக் காண்பித்தது போல் இருந்தது.

''புரிந்தது, இளவரசி ! எனினும்.....'' இழுத்தான் அவன்.

'' என்ன சொல்லுங்கள்!''

'' பணயம் என்றால் வேறு யாராவது ஒரு ஆண் மகனைக்கூட வைத்துக் கொள்ளலாம். தங்களை வைத்துக் கொள்வது பிடிக்கவில்லை. நிச்சயம் இதற்கு உடன்படேன் !''

அழுத்தத்துடன் கூறும்போது கண்களில் நீர் பனித்துவிட்டது.

'' வீரரே !'' என்றாள் அவள். ''என்னைக் காப்பாற்றி எங்கே கொண்டு போவீர், அதைச் சொல்லுங்கள் !''

'' உங்கள் தந்தையிடமே !'' என்றான் அவன் தழுதழுப்புடன்.

'' சரி ! அப்போது இங்கிலீஷ்காரர்கள், சும்மா விடுவார்களா ? நவாபுதான் சும்மா விடுவாரா ? படைகளை அனுப்பி என்னை மீண்டும்பெற முயற்சி செய்யமாட்டார்களா? அது மட்டுமல்ல, இந்த ஜமீனை எடுத்து மற்றவரிடம் கொடுத்துவிடமாட்டார்களா? அன்றைக்கே பாப்கான் சாகிப் ஜமீன் ஏற்கத் தயாராக வந்திருந்தாரே, அவரிடம் எங்கள் ஜமீனும், இருமலையும் போக வேண்டுமா ?''

அவள் கேள்விகள் அவன் மனத்தில் அம்பு போல் செருகியது.

அந்தச் சிறுமி எத்தனை விஸ்தாரமாக ராஜரீகத்தைப் பார்க்கிறாள்.

எனினும், வர்மன் மனம் கேட்காமல் போக வெகு நேரம் வாதித்துப் பார்த்தான்.

ஆனால் கடைசியில் செஞ்சகா சபதமாகக் கூறிவிட்டாள். அவளுக்கு அவன் நன்மை செய்வதானால், நிச்சயம் அவன் அவளை ஜான் ஸாவேஜிடம் மீண்டும் அழைத்துப் போய் ஒப்படைக்க வேண்டும். அவன் விரும்பாவிடில் அவளே அவரைத் தேடிப் போகத் தயாராக இருந்தாள். ஆமாம் நிச்சயம்.

மாலை ஆகும்போது, அவர்கள் ஆர்க்காட்டை நெருங்கினார்கள் !

செஞ்சகா வாடகைப் பல்லக்கில் வந்தாள். வர்மனும் தாதியும் நடந்து வந்தார்கள்.

பாலாற்றுக் கரையில் கூடாரங்களில் தண்டு இறங்கியிருந்த படைவீரர்கள் அவர்களைத் தூரத்திலிருந்தே கண்டு கொண்டார்கள்.

அவர்கள் ஆர்க்காட்டுக்கோட்டையிலிருந்து இங்கிலீஷ்காரருக்குப் பயந்து வெளியே வந்த சந்தா சாகிப் படையினர்.

படையில் ஐந்து வீரர் குழு விரைந்து சென்று செஞ்சகா, வர்மனைப் பிடித்து வந்து தங்கள் தளபதி கூடாரத்தில் கொண்டு நிறுத்தினார்கள்.

தளபதி செஞ்சகாவின் தோற்றத்தை நோக்கி, அரச வம்சம் என்று நினைத்து, '' நீங்கள் யார் ?'' என்று கேட்டான்.

'' பொம்மராஜுப் பாளையம் இளவரசி!'' என்றாள் அவள்.

''என்ன?'' என்று அதிசயித்தான் அவன்.

அடுத்த கணம் அவள் செய்த காரியம் திடுக்கிடும்படி இருந்தது. (தொடரும்)

# வெங்கிடு சார் வெறுக்கிற விஷயம்

ப்ரதிபா ராஜகோபாலன்

**வெ**ங்கிடு சாருக்குக் கோபம் அலையலை யாய் வந்து விட்டது.

மூன்றாவது மகள் மலர்க்கொடியாள் மறைத்துக் கொண்டு படித்த அந்த சினிமா இதழைப் பிடுங்கித் தூக்கி எறிந்தார். அது ஒரு சிட்டுக் குருவியைப் போல வாசலில் கவிழ்ந்து படுத்தது.

''சினிமாங்கற ஆசையே வீட்டுக்குள்ளயே ஆகாதுன்னு எத்தனை தரம் சொல்லி இருக் கேன்? கொஞ்சமாவது அறிவிருக்கா உனக்கு?'' என்று முகமெல்லாம் ரத்தத்தின் அழுத்தம் பாயக் கத்திவிட்டு, உடம்பு பட படக்க வாசல் பக்கம் வந்தார்.

மலர்க்கொடியாள் அவர் கோபத்தைப் புரிந்து கொண்டு மௌனமாகி விட்டாள். மற்றச் சகோதரிகளும் அப்பாவின் உணர் வைப் புரிந்து கொண்டு சமையலறைப் பக்கம் நழுவி விட்டார்கள்.

''சார், வெங்கிடசாமி இருக்காருங் களா?'' என்று யாரோ கேட்பது போல இருந்தது.

வெங்கிடு சார் கண்ணைக் குறுக்கிப் பார்த் தார்.

வெளேர் என்று சட்டை போட்ட இரண்டு ஆட்கள், நல்ல உயரமாய்ப் பளிச் சென்று வாசல் பக்கம் தெரிந்தார்கள். ஏதோ செண்ட் வாசனை மனசுக்கு இதமாகக் காற்றில் கலந்தது.

''நான் தான் வெங்கிடு சாமி'' என்றார் வெங்கிடு சார், மிக அருகில் போய்.


ஒரு ஆள், அவர் எறிந்த சினிமா இதழைக் குனிந்து எடுத்துக் கொண்டார்.

''நீங்களா புஸ்தகத்தை எறிஞ்சது சார்? நீங்க வாத்தியாரா இருந்தவங்க. புஸ்தகத்தை சரஸ்வதின்னு ஆயிரக் கணக்கான பசங்களுக்குச் சொல்லிக் கொடுத் தீங்க. நீங்களே எறியலாமா சார்?'' என்று புன்னகையுடன் கேட்டுக் கொண்டு செருப் பைக் கழற்றி வாசலில் விட்டார்.

''சார், நாங்க புரோக்கர்ங்க. இவர் ராசு, நான் சக்கூர், உங்க வீடு விலைக்கு வந் திருக்கிறதாக் கேள்விப்பட்டோம்'' என்று சக்கூர் தீர்மானமாய்ச் சொன்னார்.

''இல்லையே, யார் கிட்டேயும் விலைக்கு விக்கிறதாகச் சொல்லலையே?'' என்று உடனே மறுத்தார் வெங்கிடுசார்.

''இல்லையே, கேள்விப்பட்டோமே?'' என்று அழுத்தமாகச் சொன்னார் ராசு. வீட்டை விலைக்கு எப்படியாவது வாங்கிவிடு கிற உறுதி இருந்தது, அவரிடம்.



வெங்கிடு சார் சில விநாடிகள் யோசித்தார்.

வாசலில் இருந்த கொய்யா மரமும், பப்பாளி மரமும் காற்றுக்கு லேசாகச்சிணுங்கின. முற்பகல் வெயில் கோபமாய் இருந்தது. வீட்டுக்கு எதிரே பழைய பங்களா. முன்னாள் ஜமீன்தார் தம் 'வைப்பு'க்குக் கட்டிக் கொடுத்தது அது. 'வைப்புக்கு' வயசாகிக் கிழடு தட்டிப் போனது போலக் காலத்தின் அழுத்தத்தில் அதுவும் சிதிலமாகி விட்டது. இப்போது யாரும் அதில் தங்குவதில்லை. மரங்களும், புதர்களும் மண்டிய முக்கால் ஏக்கரில் பங்களா பேய் பங்களா போல் நிற்கிறது.

''சரி, எதுக்கும் உள்ளே போவோம். வாசல்ல எதுக்கு நிக்கணும்?'' என்று சக்கூர் ராகவைப் பார்த்து ஜாடை செய்தார்.

''நீங்க ரிடையராகி அஞ்சு வருஷமாச்சா சார்?'' என்று கேட்டபடி ராக, முன் ஹாலில் இருந்த சோபாவில் உட்கார்ந்தார். சோபாவின், மேல் ரெக்ஸின் கிழிந்து உள்ளிருக்கும் தேங்காய் மட்டை நார் பளிச்சென்று தெரிந்தது.

மூவரும் உட்கார்ந்தார்கள்.

வெங்கிடு சார், 'இதென்னடா புதுச் சங்கடம்' என்று யோசித்தவாறு வீட்டினுள்ளே பார்த்தார்.

வீடு பழைய காலத்து வீடு. வாசலுக்கும் புழக்கடைக்கும் இடையே ஓட்டப்பந்தயமே நடத்தலாம். அவர் அப்பா, எதிர் பங்களா ஜமீன்தாரிடம் காரியஸ்தராய் இருந்தார். தாத்தா துபாஷியாய் வெள்ளைக்காரனிடம் இருந்தவர். ஒரு காலத்தில் உறவுக்காரர்கள் எப்போதும் பத்திருபது பேராய் வந்து மாதக் கணக்கில் தங்கிக் கலகலப்பாய் இருந்த வீடு. கூடைக் கணக்கில் காய்கறிகளும், டின் கணக்கில் நெய்யும், வண்டிக் கணக்கில் விறகும் வாங்கிய வீடு. இப்போது எல்லாமே கிலோக்கணக்கிலும், கிராம் கணக்கிலும் அடங்கிவிட்டது.

வெங்கிடு சாரின் மனைவி பெரிய பித்தளை செம்பில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

இருவரும் அதைக் குடித்துவிட்டு மேல் துண்டால் துடைத்துக் கொண்டு, வீட்டை ஒரு நோட்டம் பார்த்தார்கள்.

''நம்மளுக்குக் கொழந்தைகள் எத்தனை சார்?'' என்று சக்கூர் பாய் கேட்டார்.

''அஞ்சு பொண்ணுக. ஒரு பையன். பையன் தான் கடைசி. அவன் பி. காம். செகண்ட் இயர் படிக்கிறான்'' என்று வெங்கிடு சார் உற்சாகம் இன்றிச் சொன்னார். மனைவி செம்பை எடுத்துக் கொண்டு உள்ளே போய்விட்டாள்.

''பொண்ணுகளுக்குக் கல்யாணம் ஆயிடுச்சுங்களா?'' என்றார் பாய்.

''ஒரு பொண்ணுக்கு ஆயிடுச்சு.''

''மொதல் பொண்ணு இப்ப வீட்டுக்கு வருதுங்களா?'' என்று ராக கேட்டதும் வெங்கிடு சாரின் முகம் சிறுத்து விட்டது.

சினிமாவில் அரைகுறை ஆடையுடன் கவர்ச்சி நடனம் ஆடுகிறாளே ஹேமலதா என்ற பெயரில் அவள் தான் இவரின் முதல் பெண். நிஜமான பெயர் மங்கையர்க்கரசி. வெங்கிடு சாரின் தந்தை ஜமீன் குடும்பத்துடன் தொடர்பு வைத்திருந்ததால் அவரே ஒரு குட்டி ஜமீன்தாராக இருந்தார். அதுவும் ஜமீன்தாரின் வைப்புக்கு எதிர் வீடு என்பதால், நாகரீகம் கொஞ்சம் முற்றித்தான் இருந்தது. ஆடல் பாடல் என்று வீடே புளகாங்கிதமாய் இருந்தது. முதல் பேத்திக்கு இயல்பாய் சங்கீதம், நடனம் கைவந்த கலையாய் வந்திருந்தது. தாத்தாவின் செல்வத்தில் வளர்ந்த தம் பெண்ணை வெங்கிடு சாரால் கண்ட்ரோல் செய்ய முடியவில்லை. அதுவும் ரொம்ப நாள் குழந்தைகள் இல்லாதிருந்து அவரின் முப்பத்தேழாவது



வயதில் பிறந்த பெண்என்பதால், கண்டிப்பு என்பதே இல்லாமல் போய் விட்டது.

மெல்ல மெல்ல பாட்டு, டான்ஸ் என்பது, நாடகத்தில் நடிப்பது வரை வந்து விட்டது.' மங்கையர்க்கரசி பிறந்த பின் அடுத்து நாலு பெண்களும், கடைசியாய்ப் பையனும் பிறந்து விட்டனர். இவர் பள்ளியாசிரியராய் இருந்தார். உறவினர்களுக்குச் சோறு போட்டே பாதிச் சொத்துக் கரைந்தது. வீண் ஆடம்பரத்தில் மீதி சொத்துக் கரைந்தது. கடைசியில் இந்தப் பூர்வீக வீடு தான் மிஞ்சியது.

சம்பளத்தில் தான் சோறு என்ற நிலை வந்த போது குடும்பம் சோகை கண்டது.

பெரிய பெண்ணின் நாடகத் தொடர்பினால் வரக் கூடாதவன் எல்லாம் வீட்டுக்கு வந்தான். 'பெண்ணை அங்கே அவன் கூடப் பார்த்தேன், இங்கே இவன் கூடப் பார்த்தேன்' என்ற அசிங்கமான தகவல் வந்தது. தன் வீட்டுக்குள் இருந்து பெண் விடுபட்டு விட்டாள் என்று உணர்ந்ததும் வெங்கிடு சார் மனம் ஒடிந்து விட்டார்.

ஒருநாள அவள் எவன் கூடவோ ஓடிவிட்டாள். சினிமாவில் சேர்ந்து அசிங்கமான நடனம் எல்லாம் ஆடுகிறாள் என்று கேள்விப்பட்டு மனிதர் அவமானத்தால் குன்றி விட்டார்.

கொஞ்ச காலம் ஊரில் தலை காட்ட முடியவில்லை.

மற்ற பெண்களின் படிப்பை நிறுத்திவிட்டார். நாடகம், சினிமா, சங்கீதம், பத்திரிகை எல்லாவற்றுக்கும் தடைபோட்டுப் பெண்களைப் பெட்டிப் பாம்பு போல் அடக்கி வைத்து விட்டார்.

ரிடையராகி, கிடைத்த பணத்தில் இரண்டாவது பெண்ணுக்கு மட்டும் கல்யாணத்தைப் பண்ணி வைத்தார். பணம் இல்லாததால் மற்ற மூன்று பெண்கள் கல்யாணம் தடைப்பட்டிருக்கிறது.

''மொதல் பெண்ணை நான் மறந்துட்டேன்'' என்று வெங்கிடு சார் கல்லுடைத்தாற்போல் சொன்னார்.

''இதுதாங்க மொதல் பொண்ணு?'' என்று கேட்டுவிட்டு, சக்கூர் பாய் வாசலில் எறியப்பட்ட சினிமா இதழின் நடுப்பக்கத்தைப் பிரித்துக் காண்பித்தார்.

அவருடைய முதல் பெண் மங்கையர்க்கரசி என்ற ஹேமலதா பாதி தெரிந்த மார்பகங்களுடன், இடையில் சிறு துண்டுடன், கவர்ச்சியாய், போதை ஊட்டுபவளாய் ஒரு சோபாவில் சாய்ந்து, மார்பை எக்கி வைத்துக் கொண்டு, காலை எதிரே உள்ள ஸ்டூலில் நீட்டி, தொடைகளின் திரட்சி தெரிய...

வெங்கிடுசாருக்கு உயிரே போய் விட்டது போல இருந்தது. பார்வை மங்கி, அறை முழுதும் இருளில் பதுங்கி விட்டது போல் தெரிந்தது.

''மனசுக்கு ரொம்ப கஷ்டமாகத்தான் இருக்கும். எத்தனை பேருக்கு ஒழுக்கத்தைப் போதிச்ச ஆள் நீங்க'' என்ற ராக, ''சார், நான் சொல்றேன்னு கோபிச்சுக்காதீங்க. வயசுக்கு வந்த பொண்ணுகளை இன்னும் வீட்ல வெச்சிருக்கிறது நல்லா இல்லே'' என்று வருத்தம் தோய்ந்த குரலில், ஒரு நெடுநாள் நண்பனைப் போல, குருவைப் போல, ராஜ ரிஷியைப் போல சொன்னதும் வெங்கிடு சார் வெடுக்கென்று தலையைத் திருப்பிப் பார்த்துப் பின் கேட்டார்:

''சௌகரியம் வேணுமில்லே?''

''வாஸ்தவம். ஆனா பொண்ணுக வாழ்க்கை பெரிசா, சத்திரம் மாதிரி இந்தப் பழைய வீடு பெரிசா?''

''அப்படீன்னு?''

''பேசாம வித்திருங்க சார்.''

''இந்தக் காலத்துல இந்த மாதிரி வீட்டை எவன் விரும்புவான்? அப்படித்தான் என்ன வெலைக்குப் போகும்?''

''மூணு பொண்ணுகளைத் தாராளமாக் கல்யாணம் பண்ணி வைக்கிற அளவுக்கு மேலேயே போகும்!''

''இது எங்க பூர்வீக வீடு. நான் பொறந்ததே இங்கதான்.''

''விக்கிறதுக்குக் கஷ்டமாத்தான் இருக்கும். ஆனா பொண்ணுக நித்திய கன்னியாகவே இருக்கணுமா?''

''நல்லாச் சொல்லுங்க'' என்று குரல் கதவுக்குப் பின்னால் இருந்து வந்தது. திருமதி வெங்கிடுசாரின் குரல் தான் அது. குரலில் துக்கமும், கோபமும் பிணைந்திருந்தது.

''அம்மாவுக்குத் தெரிஞ்சிருக்கு. சாருக்குத் தெரியலை'' என்று பாய் கொஞ்சம் அழுத்திச் சொன்னதும், வெங்கிடுசாரின், மனசுக்குள் ஒரு திறப்பு வெடித்தது.


''என்ன வெலைக்குப் போகும்? சென்ட் ஒரு அஞ்சாயிரம் போகுமா?'' என்று தயக்கத்துடன் கேட்டார் வெங்கிடுசார்.

பாய் சிரித்து விட்டார்.

''ஒலகம் தெரியலையே சார் உங்களுக்கு? சென்ட் இருபதாயிரம் போகும். நீங்க வாத்தியாரா இருந்தவங்க. ஆயிரக்கணக்கான பசங்களுக்கு வெளிச்சம் கொடுத்தவங்க. உங்களை ஏமாத்தினா, எங்களுக்குக் கண் குருடாயிடும். சொழந்தைக ஊமையாயிடும். மொத்தமா ஏழு லட்சம் குடுத்திடறோம். பார்ட்டி ரெடியா இருக்கு. நாளைக்குக் கூடக் கெரயம் வச்சிடலாம். இப்பவே யோசிச்சுச் சொல்லுங்க.''

''ஒரு காரியம் கஷ்டமாக இருப்பதால் நாம் பயப்படுவதில்லை; நாம் பயப்படுவதால்தான் அது கஷ்டமாகிறது!''

— செனகா
-சம்பத்குமாரி



''என்னது ஏழு லட்சமா?'' என்று வெங்கிடு சாரும் மனைவியும் அசந்தேவிட்டனர்.

''உங்களுக்கு யாரும் சும்மாத் தரலே. இன்னைக்கு மார்க்கெட் நெலவரம் இப்பிடி இருக்கு...'' என்றார் ராசு.

''பார்ட்டி யாரு?''என்றார் வெங்கிடுசார்.

''உங்களுக்குத் தெரியாமலா போகுது?''

வெங்கிடு சாருக்கு மனசு ஊஞ்சலாட ஆரம்பித்து விட்டது.

''மூணு பொண்ணுகளுக்கு மூணு லட்சம். ஒரு லட்சத்துல ஒரு வீடு பாத்துத் தர்றோம். வாங்கிடுங்க. மீதிப் பணத்தை டெபாசிட் பண்ணி, வர்ற 'வட்டியில வசதியா இருக்கலாம். என்ன சொல்றீங்க?''

''சரிங்க''என்றாள் திருமதி வெங்கிடு சார்.

சிறிது யோசித்து ''கிரயம் பண்ணிடலாம்'' என்று உறுதியாய்ச் சொன்னார் வெங்கிடு சார்.

அடுத்த எட்டாவது நாள் கிரயம் பண்ணிக் கொடுத்து விட்டார். தொகையில் முக்கால்வாசி கறுப்பாகவும், மீதியை டிமாண்ட் டிராப்டாகவும் வாங்கிக் கொண்டார்.

வீட்டை வாங்கியவர், சென்னையிலிருந்து விமானத்தில் வந்திருந்தார். பரம்பரைப் பணக்காரர் போல் தெரிந்தார். பெயர் ஜனார்த்தன ரெட்டி.

வெங்கிடு சாருடன் ஒரு பத்து நிமிஷம் பேசிக் கொண்டிருந்தார்.

''நான் வரணும்கிறது அவசியம் இல்லே. இந்தப் பணத்தை உங்க கிட்ட கொடுத்தது போலவும், உங்களைப் பார்த்தது போலவும் இருக்கும்னு தான் வந்தேன். உடனடியா வீட்டைக் காலி பண்ணணும்னு அவசியம் இல்லே. ஒரு வீட்டைப் பார்த்துக் குடி போன பின்னாலே என் கைக்கு வந்தால் போதும்'' என்று ரெட்டி பெருந்தன்மையாய்ச் சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

---

ஆறுமுக நேரியில் ஒரு சுவரில் நான் கண்ட வாசகம் :

'' எங்கள் வீட்டு சுவரில் நீங்கள் விளம்பரம் செய்தால் ஐந்து ஒட்டை இழந்துவிடுவீர்கள்.''

-ஜெயில் சேகர்




லட்சங்களின் துணையினால் வெங்கிடுசார் புது மனிதராகி விட்டார். டெண்டரைக் கூப்பிட்டுக் கண்டிப்புக் கலந்த குரலில் உறுதியாய்ச் சொன்னார்.

''நமக்குப் பணம் வந்திருச்சுன்னு துள்ளக் கூடாது. இன்னும் அடக்க ஒடுக்கமா இருக்கணும். மூத்தவ சினிமாவுல சேர்ந்து நம்ம மானத்தை வாங்கிட்டா. ஏழேழு ஜன்மத்துக்கும் அந்த அவமானம் தீரப் போறதில்லே. நீங்க மட்டுமில்லே. உங்க தலைமுறைக்கும் சினிமாங்கிற வார்த்தையே ஆகாது. சமூகத்துல சுய மரியாதையோட வாழணும்'' என்று உபதேசித்தார்.

அப்போது தான் ''சார்'' என்ற குரல் கேட்டது.

சக்கூர் பாய், ராசு இரண்டு பேரும் உள்ளே வந்து கொண்டிருந்தார்கள். ஏற்கெனவே அவர்களுக்குத் தர வேண்டிய தரகுத் தொகையைக் கொடுத்திருந்தார். இப்போது மீண்டும் எதுக்கு வந்திருக்கிறார்கள் என்று ஒரு வினாடி யோசித்தார்.

''சாருக்குச் சினிமா மேல இருக்கிற வெறுப்பும், கசப்பும், கோபமும் தீரப் போறதில்லே. ஆனா இந்தப் பணமே சினிமாவினால தான் வந்திருக்கு'' என்று புன்னகைத்தார் சக்கூர்.

''என்ன சொல்றீங்க பாய்?'' என்று திகைப்புடன் கேட்டார் வெங்கிடு சார்.

''உங்க வீட்டுக்கு முன்னால இருக்கே ஜமீன்தார் மாளிகை. அதை ஜனார்த்தன ரெட்டி ஏற்கெனவே வாங்கிட்டாரு. அந்த இடத்துல ஒரு தியேட்டர் காம்ப்ளக்ஸ் கட்டப் பிளான் போட்டு அனுப்பிச்சாரு. தியேட்டர்னா கார் பார்க்கிங் இருக்கணுமே? அதுக்குக் குறிப்பிட்ட எடம் இருக்கணுமாம். அத்தனை எடம் ஜமீன்தார் எடத்தில இல்லையாம். இவர் லட்சக்கணக்கான பணம் போட்டு மூணு தியேட்டர் கட்டறதுன்னு முடிவு எடுத்து அதுக்கான ஏற்பாடு பண்ணிட்டாரு. இப்போ, பிளான் அப்ரூவ் ஆகாதுன்னு ஒரு நிலை வந்தப்போ, மனுஷர் கவலைப்பட ஆரம்பிச்சாரு. அப்பத்தான் உங்க வீட்டைப் பத்திச் சொன்னேம். உடனே வாங்கி வீட்டை இடிச்சுக் கார் பார்க்கிங் வச்சுக்கலாம். பில்லர் போட்டு மாடி கட்டி அதுல கடைகள் கட்டி வாடகைக்கு விட்டுறலாம்னு முடிவு எடுத்தாரு. இல்லேன்னு ஏழு லட்சம் இத்தனை பழைய வீட்டுக்குக் கொடுக்க முன்வருவாரா ?'' என்றார் சக்கூர் பாய்.

வெங்கிடு சார் இதுவரை எதனை மனசார வெறுத்தாரோ அதிலிருந்து கிடைக்கும் நிதி தான் அவரது குடும்ப வாழ்வுக்கும் மகள்களின் திருமணத்துக்கும் உதவப் போகிறது என்பதைக் கண்டு திடுக்கிட்டார் !


அதைவிடத் திகைப் பளித்த விஷயம் அவரது மூத்த மகளை மணந்து கொண்டிருப்பவர் இந்த ஜனார்த்தன ரெட்டிதான் ! இந்தக் கசப்பான விஷயம் தெரிய வந்ததும் வெங்கிடு சார் இடிந்து போய் அமர்ந்து விட்டார். சக்கூர் பாயும் ராசுவும் விடை பெற்றுச் சென்றனர் !



ஸ்கூல் முடித்தவுடன் நேரா ஃபுட்பால் விளையாட மைதானத்திற்கு போவேன். நல்லா கை கால் ஓய்ந்து போகும் வரை விளையாடுவேன். எனக்கென்ன கவலை? வீடு திரும்பியவுடன்தான் தினம் அம்மா மறக்காமல் ஹார்லிக்ஸ் தருவாங்களே? ஹா, சத்துள்ள ஹார்லிக்ஸிற்குத்-தான் என்ன 'ஸுபர்' ருசி!.

மால்டெட் பார்லி, முழு ஆடைப் பால் மற்றும் பொன்னிற கோதுமைகொண்ட ஹார்லிக்ஸ் ஒரு சுவையான, சத்தான பானம். ஊட்டச்சத்திற்கு மூலாதாரமான ஒரு லட்சிய பானமென்ற நம்பிக்கையைப்பெற்றது. எனவே, கடந்த நூறு வருடங்களாக கோடிக்கணக்கான குடும்பங்கள் உலகமெங்கும் ஹார்லிக்ஸின் மேல் நம்பிக்கை வைத்து வருகிறார்கள் என்பதில் ஆச்சரியமில்லை.









**சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்**

# ஆகாசக் கங்கை

## 4

"இதோ ஒரு நிமிஷத்தில் வந்துவிடறேன்." வெறும் லுங்கி, பனியனில் காட்சி அளித்த தாரக்ராம் முகமே புன்னகையில் மறையக் கூறிவிட்டு பாத்ரூமுக்குப் போனார்.

அரவிந்தன் ஒரு சோபாவில் உட்கார்ந்தான். ரப்பர் மௌனமாக அழுந்தியது. சுற்றுமுற்றும் பார்த்தான். பெரிய கண்ணாடி. ஏழெட்டு நாற்காலிகள், டி.வி., டெலிபோன் சாப்பிட மேஜை என்று எல்லாம் இருந்தன. பணம் இருந்தால் டாஜ் ஓட்டல் அறை என்ன, டாஜ் ஓட்டலைப் போன்ற ஒரு ஓட்டலையே வாங்கிவிடலாம்.

ஒரு சமாதானத்துக்காகத்தான் ஒரு நிமிடம் என்று கூறி அவர் சென்றிருக்கிறார் என்பதை அரவிந்தன் விரைவிலேயே புரிந்து கொண்டான். ஐந்து நிமிடங்கள் ஓடிவிட்டன. இன்னும் வரவில்லை.

இத்தனை நேரமும் மனத்துள் அடைத்துக் கொண்டிருந்த வசுமதி சோபாவில் தன் அருகே, அவனை உராய்ந்தவளாய் அமர்ந்திருப்பதான பிரமை திடீரென்று எழுந்தது. உற்சாக பயத்தில் பார்த்தான். அவன் தாரக்ராமுக்காகக் கொண்டு வந்திருந்த போட்டோ ஆல்பம் இருந்தது. ஒரு ஆச்சரியம் அவனைத் தாக்கியது. வசுமதியும் இதே ஆல்பத்தை அன்று இரவு விருந்துக்கு வரும் போது கொண்டு வரச் சொல்லியிருந்தான். அவள் ஏற்கனவே பார்த்ததுதான். அவனும் ரகுவும் நிஜாருடன், சட்டை இல்லாமல் நிற்கும் காட்சியை அவள் வெகுவாக ரசித்திருந்தாள். சில வாரங்களுக்குமுன் அவனுடைய வீட்டில் நடந்த நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது.

அவனும் வசுமதியும் உட்கார்ந்திருக்கிறார்கள். ஆல்பத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வசுமதி கொஞ்சலும் கேலியுமாய் வேடிக்கைப் பேச்சுப் பேசுகிறாள்.

ஆண்டு நிறைவு.

ஒரு குழந்தை கொழு கொழு வென்று கட்டை விரலை வாயில் வைத்துக் கொண்டு முகம் மலரச் சிரிக்கிறது. கால்களில் காப்பு. கைகளில் காப்பு. அரையில் அரைஞாண். கழுத்தில் செயின். காதுகளில் கடுக்கன்.

வசுமதி கண் கொட்டாமல் அந்தப் படத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என் தாத்தா என்னைத் தங்கக் கட்டின்னு கொஞ்சுவாராம். பாட்டி, குண்டுமணித் தங்கம்னு ஒடம்பெல்லாம் தடவுவாளாம்" என்றான் அரவிந்தன்.

"அதான் ஒடம்பெல்லாம் நகையா இருக்கே... நல்ல வேளை பெண் குழந்தை இல்லே." வசுமதி சிரித்தாள்.

"எதுக்கு சிரிக்கிறே?"

"இவ்வளவு நகை போட்டாங்களே, ஒரு கர்ச்சீப் அளவாவது துணி போட்டிருக்கக் கூடாது?"

"போட்டிருந்தா எப்படி அரைஞாண் தெரிஞ்சிருக்குமாம்?" அரவிந்தனும் சிரித்தான்.

"எனக்கு இதிலே ஒரு காப்பி வேணும்."

"எதுக்கு?"

"எதுக்கானு என்ன...? ஐ வான்ட் எ காபி ஆஃப் திஸ்....."

"ட்ரெஸ் பண்ணித் தரேன்" என்று சிரித்தான் அரவிந்தன்.

"என்னப்பா, உனக்குள்ளேயே சிரிக்கறே? ஏதாவும் பழைய ஜோக்கு ஞாபகத்துக்கு வந்ததா திடீர்னு?"

தாரக்ராம் வந்ததையோ அருகே நின்றதையோ அறியாத அரவிந்தன் பதில் சொல்ல வார்த்தைகளைத் தேடினான்.



தாரக்ராம் எதிர் சோபாவில் உட்கார்ந்தார். சமுத்தில் கனமான தங்கச் செயின். இரண்டு புலி நகங்களுடன் வீரமாகத் தொங்கின. பெரிய புலியாக இருக்க வேண்டும். அணிந்திருப்பது தாக்கா மஸ்லின் துணியாக இருக்க வேண்டும்... அதில் லக்னோ குர்த்தா. தழையத் தழைய வேட்டி. தங்க பிரேம் போட்ட கண்ணாடி. முன் வழுக்கை மேடையாக அமைய விபூதிக் கீற்றும் குங்குமப் பொட்டும் பிரகாசமாய்ச் சிரித்தன.

தட்டு நிறைய சமூசா வந்தது.

'' சாப்பிடு, அந்து !''

அவன் நாசூக்காக முள் கரண்டியால் குத்தி ஸ்பூனால் எடுத்தான்.

'' உனக்கு என்ன ஹாட் ட்ரிங்க், அந்து? ஐ ஆல்வேஸ் டேக் பிளாக் டாக்... ரேர்லி ஷிவாஸ்ரீகல்...''

''பழக்கமில்லே, சார்....''

''சார்னு கூப்பிடற பழக்கத்தையும் விட்டுவிடு அந்து... இப்ப நான் கம்பெனி சேர்மன் இல்லே... உன் தொலைதூர பாஸ் இல்லே... பழைய குடும்ப சிநேகிதன்... என் பேர், உன்னைப் பொறுத்த வரையில் தார் மாமா.''

அரவிந்தன் பதில் சொல்லவில்லே.

'' ஒரு ஸ்மால் நெப்போலியன் சாப்பிடு... அளவாகக் குடிச்சா பிராண்டி நல்லது...''

''தாங்க்ஸ் சார்... மாமா... சார்.''

'' என்ன நீ இப்படி இருக்கே... ஆமாம், அமெரிக்காவிலே இருந்தியே, ஒரு தடவை கூடவா நீ இதெல்லாம் ருசிக்கப் பார்க்கலே?''

''யெஸ்... சார்... ஸாரி, மாமா...''

'' உன் அப்பாவை நீ முக ஜாடையிலே மட்டும் உரிச்சு வைக்கலே. இந்த விஷயத்திலும் முழுக்க முழுக்க நீ ரங்கன்தான்... ஒரு பெரிய பார்ட்டி. ஊத்திக் கொடுக்கிற சிப்பந்திகூட திருட்டுத்தனமா அப்பப்ப ஒவ்வொரு வாயா முழுங்கிக் கொண்டிருந்தான். ஆனா உன் அப்பா ஒரு கோகோ கோலா பாட்டிலே வைச்சுண்டு ஒரு சேர்லே ஆணி அடிச்ச மாதிரி ஒக்கார்ந்திருந்தான்...அப்ப கோகோ கோலா தான் பிரசித்தம்...''

அரவிந்தன் புன்னகையை வரவழைத்துக் கொண்டான்.

'' நான் குடிக்கிறதில் உனக்கு ஆட்சேபணை இல்லையே ?''

'' நோ... நோ...''

'' வெறும் வயத்திலே அது படாதுன்னு தான் இந்த சமூசாவை வரவழைச்சேன்.'

''அப்படியா...''

''பத்து மணிக்கு டின்னர். கார்லேதானே வந்திருக்கே...?''

''ஆமாம்.''

''ஆல்பத்தை மறக்காமக் கொண்டு வந்திருக்கியே... எங்கே பார்க்கலாம்.''

அவன் அதை நீட்ட அவர் அதை வாங்கிப் புரட்டினார்.

'' இதப் பார்த்தியா... எல்லாரும் இருக்கோம்...''

எழுந்து நின்று அவர் அருகே நின்று பா்த்தான்.

ஊட்டி. பொடானிக்கல் கார்டன்ஸ். ஒரு மேடான பகுதியில் கீழே மூன்று குழந்தைகள் உட்கார்ந்திருக்க, பின்னால் நான்கு பேர் நிற்கிறார்கள்.

'' நீ, மாயா, ரகு...ரங்கன், உன் அம்மா, கோமளி, நான்...''

''ஆமாம்.''

''மாயா எப்படிச் சிரிக்கிறா, பார்த்தியா?''

'' அப்ப அவளுக்கு எட்டு வயசு...''

''இதிலே இருக்கிற என்னோட ரெண்டு உசிரும் இப்ப இல்லே... அற்பாயுசுலே போறவா நல்லவாளாவே இருக்கப்படாது... அந்து ! ரங்கனும் கோமளியும் என்னே சதா திட்டிண்டும் வெறுத்துண்டும் இருந்திருந்தா, இப்ப நான் அவங்களைப் பத்தி அடிக்கடி நெனைச்சு நெனைச்சு மாயமாட்டேன்.''

'' எனக்கு உங்க மனசு புரியறது.''

'' இல்லே... உனக்குப் புரியாது. ரங்கனும் நானும் சாதாரண ஃப்ரண்ட்ஸா இருக்கலேப்பா. ஒண்ணாங் கிளாஸ்லேர்ந்து காலேஜ் கடைசி நாள்வரை ஒண்ணாப் படிச்சவங்க... ஒரே சமயத்தில் ஒரே கம்பெனியில் ஒரே நாள் வேலையில் சேர்ந்தவங்க... உன் தாத்தாவும் என் அப்பாவும் அதே மாதிரிச் சின்ன வயசிலேர்ந்து சிநேகமா இருந்தவா... இப்ப ரங்கன் உசிரோட இருந்திருந்தா எனக்கு எவ்வளவு ஆத்ம பலம் இருந்திருக்கும் தெரியுமா...''



பி.வி.ஆர்.

அரவிந்தனைச் சிந்திக்கவே தாரக்ராம் விட வில்லை.

'' சரி, ரங்கன்தான் போனான்... என்னோட கோமளியும் போகணுமா? எதுக்கு இந்த லோகத்துக்கு பகவான் ப்ரெஸன்டையும் கொடுத்து, அது நன்னா அழகா இருக்கப் படாதுன்னு கான்சரையும் ஏற்படுத்தறான்... இதைப் பாரு... கோமளி எப்படி இருக்கா பாரு... மொகத்திலே என்ன சாத்விகம்! கண்லே என்ன பிரகாசம் ! இவளுக்கு ஏன் கான்சர் வரணும்?''

'' விதின்னு சொல்றதைத் தவிர வேறு ஒண்ணும் தெரியலை, மாமா.''

'' விதி அவளைத் தாக்கலே அந்து. என்னைத் தாக்கியிருக்கு... எங்க பொண் மாயாவைத் தாக்கியிருக்கு. இங்கே பாரு... எட்டு வயசுப் பொண்ணு... கள்ளங் கபடு இல்லாம உன் தோளைப் பிடிச்சுண்டு பல்லெல்லாம் காட்டிச் சிரிக்கிறா... இவ இப்ப அநாதையா நிக்கறா... அவளை அம்மா மாதிரிக் கவனிச்சுக்கக்கூட என்னாலே முடியலை... ராஜம்மான்னு ஒருத்தி, பேருக்குத்தான் சமையல்காரி — அவளைப் பெத்த பொண்ணு நெனைச்சு அணைச்சுக்கறா..''

'' இப்ப மாயாவுக்கு வயசு இருபத்தி ஒண்ணு...''

'' முடிஞ்சுடுத்து.''

''நல்ல பிள்ளையா பார்த்துக் கல்யாணம் செய்து கொடுக்கலாம், இல்லியா, மாமா.''

'' என் மனசு குழம்பிப் போயிருக்கு!''

அரவிந்தன் மௌனமாக அவரைப் பார்த்தான்.

திடீரென்று தாரக்ராம் கண்களை மூடிக் கொண்டார். நிமிர்ந்திருந்த முகம் தாழ்ந்தது. குரல் கம்மியது. தனக்குள்ளேயே பேசிக் கொள்ளுவது போல ஒலி எழுந்தது. வார்த்தைகள் கோர்வையாக வரவில்லை.

'' ரங்கன் போறதுக்கு... நான் இப்ப இருக்கிற மாதிரி பாம்பேய்லே இருந்தேன். ஒரு மாச டியூட்டிக்குக் கூப்பிட்டிருந்தாங்க... திரும்பி வர்றப்ப மெயில்லே வந்தேன்.... மூணு மணி நேரம் லேட்டு... என்ன சொன்னேன்? ஹாங்... ரங்கன்... ரங்கன் போறதுக்கு ஒரு மாசம் முன்னாலே அவன் வந்தான். நான் டாக்ஸியிலிருந்து எறங்கறதைப் பார்த்து, என் பெட்டியைத் தூக்கிக்க ஓடோடி வந்தான்... பின்னாலேயே மாயாவும் வந்தா... எல்லாருமா ஹாலுக்கு வந்தோம். இப்பக்கூட நெனைவுக்கு வர்றது... டாக்ஸிக்கு ரங்கன்தான் பணம் கொடுத்தான்........ ஹால்லே கோமளி நின்னுண்டிருந்தா...... மாயா என்ன செஞ்சா தெரியுமா ? ரங்கன் மடிமேலே தாவி ஏறி ஒக்கார்ந்தா...கோமளி சிரிச்சா...

'' அவ என்ன சொன்னா தெரியுமா, அந்து? இப்ப நெனைச்சாலும் சிரிப்பும் அதே சமயத்தில் பயமும் வர்றது... அந்த பயத்தைப் போக்கறது உன் கையிலே இருக்கு..''

தாரக்ராம் இன்னும் தலை நிமிரவில்லை...

அவர் இப்போது ஒரு மாபெரும் ஓட்டலில் குளுகுளு அறையில், வசதியான இருக்கையில் கம்பீரமாக உட்காரவில்லை. இறந்து போன நாட்களுக்குப் புத்துயிர் அளித்துக் கொண்டிருந்தார்.

'' 'டீ, மாயா... மாமனார் மடியிலே ஒக்காரப்படாதுடீ... ஆம்படையான் பார்த்தா என்ன நெனைப்பான்'னு கோமளி சொல்லிச் சிரிச்சா... ரங்கன் நன்னா பேசுவான்:... 'இன்னிக்கு இப்ப என் புள்ளை அந்து தாலியைக் கட்டட்டும். பெரியவளாற வரை இவளை நான் என் மடியிலேயே வைச்சு சாதம் ஊட்டித் தூங்கப் பண்றேன்'னான்.''


அரவிந்தன் மௌனத்தில் உறைந்து போனான்.

'' 'நானும் உங்க ஒய்ஃபும், கபாலீசுவரர் கோயிலுக்குப் போயிருந்தோம். சற்பகாம்பாள் சந்நிதி. நான் கேட்டேன், ஏண்டி என் பொண் மாயாவை அந்துவுக்குக் கொடுக்க ஆசைப்படறேண்டீ... அவளை நீ ஏத்துப்பாயாடின்னு கேட்டேன்... அதுக்கு உங்க ஒய்ஃப் என்ன சொன்னா தெரியுமா? என் புள்ளை ஆறு வர்ஷம் முன்னாலே பிறந்தது எதுக்குன்னு நினைச்சே, கோமளி? மாயா உன் வயத்திலே ஜனிக்கணும்னு காத்திருக்கத்தான் ! இப்படி எல்லாம் அப்ப நம்ப குடும்பங்களிலே பேச்சு நடந்தது, அந்து !''

'' நீங்க சமாசாரத்தை இன்னும் தொடலை, மாமா '' என்றான் அரவிந்தன்.

தாரக்ராம் நிமிர்ந்தார். பார்த்தார்.

''கோமளியை நெனைச்சா, ரங்கனை நெனைச்சா எனக்கு எதுவுமே வேண்டியிருப்பதில்லை, அந்து... அவ ஏன் இப்படிப் போகணும்...? அவளுக்கு ரெண்டு பிரெஸ்ட்டும் போனாலும் பரவாயில்லை, உசிர் பிழைச்சாப் போறும்னு ஸ்விட்ஜர்லண்டுக்கு அழைச்சுண்டு போனேன்... நான் நேரு இல்லைதான். ஆனா அவ தன்னைக் கமலாவா நெனைச்சுண்டா போலிருக்கு. கமலா இந்திராவைப் பத்தி அடிக்கடி பேசின மாதிரி தெனம் தெனம் மாயாவைப் பத்தி ஓயாமப் பேசுவா... தன்னோட ரெண்டாவது எடிஷன்தான் மாயான்னு சொல்லிச் சிரிப்பா... தனக்கு உடம்பு குணமான கையோட அம்பாளுக்குத்



பியானோ கற்றுக் கொண்டிருந்த மனைவி கணவனிடம் கேட்டாள் : ''என்னுடைய பியானோவின் மேல் ஒரு பாடகரின் மார்பளவு சிலையை வைக்கலாம் என்று நினைக்கிறேன். யாருடைய சிலையை வைக்கலாம் ?''

கணவன் சொன்னான் : ''பீதோவன் சிலையை வை. அவருக்குத்தான் காது செவிடு.''

—அனிதா ராமச்சந்திரன்

தங்கத்திலே ரெண்டு மூலே பண்ணிக் கொடுக்கணும்னு... கைகால் காது சன்னெல்லாம் கொடுக்கலாம்னு இதுவும் கொடுக்கலாம்னு நெனேச்சா... அப்பக்கூட நடு நடுவே மாயா தான். கூடக் கூட, உன் பேச்சும் வரும்... ரங்கனோட புள்ளேயை விட்டுடாதீங்கோ... மாயாவை கண் இதழ்லே வைச்சு அவன் காப்பாத்துவான்... அந்து அவன் அம்மாவை மாதிரி ரொம்ப சாது. கெட்டிக்காரன்... நாளேக்கு உங்களுக்கு வயசாயிடும். உங்க இருப்பிடத்திலே அவன் இருக்கணும்... இந்த ஆசையை நீங்க, நான் போனுக்கூட நிறைவேத்தி வைக்கணும். வைப்பீர்களா? இப்படியெல்லாம் கோமளி நெக்குருகுவா, அந்து....''

'' பாவம், கோமளி, மாமி!''

'' ஒரு நாள் சாயங்காலம் அவ போனு. கடைசி வரை பேசிண்டே இருந்தா... மூனு மணிக்கு டீயும் பிஸ்கட்டும் கொடுத்தேன். 'பிஸ்கட்னு ரங்கன் புள்ளே அந்துவுக்கு உசிர். சீர் வைக்கறப்ப வெறும் லட்டுவும் முறுக்கும் மட்டும் வைக்காதீங்கோ... நாத்தி ஒன்னு டின் பிரிட்டானியா பிஸ்கட் வையுங்கோ... நைஸ், மேரி, இன் ஆரோரூட்னு எல்லா வகையும் வையுங்கோ! உம்... மாயா அரவிந்தன்! உச்சரிக்கிறதுக்கே நன்னு இருக்கு! என்ன சொல்றேள்? இப்படிப் பேசினு அன்னிக்கு...''

அரவிந்தனுக்குக் கதை புரிந்துவிட்டது. உணர்ச்சிபூர்வத்துடன் தாரக்ராம், ஒரு பெரிய கோமகுபரன், ஒரு சாதாரண வாமனனுகக் கூனிக் குறுகி, பழைய நினைவுகளேயும், மற்றவர்கள் சண்ட கனவுகளேயும் அவன் முன் எடுத்து வீசுகிறுர்! ஏன்? ஏன் அவனிடம் இதையெல்லாம் அவர் கூற வேண்டும்? ஒரே ஒரு காரணம்தான் இருக்க முடியும்.


தாரக்ராம் தம் மனைவியின் கடைசி வேண்டுகோளே, ஆசையை, நண்பர் ரங்சனுடைய விருப்பத்தை, அந்த ரங்சனுடைய மனைவியின் திட்டத்தை இப்போது நிறைவேற்றும் பணியில் காலடி எடுத்து வைக்கிறுர். இதற்குப் பலியாவது யார்? ஏன் இந்தச் சந்திப்பு சென்ற ஆண்டு நிகழவில்லே? அவனுடைய படிப்புக்கும் இன்றைய மேலான பதவிக்கும் இந்த தாரக்ராம்தான் காரணம். அன்று அவர் உதவி அளித்திராவிட்டால், பி டெக் ஏது? அமெரிக்கா ஏது? தட்டெழுத்தும், சுருக்கெழுத்தும் கற்றுக்கொண்டு ஒரு சின்ன சந்தில் ஒரு சின்ன வீட்டில், ஒரு சின்ன அறையில் அவன் காற்றைத் தேடிக் கொண்டிருப்பானே?

கோமளியின் ஆசை, அப்பாவின் விருப்பம், அம்மாவின் மனுபீஷ்டம் இதெல்லாம் நிறைவேற வேண்டும் என்று தாரக்ராம் தயாராகி விட்டார்.

ஆனுல் அவனுல் எப்படி முடியும்? வசுமதியின் கதி என்ன? அவளே விட்டால் தாரக்ராமுக்கு ஆயிரம் அரவிந்தன்கள் கிடைப்பார்கள். ஆனுல் வசுமதிக்கு? ஒரே ஒரு அரவிந்தனேத்தான் அவள் அறிவாள்.

அவனுடைய மௌனம் தாரக்ராமை அசைத்தது. நேரடியாகக் கேட்டார்.

## அடுத்த வாரம்



## MARIO பேட்டி

''எப்ப நீ பாம்பே வர்றே...? மாயாவைப் பார்க்கறே....?''

''வந்து... வந்து...''

'' உங்க ரெண்டு பேருக்குமிடையே காலம் தான் விலகிப் போயிருந்தது, அந்து. நம்ப ரெண்டு குடும்பத்தின் நட்பு விலகியே போகலே...மாயா உன்னே எதிர்பார்க்கிறுள்.''

'' நீங்க என்னேக் குழப்புகிறீர்கள்...நான்.. நான்....''

'' நீ உன் ஃப்யூச்சரைக் கொஞ்சம் நெனேச்சுப் பார்..... எனக்கு ஏற்கனவே ஒரு அட்டாக் வந்தாச்சு.... இட் ஈஸ் ஏ வார்னிங் பெல்....நான் மெல்ல மெல்ல பொறுப்புகளே சரியான கையில் ஒப்படைக்கணும்னு அந்தக் கை, இதோ இந்தக் கைதான்....'' இமரென்று தாரக்ராம் அவனுடைய இரு கைகளேயும் தம் கைக்குள் அடக்கிக் கொண்டார்.

'' மாயாவோட நான் சின்ன வயசிலே விளேயாடினது உண்மைதான். ஆனுல் இப்ப இப்ப.... அவளே...''

'' பெரிய தங்கத் தட்டிலே வைரப் பதக்கத்தை நான் தரேன்.:. நாட் ஆஸ் எ கம்பெனி சேர்மன்... ஆஸ் எ குட் ஓல்ட் ஃபேமிலி ஃப்ரெண்ட்.''

தாரக்ராமின் கண்களிலிருந்து நீர் கசிந்தது.

அவனுக்காகவா அவர் இப்படிக் கனிந்து கசிகிறுர்?

உண்மையாகவே மாயா அவனே எதிர் பார்க்கிறுளா?

என்ன பதிலேச் சொல்ல?

எப்படிச் சொல்ல?

அரவிந்தன் யோசித்தான்.

(தொடரும்)



**பதக்கம் பெற்றும் பலனில்லை!**

1980—ஆம் ஆண்டு நடந்த தொழில் நுட்பத் தேர்வில் வார்பியல் பிரிவில் தமிழ் நாட்டிலேயே முதல் மாணவனாகத் தேறினேன். வெண்கலப் பதக்கம் கிடைத்தது. ஆனால் இன்று வரை வேலை கிடைக்கவில்லையே!

**டி. நடராஜன், சென்னை-11**

**சிறகொடிந்த குயில்**

இசையே உலகமாய் ஒரு கலையின்றிப் பாடிப் பறந்து மகிழ்ந்த என்னைப் புக்கத்து மனிதர்கள் சிறகொடிந்த பறவையாக்கி விட்டார்கள். மேடையேறிப் பாடுதல் கௌரவக் குறைவாம்!

**ஜெயா வெங்கட்ராமன், ஹைதராபாத்-32**

**பேசிப் பயனில்லை**

வீட்டிலும் உழைத்துவிட்டு, வேலைக்குப் போய் வியர்வை சிந்திச் சம்பாதித்து வரும் பணத்தைச் செலவு செய்ய மட்டும் உரிமை கிடையாது. சம்பளத்தை அப்படியே கணவ


**மூத்தா உதிர்ந்து விடும்?**

லட்டு, பாதுஷா என்று வகை வகையாக செய்து போட்டாலும் ஒரு வார்த்தைகூடப் பாராட்டாமல் மௌனமாகச் சாப்பிடுவார் என் கணவர். 'நன்றாயிருக்கிறது' என்று ஒரு வார்த்தை சொன்னால் அவருக்குக் குறைவு ஏற்படாது. என் குறையும் தீரும்!

**வசந்தா வேணுகோபால், சென்னை—8**

**வேண்டும் விமோசனம்**

இந்தியா சுதந்திரம் அடைந்தது முதல் எங்கள் ஊரான வந்தவாசி தனித் (ரிசர்வ்)



தொகுதியாகவே இருந்து வருகிறது. இதனால் முன்னேற்றம் ஏதும் ஏற்படாமலேயே இருக்கிறது. என்றைக்கு வந்தவாசி பொதுத் தொகுதி ஆகிறதோ அன்று தான் எங்களுக்கு விமோசனம்.

**ஆர். மங்கை, வந்தவாசி**

**சாந்நித்யம் குறைகிறது!**

இந்து மதக் கோயில்களுக்கும்வழிபாட்டுத் தலங்களுக்கும் ஆண்கள் கைலி அணிந்து

இந்த முறையாவது என் குறை திருமா பார்க்க வேண்டும்.

**வி. ஜெயலட்சுமி. நாகப்பட்டினம்-1**

**தீராத குறைதான்**

பத்து ஆண்டுகளுக்கு முன் குடும்பத்தைச் செல்வச் செழிப்பில் பேணிய எங்கள் தந்தை பிற்பாடு வறுமைக் காலத்தில் சமாளிக்க இயலாமல் தவித்து உயிர் நீத்தார். அவரது நான்கு பிள்ளைகளும் வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி கண்டு இன்று ஜயக் கொடி நாட்டியுள்ளதைக் காண அவர் இல்லையே என்று நான் வருந்தாத நாளில்லை.

**எஸ். அருள்மொழி, காட்டூர்**


**பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்**

தன்னலத்தை விடுத்து ஜனதா பாரதீய ஜனதா தலைவர்கள் இணைந்துதேர் தலைச்சந்திக்காதது பெரிய குறைதான். அடுத்த ஐந்தாம் ஆண்டாவது இது திருமா பார்ப்போம்.

**எஸ். தனசேகரன், திருவள்ளூர்**

**சொல் ஒன்று செயல் ஒன்று**

பள்ளி, கல்லூரி, சான்றிதழ்கள், விண்ணப்பங்கள், வேலை விண்ணப்பங்களில் ஜாதியைக் குறிப்பிடுமாறு கேட்பது அநி



னிடம் கொடுத்துவிட வேண்டும்! சம உரிமைப் பேச்சு முழங்கி என்ன பயன்?!
**கே. சரஸ்வதி, சாமல்பட்டி**

## இந்த ஜென்மத்தில் நடக்குமா?


எனக்கு விவரம் தெரிந்து பஞ்சாயத்துத் தேர்தல் நடந்ததாக நினைவில்லை. வாழ்நாளில் ஒருமுறையாவது அத்தேர்தல் நடந்து பார்ப்பேனு?
**செ. அன்புமதியழகன், கொப்பம்பட்டி அஞ்சல்**

## அன்றும் இன்றும்

இன்றைக்கும் என் முதல்நிலைப் பள்ளி ஆசிரியரை விசுவாசத்துடன் நினைவு கூருகிறேன். ஆனுல் இன்று என்னிடம் படிக்கும் சில மாணவர்கள் அவமரியாதையோடு நடந்து கொள்வதோடு உதாசீனப்படுத்துகிருர்களே!
**எஸ். கண்ணன், வடுவூர்**

## பிறவிப் பயன்

ப்ளஸ் டூவில் 90 சதவிகிதம் மதிப்பெண்கள் வாங்கியும் முற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன் என்பதால் பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைக்கவில்லை பி. எஸ்.ஸி படித்து வருகிறேன்.
**பால ராதாகிருஷ்ணன், கும்பகோணம்-1**




கொண்டும், பெண்கள் சற்றும் பொருந்தாத, கலாச்சாரத்துக்கு ஒவ்வாத வகையில் உடுத்திக் கொண்டும் வருகிருர்கள். இதைக் கண்டிக்கவோ தட்டிக் கேட்கவோ ஆளே இல்லையே!
**பி. கே. சங்கர், கல்கத்தா-26**

## குற்றங்களும் குறையும்


சாலை விபத்துக்களை நேரில் பார்த்தவர்கள் போலீஸ் கெடுபிடிக்கும், விசாரணையால் ஏற்படும் கால விரயத்துக்கும் அஞ்சி சாட்சி கூற முன்வராமல் நழுவிவிடுகிறுர்கள். இந்நிலைக்குக் காரணமாயுள்ள போலீஸ் இலாகாவின் பேரில் நான் எனக்குக்



கோபம், சாட்சி சொல்வோர் அதனுல் பெருமையும் திருப்தியும் அடையக் கூடிய நிலை உருவாகினுல் குற்றங்கள் கூடக் குறையுமே.
**சுஜாதா ஸ்ரீநிவாசன், தஞ்சாவூர்-7**

## இதோ—குறை தீர்ந்தது!

எவ்வளவுதான் முயன்ருலும் என் எழுத்துக்கள் வாசகர் கடிதம் பகுதியில் எந்தப் பத்திரிகையிலும் இடம் பெறுவதில்லை.



வாயம். ஜாதியை ஒழிப்போம் என்று சப்பைக் கட்டு கட்டும் அரசாங்கமே இதை அனுமதிக்கிறது. சொல் ஒன்று, செயல் ஒன்று என்பதே இன்றைய நிலைமை.
**கே. கணேஷ், சென்னை-6**

## மருத்துவத் தொழிலுக்கே இழிவு

என் தகப்பனுர் பாரிச வாயுத் தாக்குதலுக்குப் பிறகு மெல்லத் தேறி வந்தார். ஓர் இரவு தலைவலி தாங்க முடியாமல் துடிக்க ஆரம்பித்து விட்டார். இரண்டு டாக்டர்களை டெலிபோனில் உதவிக்கு அழைத்தேன். இருவரும் வர மறுத்துவிட்டனர். தலைவலியால் துடித்துக் கொண்டே உயிரை விட்டார் அப்பா. இது ஆருத மனக்குறை எனக்கு.
**திருமதி வி. சி. அங்குலி, சென்னை-90**

## இப்படியா பேசுவது?

நல்ல நிலையிலிருந்த நான் தற்போது வறுமை நிலையில் தாய் வீடு சென்றிருந்தபோது வசதியாய் வாழும் என் அக்காவும் அங்கு வந்திருந்தாள். எனக்கு ஆறுதல்

கூறுவதை விடுத்து எங்கள் தாயார் முன்னமே எங்கள் இருவர் பற்றியும் ஜோசியம் கேட்ட போது என் எதிர்காலம் சிறப்பாய் இராது என்றும் அக்காவுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்றும் அறிந்ததாகக் கூறினர். வேதனையால் அடிபட்டுப்போய் நிற்கிறேன்.

**ஏ. திலகவதி, கோவை-27**

### ஒரு சத்தியம் காற்றோடு போகிறது

பச்சாபாளையத்திலிருந்து மயிலம்பட்டி, கரையாம்பாளையம், சின்னியம்பாளையம் வழியாகக் கோவை டவுன் ஹாலுக்கு டவுன் பஸ் விட்டால் பல தொழிலாளர்களுக்கு வசதியாய் இருக்கும் என்று அனைத்துக் கட்சி சார்பில் எடுத்துச் சொன்னோம். பாதை செப்பனிடப்பட்டால் பஸ் விடப்படும் என்றார்கள். பாதை சரியாகிப் பத்து மாதம் ஆகிறது. பஸ்ஸைத்தான் காணவில்லை.

**கோவை தங்கபாரதி, கோவை-19**

### சிந்தனை அடைப்பான்கள்

நர்சரிப் பள்ளிகள் பலவற்றில் தேர்வுக்கு வரக் கூடிய கணக்குகளை முன்னமே கொடுத்து மாணவர்களைப் பயிற்றுவித்துவிட்டு அதே கணக்குகளை இம்மியும் மாறாமல் பரீட்சையில் தருகிறார்கள். சிந்தித்துச் செயல்பட அல்லவா மாணவர்களைப் பழக்க வேண்டும்? இப்படிச் செய்தால் சிந்தனை எங்கே வளரும்?

**ஆர். லலிதா, திருச்சி-8**

### அன்று செய்த தவறு

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் என் தோழியும் நானும் எட்டாம் வகுப்பு இறுதிப் பரீட்சையில் ஃபெயில் ஆகிவிட்டோம். எவ்வளவு எடுத்துச் சொல்லியும் நான் மேலே படிக்க மறுத்துவிட்டேன். தோழியோ துணிந்து படித்து இன்று பட்டதாரியாக இருக்கிறாள். தாழ்வு மனப்பான்மை என்னை வாட்டுகிறது.

**வஸந்தா பரமேச்வரன், உடுமலைப்பேட்டை**

### இருள் நீங்குமா?

எத்தனையோ ஆண்டுகளாகத் தமிழகத்தில் பல முதல்வர்கள் மாறி மாறி ஆட்சிபுரிந்த போதும் தமிழகத் தலைநகரிலுள்ள எங்க சீனிவாசபுரத்திற்கு இன்னும் மின் இணைப்புக் கொடுக்கவில்லை. பல கிராமங்களுக்குக் கூட மின் தொடர்பு கிடைத்து விட்டது. நகரத்திலுள்ள பகுதிக்கு இந்த கதி.

**டி. ஏ. பெரியசாமி, சென்னை-28**

### வாய்ப்பு வீணாகிறது

மனவளர்ச்சி குன்றிய பெண் குழந்தைகளுக்கு ஏற்ற விசேஷப் பள்ளி இல்லாமல் தவித்துக் கொண்டிருந்த பெற்றோருக்கு வரப்பிரசாதமாக சென்னை பெசண்ட் நகரில் ஒருபள்ளிஆரம்பித்துள்ளபோதிலும்எனக்குத் தெரிந்த பெற்றோர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளாமல் தங்கள் குழந்தையின் எதிர்காலத்துடன் விளையாடிக் கொண்டிருக்கின்றனர்.

**டி. ஜயந்தி, சென்னை-20**

### மன்னிப்பே கிடையாது

சமீபத்திய புயலில் சிக்கிக் கொண்டு அவதிப்பட்ட ரயில் பயணிகளிடம் பிஸ்கட் பாக்கெட் நாலு ரூபாய், சாப்பாடு எட்டு ரூபாய் என்று கொள்ளை விலைக்கு விற்ற சந்தர்ப்ப வாதிகளை மன்னிக்கவே முடியாது.

**எஸ். மங்கை, ஹைதராபாத்-43**

### மெத்தனம்

மத்தியப் பிரதேசத்தில் மத்திய அரசின் பயிற்சி நிலையம் ஒன்றில் பயின்று heavy Vehicles ஓட்ட லைசென்ஸ் பெற்றேன். சென்னைக்கு வந்ததும் இங்குள்ள ஆர். டி. ஓ. அலுவலகத்தில் லைசென்சைப் புதுப்பிக்கக் கட்டணம் செலுத்தினேன். ஆறு வருடங்கள் ஆகியும் புது லைசென்ஸ் கிடைக்கவில்லை. இதனால் பல வேலை வாய்ப்புகள் கைநழுவி விட்டன.

**ஆர். மோஹன், சென்னை-11**

### கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு...

நம்மிடையே புகழ்பெற்ற பொருளாதார நிபுணர்கள் இருந்தும் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள நம் அரசுக்குத் துப்பில்லை பாருங்கள்! விலைவாசியை விஷம் போல் ஏற விட்டுவிட்டுவேடிக்கை பார்க்கின்றனர்.

**மா. இளங்கோவன், புதிய பம்பாய்**


### நகராட்சி நாகரீகம்

திருப்பூர் நகராட்சி நடத்தும் மேல்நிலைப் பள்ளி ஒன்றில் பணிபுரிகிறேன். 1978 ஜூலை முதல் என் சம்பளத்தைத் திருத்தி அமைக்கக் கோரி விடுத்த விண்ணப்பம் நகராட்சி இயக்குனரிடமிருந்து ஆணையரிடம் போய்ச் சேர மூன்று ஆண்டுகள் ஆயின. பொறுப்பில் இருந்த நபர் என் மாணவன் என்று அறிந்து சொல்லொணா வருத்தமுற்றேன்.

**எல். கணபதி, திருப்பூர்-1**

நேயர்களின் நியாயமான மனக்குறைகள் பல அடுத்த இதழிலும் இடம் பெறும். கூடவே குலுக்கல் முறையில் ராகமாலிகா பட்டுப் புடவை பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி பற்றிய விவரமும் பிரசுரமாகும்.

**வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர். பற்சிதைவை எதிர்த்திடுவீர்.**



# கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தை பெற்றிடுவீர் !

தவறாமல் கோல்கேட் உபயோகிப்பதால்,
உங்கள் குடும்பத்தினரின் பற்களுக்கு ஆரோக்கியம், வலிமை, புத்துணர்ச்சி
தரும் தூய சுவாசம் கிடைக்கிறது.
இதுவே கோல்கேட்டின் பாதுகாப்பு வளையம்.


நீங்கள் பல் துலக்கும் ஒவ்வொரு முறையும்
கோல்கேட்டின் நம்பகமான ஃபார்முலா
செயல்படுவது எப்படி என்றால்...



உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே
சிக்கிக் கொள்வதால் துர்நாற்றத்தையும்,
பற்சிதைவையும் உண்டாக்கும்
பாக்டீரியாக்கள் வளருகின்றன.



கோல்கேட்டின் ஒப்பற்ற செயல்புரியும்
நுரை ஆழ ஊடுருவிச் சென்று,
துர்நாற்றத்தை ஏற்படுத்தும் உணவுத்
துணுக்குகளையும் சிதைவு ஏற்படுத்தும்
பாக்டீரியாக்களையும் அகற்றுகிறது.



முறையாக கோல்கேட் கொண்டு பல்
துலக்குவதால் புத்துணர்ச்சி தரும்
தூய சுவாசமும், வலிமை மிகுந்த
ஆரோக்கியமும் தருகிறது.




GKAF RR4.55 Tam

ஒவ்வொரு முறையும் சாப்பிட்ட உடன்,
உங்கள் குடும்பத்தினர் தவறாமல் கோல்கேட்
கொண்டு பல் துலக்கட்டும்.
வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர்.
கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தை பெற்றிடுவீர்.

*கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும்*
*பெப்பர்மெண்ட் சுவை உங்களுக்கு விருப்பமானது !*

# நெருப்பு மலர்

## 27

**பொ**ற்கோவிலின் இரண்டாவது தளத்தில் குருநானக் நிவாஸில் தம் அறையில் அமர்ந்திருந்த ஹர்சந்த் சிங் லோங்கோவால் மிகவும் கவலையுற்றவராகக் காணப்பட்டார். முகத்தில் வருத்தத்தோடு லேசாய்க் கோபமும் இழையோடிற்று. ராணுவம் பொற்கோவிலைச் சூழ்ந்து கொண்டிருப்பதை அறிந்து உள்ளுக்குள்ளேயே எரிந்து போனார்.

''பிந்தரன்வாலேயிடம் போய் அவர் அழைத்த ராணுவ விருந்தாளிகள் பொற்கோவிலைச் சூழ்ந்து கொண்டு நிற்கிற தகவலைச் சொல்லுங்கள்...'' என்றார். அதைச் சொன்ன அந்தக் குரலில் மிதமிஞ்சிய வெறுப்பு இழையோடிற்று. எது நிகழக் கூடாது என்று அவர் கவலைப்பட்டுக் கொண்டிருந்தாரோ அது நிகழ்ந்து விட்டது. பொற்கோவிலைச் சுற்றி ராணுவத்தினர் முகாமிட்டு விட்டனர். இவை அனைத்திற்கும் காரணம் பிந்தரன்வாலே. மிகப் புனிதமான ஒரு சீக்கிய ஸ்தலத்திற்குள் ராணுவத்தினரை நுழையும்படி செய்ததற்குக் காரணம் பிந்தரன்வாலே; அவருடைய ஆட்களின் மிதமிஞ்சிய செயல்கள் பண்ணின அட்டகாசங்கள்; பறித்துக் கொண்ட அப்பாவி மக்களின் உயிர்கள்.........

சில நாட்களாகவே பஞ்சாபில் ராணுவ நடவடிக்கைஎடுக்கப்படலாம்என்பதுஅனுமானிக்கப்பட்டதுதான். அதுவும் ஜூன் 1ம்தேதி காலையில் சாதாரண உடையில் மேஜர் ஜெனரல் குல்திப்சிங்பிரார்பொற்கோவிலினுள் நுழைந்திருப்பதைச் சிலர் பார்த்துக் கொண்டு வந்து சொன்னதிலிருந்து லோங்கோவாலின் கவலையும் வருத்தமும் அதிகமாயிற்று. பிரார் வந்திருப்பதால் ராணுவ நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று ஊகித்தாரே தவிர இவ்வளவு விரைவாகச் செயல்படுவார்கள் என்றுநினைக்கவில்லை. அதுவும் முதல்நாள் இரவு பிரதம மந்திரி இந்திரா காந்தி வானொலி மூலமாக பஞ்சாப் பிரச்சினையை எந்த வித சந்தேகமோ, வருத்தமோ, இடர்பாடோ அற்று சுமுகமாக உட்கார்ந்து பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று தெரியப்படுத்தியிருந்தார்.

முதல் நாள் இரவு இப்படிச் செய்தி சொல்லியிருக்கிற போது மறுநாள் காலையில் எவ்வாறு ராணுவம் பொற்கோவிலைச் சூழ்ந்து கொண்டுவிட்டிருக்கிறது என்பது அவருக்கு ஆச்சரியமான விஷயமாகவே இருந்தது. இந்திரா காந்தி மீது இதற்காகக் கோபமேற்பட்டாலும் தவறு முழுதும் பிந்தரன்வாலேயுடையதுதான் என்கிற எண்ணமும் மனத்திற்குள் தோன்றியது.

சில காலங்களுக்கு முன்னதாகவே பிந்தரன்வாலே பொற்கோவிலினுள் தான் தங்குமிடமான அகல்தக்த்திற்குள் திருட்டுத்தனமாக ஆயுதங்களையும், தளவாடங்களையும் குவித்து வைக்கிறார் என்கிற செய்தி லோங்கோவாலின் காதுகளையும் எட்டியிருந்தது. அவரைப் பேட்டி காண வந்த சில வெளிநாட்டுப் பத்திரிக்கையாளர்கள்கூட பிந்தரன்வாலேயின் இந்த ஆயுதக் குவிப்பு பற்றிக் கேள்வி கேட்டார்கள். அப்போது லோங்கோவால் அவற்றிற்குச் சரியான பதிலாகச் சொல்லவில்லை. கண்டித்துப் பேசவில்லை.

அதற்காக லோங்கோவால்இப்போதுவருத்தப்பட்டார். தன் கடமையிலிருந்து தவறின வேதனையில் தவித்தார். புனிதமான கோவிலினுள் ஆயுத அரண் ஏற்படுத்தின போதே தடுத்திருக்க வேண்டும். கண்டித்துப் பேசியிருக்க வேண்டும். அகல்தக்த் தீவிரவாதிக் கொலையாளிகளின் பாசறையாக மாறின போதே உரத்துக் குரலெழுப்பியிருக்க வேண்



டும். ஆனால் அப்போதெல்லாம் அதைச் செய்யத் தவறி வெறும் அஹிம்ஸை — இந்து சீக்கிய ஒற்றுமை என்பதை மட்டும் சொல்லிக் கொண்டிருந்து விட்டு இப்போது, பொற்கோவிலின் நாலா பக்கமும் ராணுவம் சூழ்ந்து கொண்டிருக்கிற இந்தச் சந்தர்ப்பத்தில் வருத்தமும், வேதனையும் படுவதால் என்னலாபம் இருக்க முடியும்....?'

யோசித்து, யோசித்து லோங்கோவால் சளைத்துப் போன அதே நேரத்தில் அகல் தக்த்தினுள் சில பத்திரிகை நிருபர்களுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தார் பிந்தரன் வாலே. அந்த பதிலில் அலட்சியம் தெரித்தது. அகங்காரமும், திமிரும் வெளிப்பட்டன.

''ராணுவத்தினர் மட்டும் இந்தப் பொற்கோவிலினுள் நுழைந்து பார்க்கட்டும் — அப்புறம் இந்திரா காந்தியின் பதவி பட்டம் எல்லாம் தூள் தூளாகச் சிதறிப் போகும். அந்த அளவிற்கு நாங்கள் பாடம் கற்பிப்போம். உள்ளே நுழைகிற ஒவ்வொரு ஜவானின் உடம்பையும் கூறு போட்டுத் திருப்பி அனுப்புவோம்....''

# இந்துமதி

1983 டிஸம்பரில் அகல்தக்த் பூசாரியான கிருபால் சிங் பிந்தரன்வாலேயை உள்ளே நுழைவதற்குக்கூட அனுமதி தரவில்லை. அதுவரை பிந்தரன்வாலேவிற்கும் அகல் தக்த்தினுள் நுழைகிற தைரியம் ஏற்படவில்லை. அதன் பின்னர் பிந்தரன்வாலே உள்ளே வர மட்டும் அனுமதியளித்தார் கிருபால்சிங். உள்ளே வந்தபின் பிந்தரன் வாலே கொஞ்சம் கொஞ்சமாகத் திருட்டுத்தனமாக ஆயுதங்களைக் கடத்திக் கொண்டு வந்து அகல்தக்த்தினுள் சேர்ப்பதை அறிந்த கிருபால் சிங் அதை எதிர்த்தார். அப்போது தலையிட்டு கிருபால்சிங்கைசமாதானப்படுத்தி ஆயுதக் குவிப்பிற்கு அனுமதிக்க வைத்தவர் சிரோமணி குருத்துவாரா பிரபந்தக் கமிட்டித் தலைவரான குர்சரண் சிங் தோரா. அதை நினைத்து நினைத்து இப்போது வருத்தமும் வேதனையும் பட்டுக் கொண்டிருந்தார் தோரா. அன்று கிருபால் சிங்கின் எதிர்ப்பை ஆதரித்திருந்தால் இன்று இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது என்று தோன்ற குற்ற



உணர்வில் மேலும் குமுறிக் கொண்டிருந்தார்.

ஜூன் – 5

விடியற்காலை ஐந்து மணிக்கு மெகாபோன் வழியாகத் தனக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையை நிறைவேற்றிக் கொண்டிருந்தான் அர்ஜுன். கணீரென்ற குரலில் அழகாய் இந்தியில் பேசினான்.

'' உள்ளே பிரார்த்தனை செலுத்தப்போன பக்தர்களே, தயவுசெய்துவெளியில் வந்து விடுங்கள். உங்கள் உயிருக்கு ராணுவத்தினரான நாங்கள் உத்திரவாதமளிக்கிறோம்.... தயவுசெய்து வெளியில் வாருங்கள்...''

''அதே போல் சீக்கியத்தீவிர வாதிகளே.. உங்களுக்கும் வேண்டுகோள் விடுகிறோம். உங்களின் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டுச் சரணடைந்து விடுங்கள். சரணடைபவர்களை ராணுவம் ஒன்றும் செய்யாது....''

''பிந்தரன்வாலே அவர்களே... தங்களுக்கும், தங்களோடு உள்ளே இருக்கிற இதர சீக்கியத் தலைவர்களுக்கும்கூட சரணடையச் சொல்லி அழைப்பு விடுக்கப்படுகிறது. ராணுவம் தீவிர நடவடிக்கை எடுக்குமுன் கடைசியாக ஒரு சந்தர்ப்பம் தரப்படுகிறது. வேண்டுகோள் விடப்படுகிறது. நாலாபக்கமும் ராணுவம் சூழ்ந்து கொண்டுவிட்ட இந்த நிலைமையில் உங்களால் வேறு எதுவும் செய்ய முடியப் போவதில்லை. அதனால் சரணடைவதைத் தவிர வேறு வழி உங்களுக்கு இல்லை. ராணுவம் உங்களுக்குக் கொடுக்கிற கடைசி சந்தர்ப்பம் இது. அதை உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள். சரணடைந்து விடுங்கள்.''

அர்ஜுனின் அந்த மெகாபோன் குரலுக்கு 126 பேர்கள் மட்டுமே சரணடைந்தார்கள். மற்றவர்கள் வெளியில் வரவில்லை. சிலர் பிந்தரன்வாலேயின் ஆட்களோடு போய் ஒளிந்து கொண்டார்கள். இன்னும் சில பக்தர்கள் லோங்கோவால் தங்கியிருந்த குருநானக்நிவாஸில் போய்த் தங்கினர். அதற்குள் லோங்கோவால் கீழ் தளத்தில் இருந்த தோஹ்ராவின் அறைக்குப் போய் தோஹ்ராவுடன் சேர்ந்து துப்பாக்கிச் சத்தம் காதைத் துளைப்பதைத் தடுக்க அறையின் பெரிய மரக்கதவை இழுத்து மூடிக் கொண்டு உள்ளேயே இருந்ததால் அர்ஜுன் சரணடையச் சொல்லி விடுத்த வேண்டுகோள் அவர்களுக்குக் கேட்கவில்லை. அதனால் அவர்கள் வெளியில் வரவில்லை.

கிட்டத்தட்ட மாலை ஏழு மணி வரை பிந்தரன்வாலேவிற்கும், அவரது ஆட்களுக்கும் சரணடைய நேரம் ஒதுக்கின ராணுவத்தினர் அப்போதும் அவர்கள் சரணடையாத காரணத்தால் தாக்குதலுக்கு ஆயத்தமாயினர்.

மேஜர் ஜெனரல் பிரார் புதிய உத்தியைக் கையாளச் சொன்னார். அர்ஜுனிடம் அந்தப் பொறுப்பைக் கொடுத்தார்.

''அர்ஜுன்! Mountain Guns உபயோகித்துத் தாக்குதலைத் தொடங்கலாம். பக்கத்துக் கட்டடங்களின் மாடிகளிலிருந்து பொற்கோவிலின் தண்ணீர்த் தொட்டிகளையும், ஸ்தூபிகளையும் நோக்கிச் சுட ஆரம்பியுங்கள். அந்த இடங்களிலிருந்து தான் எதிரிகள் நம்மைத் தாக்குகிறார்கள்.''

''எஸ், சார்...''

உடனடியாக சில அதிகாரிகளையும், சிப்பாய்களையும் பிரித்துப் பக்கத்துக் கட்டடங்களுக்கு அனுப்பிய அர்ஜுன் Mountain Guns ஐ மேலே கொண்டு போய்ப் பொருத்தி படபட வென்று சுடத் தொடங்கினான். பொற்கோவிலின் மேல் மாடியில் கட்டப்பட்ட தண்ணீர்த் தொட்டியின் பக்கங்களிலிருந்தும், ஸ்தூபிகளுக்குப் பின்புறமிருந்தும் உயரத்திலிருந்து விசிறி எறியப்பட்ட சோளக்கொல்லை பொம்மைகளைப் போல் தீவிரவாதிகளின் சடலங்கள் கீழே விழ –

மேஜர் ஜெனரல் பிரார் அர்ஜுனின் தோளைத் தட்டித் தம் பாராட்டுதல்களைத் தெரியப்படுத்தினார்.

'' வெல்டன் அர்ஜுன்....இன்னும் சிறிது நேரத்தில் நாம்பொற்கோவிலுக்குள் நுழைந்து தாக்குதலைத் தொடரவேண்டும்.''

இதைக் கேட்டு அர்ஜுன் தயங்கினான். ''...பொற்கோவிலுக்குள் நுழைய நமக்கு அனுமதி கிடைத்துவிட்டதா, சார்...?''

''மிக அவசியமானால் பொற்கோவிலுக்குள் நுழையச் சொல்லி எப்போதோ உத்தரவு கிடைத்துவிட்டது. ஹர்மந்திர் சாஹிபில் தாக்குதல் நடத்த வேண்டாம் என்பதுதான் வேண்டுகோளே தவிர ,அகல்தக்த் பற்றி எந்த வேண்டுகோளும் இல்லை. எதிரிகள் பொற்கோவிலுக்குள் இருக்கிற எல்லா இடங்களையும் விட்டு விட்டு அகல்தக்தைச் சுற்றி மட்டும் முற்றுகையிட்டுத் தாக்குவதைப் பார்க்கிறபோது அவர்கள் அகல்தக்தை மட்டும்தான் காப்பாற்ற நினைக்கிறார்கள் என்பது தெரிகிறது. அதனால் பிந்தரன்வாலேயும், மற்ற ஆட்களும் அகல்தக்த்திற்குள்தான் இருக்க வேண்டும். எனவே இனி நம் இலக்கு

கோழைத்தனம், ''அது ஆபத்தில்லையா?'' என்று கேட்கும் ; சமயோசிதம், ''அதில் பயனுண்டா ?'' என்று கேட்கும் ; செருக்கு, '' அதில் புகழுண்டா ?'' என்று கேட்கும் ;
ஆனால் மனச்சாட்சி, '' அது நியாயமா?'' என்று கேட்கும் !

—புன்ஷான்

தகவல்: ''தில்தார்''



# To those golden hearts of glittering faith... INDU offers gold plated solid silver locket




To all persons joining our Chit groups as new members the locket with Goddess Meenakshi on the front and the Indu Swastik symbol on the reverse wishes you Grow Rich'. It is not just a wish., but a vow to give you all financial guidance and help from INDU the renowned Chit Fund of repute. Offer open from the auspicious day of PONGAL to 15th February, 1985.

UIPC. ICF. 2-85

## Indu Chit Funds (Madurai) Pvt.Ltd.
## Indu Financiers

H.O. 155, North Usman Road, T. Nagar
Madras-600 017. Phone: 445 529.

Branches: 32, Ranganathan Street, T. Nagar, Madras 600 017 Ph: 447 886
220, N.S.C. Bose Road, G. Town Madras 600 001, Ph: 25901
24, North Mada Street, Poonamallee Madras 600 056 Ph: 69566
22, Vanigar Street Kancheepuram 632 201 Ph: 3048
194, Vakil New Street, Madurai-625 001 Phones: 34940 & 31351
106, Big Street, Tiruvannamalai 606 601 Ph: 681
41, Thoppa Mudaliar Street, Bangalore 560 001 Ph: 579585

### Proposed Chit Groups

| | | |
|---|---|---|
| Rs. 2000 × | 50 Months. | Rs. 1,00,000 |
| Rs. 1000 × | 100 Months. | Rs. 1,00,000 |
| Rs. 250 × | 100 Months. | Rs. 25,000 |
| Rs. 1000 × | 20 Months. | Rs. 20,000 |
| Rs. 500 × | 40 Months. | Rs. 20,000 |
| Rs. 250 × | 40 Months. | Rs. 10,000 |
| Rs. 125 × | 40 Months. | Rs. 5,000 |

Special gift — a V.I.P. Brief Case for those who join our one Lakh group.
Special silver gifts for those who deposit Rs. 10,000 and above with Indu Financiers.

அகல்தக்த்தான். அகல்தக்த்தை நெருங்க வேண்டுமானல் பொற் கோவிலுக்குள் நுழைந்துதான் தீர வேண்டும். வேறு வழியில்லை. சரியாகப் பத்தரை மணிக்கு தயாள் தலைமையில் ஒரு குழு குருராம் சராயின் பக்க வாயில் வழியாகப் பொற்கோவிலினுள் நுழையட்டும். இன்னொரு பட்டாலியன் உன் தலைமையில் நூலகத்தின் பின்புற வழியாக, (எதிரிகள் இயந்திரத் துப்பாக்கிகளை வைத்து இயக்குகிற வழியாக) உள்ளே நுழைந்து விடட்டும். அதன்பின் உங்கள் உதவிக்கு லெஃப்டினன்ட் கர்னல் இஷ்ரார்கானைப்பத்து காவல் படையுடன் முன் பக்க நுழைவாசல் வழியாக உள்ளே அனுப்பி முதலில் ஹர்மந்திர் சாஹிபின் பின்பக்கமுள்ள அத்தனை அறைகளையும் காலி பண்ணச் சொல்கிறேன். என்ன...?''

'' எஸ் சார்...'' என்று சல்யூட் அடித்து உள்ளே ஓடினன் அர்ஜுன். தன்னுடன் வருவதற்கு 26 மதராஸ் சிப்பாய்களைத் தயார் செய்து உற்சாகப்படுத்தி அழைத்துக்கொண்டு புறப்பட்டபோது முதலில் அப்பாவை நினைத்துக் கொண்டான். பீல்வர் ராம்சிங். அப்புறம் கிருத்திகா மனசுக்குள் வந்து போனாள். இந்த மூன்று பேர்களின் அன்பும் தன்னைக் கவசமாகக் காப்பாற்றும் என்ற திடமான நம்பிக்கையுடன் தாக்குதலைத் தொடங்க —

மேஜர் ஜெனரல் பிரார் சொன்ன அதே போல் இஷ்ரார்கானும், தயாளும் முன் பக்க வாயில் வழியாகவும், குருராம் சராய் வழியாகவும் திட்டமிட்டபடி தாக்குதலில் அதே நேரத்தில் இறங்கினர்.

ஆனல் அர்ஜுனே, இஷ்ரார்கானே, தயாளோ கொஞ்சம்கூட எதிர்பார்க்காத விதமாக எதிரிகளின் பதில் தாக்குதல் பலமானதாக இருந்தது. கிட்டத்தட்ட 110 கஜ தூரத்திற்குள் 30 L M G துப்பாக்கிகள் பொருத்தி உபயோகித்தனர். அதைப்பார்த்து ஆர்.எஸ். தயாள் (இந்தியா பாகிஸ்தான் யுத்தத்தின்போது காட்டிய பராக்கிரமத்திற்காக மகாவீர் சக்ரா வாங்கினவர்) மிகவும் அதிர்ந்து போனார்.

'' மைகாட் ! என்னுடைய இந்த முப்பது வருட ராணுவப் பணியில் இதோ இவர்கள் உபயோகிக்கிற மாதிரி இவ்வளவு சக்தி வாய்ந்த துப்பாக்கிகளையோ, அவற்றிலிருந்து வெளி வருகிற குண்டுகளின் வேகத்தையோ நான் பார்த்ததே இல்லை.... பாகிஸ்தான் சண்டையின்போதுகூட இந்த மாதிரி ஆயுதங்கள் உபயோகிக்கப்படவில்லை. அப்படியிருக்க இவர்களுக்கு எங்கிருந்து இவ்வளவு சக்தி வாய்ந்த நவீன ஆயுதங்கள் கிடைத்தன என்பதுதான் தெரியவில்லை...'' என்று சொல்லிச் சொல்லி மாய்ந்து போனார்.

அவரைப் போலவே மேஜர் ஜெனரல் பிராரும் அதிர்ச்சிக்குள்ளானர். ஆனலும் துணிந்து முன்னேறச் சொல்லி அவர் தம் படையினருக்கு உத்தர விட்டார்.

எதிரிகள் மேல் மாடங்களின் மறைவிடங்களிலிருந்தும், ஜன்னல்களின் வழியாகவும், மறையவோ, ஒளிந்திருந்து தாக்குகிற வசதியோ அற்று தரையில் நின்றபடி முன்னேறுகிற ராணுவ வீரர்களை மிகச் சுலபமாகச்



'' பத்திரிகை ஆசிரியர் வீட்டில் பெண் எடுத்தியே எப்படி ?''

'' அதையேன் கேட்கிறே ? நாங்க கொடுத்திருந்த சீர் வரிசை லிஸ்ட்டில் பாதியை எடிட் பண்ணிட்டார்.''

—சீழை. அ. கதிர்வேல்

சுட்டு வீழ்த்தினர். ஆனலும் அர்ஜுனே, இஷ்ரார்கானே, தயாளோ தளரவில்லை... சி. எஸ். காஸ் என்ற புகை மண்டலத்தை வெளிவிட்டுப் பரப்பியபடி முன்னேற முயன்றனர்.

ஆனல் அதுவும் எதிரிகளுக்குச் சாதகமாகவும், ஒரு குருட்டு அதிர்ஷ்டமாகவும்அமைந்து போயிற்று. காற்று சி.எஸ்.காஸ் முழுவதையும் எதிர்ப் பக்கம் வீசி அடித்துக் கொண்டு போயிற்று. ராணுவத்தினரின் தாக்குதல் முயற்சி தற்கொலை முயற்சிக்குச் சமமானதாயிற்று. இஷ்ரார்கானுடன் சென்ற பத்துப் பேரும் குண்டடிபட்டு மரணமடைய வேறு வழியின்றி அவர் மீதமிருந்தமற்றவர்களுடன் திரும்பி வரவேண்டியதாயிற்று.

அதே போல் குருராம் ஸராய் வழியாக உள்ளே நுழைந்த அர்ஜுன் உயிர் சேதத்தைத் தவிர்க்க மீதமிருந்த சிப்பாய்களுடன் திரும்ப, கமாண்டரின் ரேடியோ குரலுக்குப் பணிந்து (''ஏதோ ஒரு சிவப்புக் கட்டடத்திலிருந்தும், அதைச் சுற்றின கட்டடங்களிலிருந்தும் சரமாரியாக இயந்திரத் துப்பாக்கிகள் இயங்குகின்றன. நம் பகுதியில் சேதம் அதிகம். அதனல் திரும்பி விடுவதுதான் விவேகம். தயவுசெய்து திரும்பி விடுங்கள்....'') தயாளும் மிஞ்சின சில சிப்பாய்களுடன் திரும்பி வந்துவிட —

மேஜர் ஜெனரல் பிரார் மிகுந்த கவலைக்குள்ளானர். முகம் இறுகிக் கிடந்தது. யோசித்து யோசித்து மூளை மரத்துக்கூடப் போயிற்று. மேற்கொண்டு எப்படித்தாக்கலாம் என்று ஆராய்ந்து கொண்டிருந்தபோது 'ஜூன் 6ந் தேதிக்குள் ராணுவ இயக்கம் முற்றிலும் வெற்றிகரமாக முடிவு பெற்றுவிட வேண்டும்' என்கிற உத்தரவு வர பிரார் இன்னமும் குழம்பித் தவித்துப் போனார்... (தொடரும்)

# கமலாவும் காபியும்

'கடுகு'

காப்பி போடுவது ஒரு கலை என்றால், போட்ட காப்பியை ரசித்துக் குடிப்பது மற்றொரு கலை. இந்த இரண்டு கலைகளிலும் கமலாவின் (அதாவது என் அருமை மனைவி கமலாவின்!) தேர்ச்சி அபாரமானது.

நாலு நாள் சாப்பாடு சாப்பிடாமல் இருப்பாள்; பழைய புடவைகளைப் போட்டு எவர்சில்வர் பாத்திரம் வாங்காமல் ஒரு மாதம் முழுதும் கூட இருப்பாள். தொடர்ந்தாற்போல் பதினைந்து நிமிடங்கள் என்னைத் திட்டாமல்கூட இருப்பாள்; ஆனால் காப்பி சாப்பிடாமல் அவளால் இருக்க முடியாது.

அவள் போடும் காப்பியும் பிரமாதமாக இருக்கும். டிகிரி காப்பி, டிப்ளமா காப்பி எல்லாம் பிச்சை வாங்க வேண்டும்; கன்னிச் சொட்டு காப்பி என்பார்களே, அது, கமலாவின் காப்பி என்ற இமயமலைக்கு முன், வெறும் பரங்கிமலை.

இப்படிக் காப்பி ரசிகை திலகமாகவும், காப்பி டிகாக்ஷன் பேரரசியாகவும் திகழ்ந்த கமலாவைத் திடீர் என்று ஆண்டவன் சோதனை செய்தான்.

அவ்வப்போது வயிற்றில் எரிச்சலாக இருக்கிறது என்று டாக்டரிடம் போனாள் ஒரு நாள். (வயிற்றில் எரிச்சல் வேறு; வயிற்றெரிச்சல் வேறு.) டாக்டர் பரிசோதித்து விட்டு, மறக்காமல் பீஸை வாங்கிக் கொண்ட பிறகு, ''ஹைபர் ஆஸிட் தொல்லை... காரம், காப்பி எல்லாம் கூடாது'' என்றார்.

இதைக் கேட்டு கமலா இடிந்தே போய்விட்டாள். எதிர்வீட்டு கௌசல்யா தீபாவளிக்குப் பட்டுப் புடவை வாங்கிக் கொண்டேன் என்று கூறியபோதுகூட கமலா இவ்வளவு கலங்கவில்லை. காரணம், கமலாவிற்குக் காப்பியின் மேல் அத்தனை உயிர்! காரத்தைக் கூட விட்டு விடுவாள். ஆனால் காப்பியை...?

''டாக்டர்... காப்பியைத்தானே விடணும்... விட்டுவிட்டால் போச்சு...'' என்று மிகவும் சர்வ சாதாரணமாக எவ்வித சலனமுமின்றிச் சொன்னாள் கமலா, இன்றைய நடிகையர் திலகம்!

மறு நாள் காலை. நான் பேப்பர் படித்துக் கொண்டிருக்கும்போது கமலா, காப்பி



கொண்டு வந்து கொடுத்தாள். அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்ததால், ''கமலா, அதிகம் சாப்பிட வேண்டாம். அரையே அரை கப் காப்பி சாப்பிடு... ஒன்றும் தப்பில்லை'' என்றேன்.

அடுத்த கணம் கமலா என் எதிரே இல்லை. தூணைப் பிளந்து வந்த நரசிம்ம மூர்த்திதான் காட்சி அளித்தார். ''என்ன, சொன்னீங்க... அரை கப் காப்பி... அதைவிட அரை கப் விஷத்தைக் கொடுங்கோ... காப்பி சாப்பிட்டால் உடம்புக்கு ஆகாதுன்னு டாக்டர் சொல்லி இருக்கிறார். என்னைக் கண்டாலே ஆகாது உங்களுக்கு... எதுக்கு டாக்டர் கிட்டே காண்பிச்சிங்கோ? வியாதியோ வெக்கையோ நான் எக்கேடு கெட்டுப் போறேன்.. நீங்களும் உங்க மனுஷாளும் சௌக்கியமாக இருந்தால் சரி.... எப்படித்தான் இந்த மாதிரி ஈவு இரக்கம் இல்லாமல் சொல்ல மனசு வருகிறதோ உங்களுக்கு?'' என்று கத்திக்கொண்டே உள்ளே சென்றாள். நான் ஒன்றும் பேசவில்லை. (வழக்கம்போல்!)

மறு நாள் ஒரு நண்பரின் வீட்டிற்குக் கமலாவும் நானும் சென்றோம்.

'' என்ன சாப்பிடுகிறீர்கள்? காப்பியா, டீயா, கூல்ட்ரிங்கா ?'' என்று நண்பர் கேட்டார்.

'' கூல்ட்ரிங்கே போதும். கமலாவிற்குக் காப்பி கூடாது. பெப்டிக் அல்சர்'' என்றேன். இது பெரிய தப்பு என்று எனக்கு அப்போது தெரியாது. வீட்டுக்கு வந்ததும் கமலா தனது மூன்றாவது கண்ணைத் திறந்தாள். அத்துடன், ''ஆமாம். கூல் ட்ரிங்க் போதும்னு சொல்றது. 'காப்பி வேண்டாம்; கமலாவுக்கு அல்சர்' என்று சொல்லாவிட்டால் உங்கள் தலை வெடித்தா போய்விடும் ? ஏன், உங்க

## அருள்வாக்கு

உலக சம்பந்தமான உபாயங்களைக் கொண்டே உலகுக்கு அப்பாற்பட்ட சக்தியைப் பிடிப்பதற்குத்தான் மதாசாரம் என்பது ஒரு பக்கம் உண்மையென்றாலும், ஒரு விதத்தில் அந்த ஈச்வர சக்தியை உபாயமாக வைத்துக் கொண்டு, உலக வாழ்க்கையிலே நன்மை பெறவும் காரியங்களைப் பண்ணுகிறோம். ''இப்படிப்பட்ட கட்டுத் திட்டங்களுக்கு உட்பட்டுப் பண்ணு'' என்று சாஸ்திரம் சொல்கிறபடி கட்டுப்பட்டு ஒழுங்கோடு பண்ணுகிறோம். இப்படி இதிலே நோக்கி நிற்கிற தெய்வ பக்தி, நம்பிக்கை ஆகியவற்றாலும் *Side effect* ஆக உண்டாகிற அடக்கம், ஒழுங்குமுறை இவற்றினாலும் நாம் கேட்காமலே நமக்குக் கொஞ்சம் கொஞ்சமாகச் சித்த சுத்தியும் உண்டாக ஆரம்பிக்கிறது. அதிலே மேலே மேலே தேறிப் போகிற போதுதான் தன்னாலே இது போன்ற அல்ப பலன்களுக்காக இல்லாமல் ஈசுவரனுக்காகவே மதாநுஷ்டானங்கள் பண்ண வேண்டும் என்ற பக்குவம் உண்டாகிறது.

இப்படி ஏதோ ஒரு விதத்தில் தெய்வ சிந்தனை, பூர்வீகர் ஆசாரத்தில் ஒரு சிரத்தை இவற்றோடு காரியம் பண்ணுவதற்கும் அடி முதல் நுனி வரை எங்கேயுமே தெய்வத்திற்கோ *tradition*கோ கட்டுப்படாமல் முழுக்க லௌகிகமாகவே தற்குறியாக, தறிகெட்டுக் காரியம் பண்ணுவதற்கும் ரொம்ப வித்தியாசமிருக்கிறது. அதனால்தான் லோக வாழ்க்கைக் காரணத்தையே பண்ணும் போதுகூட மதசம்பந்தமானவை ஒருத்தனுக்குச் சித்த சுத்தியைக் கொடுக்க ஆரம்பிக்கிறதென்றால், வேறுவிதமாகச் செய்வது சித்தத்தில் மேலும் அழுக்கையேற்றி அஹங்காரத் தடிப்பை ஜாஸ்தி பண்ணுகிறது.

ஒரு சின்ன திருஷ்டாந்தம் சொல்கிறேன். பலனை உத்தேசித்துத்தான் அநேக சடங்குகள் பண்ணுகிறோம். ஆனால் உத்தேசித்தபடி பணம்வரவில்லை, பிள்ளை பிறக்கவில்லை. என்ன பண்ணுகிறோம் ? அப்போதைக்கு ஒரு ஏமாற்றம் உண்டாகத்தான் செய்கிறது. ஆனால் அது ஆழமாகப் போய்விடுவதில்லை. என்ன இருந்தாலும் சாஸ்திரத்தை நம்பித்தானே செய்தோம் ! அந்த சாஸ்திரத்தின் ஆணிவேரான கொள்கை என்ன? கர்மாப்படி நடக்கும் என்பதுதானே ? ஈச்வராநுக்ரஹ பலத்தால் அந்தக் கர்மாவை நமக்குக் கொஞ்சம் ஸாதகமாக்கிக் கொள்ளலாமென்றுதான் சாஸ்திரம் சொன்ன ஏதோ ஒன்றைப் பண்ணினோம். பலிக்கவில்லை. பலிக்காவிட்டாலும் அந்த சாஸ்திரமே நம்மை, 'கர்மா ! அநுபவித்துத்தானாகணும் ' என்று தேற்றிக் கொள்ளும்படி பண்ணுகிறது. நாம் எதையோ உத்தேசித்துத் தெய்வ சம்பந்தமான ஒன்றைச் செய்தோமென்றாலும், உத்தேசம் ஃபெயில் ஆன பிற்பாடும் அந்தத் தெய்வ ஸம்பந்தத்தையும், சாஸ்திர ஆசரணையையும் அதோடு விட்டுவிடுவதற்கு மனசு வருவதில்லை. இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக நல்ல வழியிலேயே திருப்பிவிடப்படுகிறோம்.



-ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சாரிய சுவாமிகள்

அக்காவுக்கு சைனுசைடிஸ், உங்க அம்மாவுக்கு ஆர்த்ரைட்டிஸ், உங்கண்ணுவுக்கு மைக்ரைன் என்று ஏன்சொல்லலே.. கமலா வியாதிக்காரின்னு ஊரெல்லாம் டாம் டாம் போடறதிலே என்ன சந்தோஷமோ?'' என்று கத்தினுள். கண்களிலிருந்து கண்ணீரும் வந்துவிட்டது. அந்தக் கண்ணீர், கடைக்குப் போய்ப் புதிதாய் வாங்கி வந்த சைனீஸ் ஸில்க் புடவையால் துடைத்த பிறகுதான் நின்றது!

மூன்றும் நாள் காலே. கமலாவுக்கும் வேலேக்காரிக்கும் வாக்கு வாதம் நடப்பதைக் கேட்டு, '' என்ன கமலா, என்ன சமாசாரம் ?'' என்று கேட்டேன்.

'' என்னவா... இவள் வேலேயா செய்கிருள்? படு தண்டம். நாளேயிலிருந்து வேலேக்கு வரவேண்டாம்னு சொல்லிட்டேன்.''

'' அவள் வராவிட்டால் எப்படிக் கமலா?'' என்று ஆரம்பித்தேன்.


'' நான்தான் சம்பளம் இல்லாத வேலேக்காரி ஒருத்தி இருக்கிறேனே?'' என்று சொல்லியபடியே 'டொங்' கென்று சர்க்கரைப் புட்டியை மேடையில் வைத்தாள். அது சிலபல துண்டுகளாக உடைந்தது. இந்த சமயம் பார்த்துத்தானு பால்பொங்கி அடுப்பில்வழிய வேண்டும்? ''சனியன் பிடிச்ச கேஸ் அடுப்பு... பிசாசாக எரியறது. இரண்டு நிமிஷம்தான் ஆச்சு.... அதுக்குள்ளே பால் பொங்கிடுத்து. நாளேயிலிருந்து கரி அடுப்புதான்...'' என்ருள் கமலா.

அன்று மாலே டில்லியில் பிரபல டாக்டராக இருக்கும் என் நண்பர் என்னேப் பார்க்க வந்தார். அவருடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்த பிறகு, கமலாவின் கம்ப்-ளெய்ண்டைச் சொன்னேன். மூன்று நாட்களாக அவள் படுகிற அவஸ்தையையும் மற்றவர்களேப் படுத்தி வைக்கிற பாட்டையும் விவரமாகச் சொன்னேன். அவர் கமலாவைக் கூப்பிட்டு டாக்டர் என்ற முறையில் சில கேள்விகள் கேட்டுவிட்டு, ''உங்களுக்கு அல்சர் எதுவுமில்லே. வெறும் அசிடிடிதான். அசிடிடி அல்சரில் கொண்டுவிடும் என்பதால் டாக்டர் முன்ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லியிருப்பார். காரம் கூடாதுதான். கோங்குரா சட்டினி, மிளகாய் பஜ்ஜி, காரக் குழம்பு போன்றவைகளேத்தான் சாப்பிடக் கூடாது. காப்பி சாப்பிட்டால் தப்பில்லே. ஆனுல் ஒரு நாளேக்கு இரண்டு மூன்று கப் காப்பிக்கு மேல் சாப்பிடாதீர்கள். பித்தமாகிவிடும் '' என்ருர்.

''அப்படியா, டாக்டர்...'' என்று கமலா சந்தோஷித்துவிட்டு, '' இதோ, காப்பி கொண்டு வருகிறேன்'' என்று உள்ளே ஓடினுள். எப்போது கமலா புள்ளிமானுக ஆனுள்? முகத்தில் எப்படி இத்தனே புன்னகை மலர்களே வரவழைத்துக் கொண்டாள் ? உடம்பெல்லாம் உற்சாகம் விகசித்தது.

மறு நாள் காலே. பில்டரைத் தட்டும் 'டங்'கென்ற ஓசையே கோயில் மணி ஓசையாக இருந்தது. சிறிது நாழிகையில் இரண்டு கப் காப்பியுடன் கமலா வந்தாள். அவள் ஒரு கப்பும் நான் ஒரு கப்பும் காப்பியை ரசித்துச் சாப்பிட்டோம்.

# கோடை ஜோக்



**போட்டி 40:**

மேலே வெற்றிடத்தில் ஒரு ஜோக் எழுதி இந்த அரைப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஒரே ஒரு நிபந்தனே : ஜோக், கோடை காலத்தின் ஏதேனும் ஓர் அம்சத்தை மையமாகக் கொண்டிருக்கவேண்டும். பிரசுரமானுல் பரிசு. தவிர குலுக்கல் முறையில் ஒருவருக்குப் பட்டுப் புடவை. உறையின்மேல் ''கோடை ஜோக்'' என்று குறிப்பிடல் அவசியம்.

**முடிவு தேதி: 18-2-85**

இன்னும் 13 பட்டுப் புடவைகள்தான் பாக்கி. அவற்றுள் ஒன்றைப் பெற்றே ஆகவேண்டும் என்ற உறுதியோடு வாரம் தவருமல் போட்டியில் பங்கு பெறவும்.


## பட்டுப்புடவை பரிசுத் திட்டம்

என் பெயர் : ..............................


விலாசம் : ..............................

..............................

# ஒரே மாத்திரை
# வலி விரைவில் நீங்கிவிடும்



# ஸ்டாபேக்




தலைவலி, உடல் வலி, பல்வலி, கால்,
கை உளைச்சல் ஜுரம் முதலியவற்றிலிருந்து
சிறந்த நிவாரணம் அளிக்கிறது.

Adept-M/PP/101/84

# குடிகாரன் மகள்

மாரியப்பன் சாராயத்தை அவன் மனத்துக்கு மட்டுமல்ல, வாழ்க்கைக்கும் உண்மைத் தோழனாக மதித்து வருபவன். பகலெல்லாம் தொழிற்சாலையில் மாடாக உழைப்பான். பொழுது சாய்ந்து வேலை முடிந்து வரும் போது சாராயக் கடைக்குப் போய்விட்டுத் திரும்புவான்.

அன்று மாலை வழக்கம்போல் மாரியப்பன் வீட்டையடைந்தவன் முன் திண்ணையில் அமர்ந்தான்.

''இப்படி தினம் தவறும குடிச்சிக்கிட்டே வந்தா குடும்பம் முன்னுக்கு வருமா?''

''மங்காத்தா இப்ப என்ன ஆயிடுச்சுன்னு கத்தறே? இருக்கிறது ஒரு பொண்ணு! வயசு பதினாறு. அதுக்குக் கல்யாணம்ன்னு 'பண்டு' பணம் இருக்கு....''

'' நாளைக்கு நம்ம வீட்டு வாசலுக்குப் பொண்ணு இருக்குன்னு யாராவது வந்தா பொண்ணு குடிகாரன் மகன்னு வந்த வழி திரும்பிப் போவிடமாட்டாங்களாக்கும் ?''

மங்காத்தா சொன்ன வார்த்தைகள் மாரியப்பன் மண்டைக்குச் சுரீரென்று ஏறியது.

மாரியப்பன் அந்தத் தொழிற்சாலையில் 'மெஷினிஸ்ட்', கல்வி குறைவுதான். சிறுவயது முதலே வேலைக்குச் சேர்ந்துவிட்டதால் அனுபவத்தின் பேரில் நல்ல வேலைக்காரனாக விளங்கலானான். அன்று அவனுடன் வேலை செய்யும் சிநேகிதன் தன் உறவினர் ஒருவர் மகனுக்குப் பெண் வேண்டுமென்றான். அதைக் கேட்ட மாரியப்பன் தன் மகள் மரகதத்துக்கு வயது பதினாறு என்றாலும் நல்ல சம்பந்தமாக இருந்தால் பார்க்கலாம் என்று வீட்டுக்கு வந்து மங்காத்தாவுக்குச் சொல்லிவிட்டு மீண்டும் வேலைக்குப் போனான். மாலை மணி ஆறு இருக்கும். மங்காத்தா தன் மகளுக்கு நல்ல சேலையுடுத்தித் தலைவாரி கூந்தலுக்குப் பூச்சூடி அமர்த்தியிருந்தாள். முன் திண்ணையில் மாரியப்பன் அமர்ந்திருந்தான். அன்று என்னவோ குடித்துவிட்டு வரவில்லை.

எதிர்பார்த்தபடி மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் வந்துசேர்ந்தார்கள். பெண்அழகும், அடக்கமுமாக இருந்தாலும் குடிகாரன் மகள் வேண்டாம் என்று எழுந்து விட்டார்கள்.

மாரியப்பன் வேலை செய்து வரும் தொழிற்சாலையில் ஒரு இளைஞன் வேலைக்கு வந்து சேர்ந்தான். பெயர் சின்னத் தம்பி. அவனுக்கு மரகதத்தை மணம் முடித்தான்.


அன்று மாப்பிள்ளை வீட்டினுள் சின்னத் தம்பி மரகதத்தை அடித்து நொறுக்கிக் கொண்டிருந்தான். மகளின் கூச்சல் மாரியப்பனை ஆட்டிப் படைத்தது. சின்னத்தம்பி குடி போதையில் நின்றிருந்தான்.

மரகதம், ''அப்பா ! கலங்காதீங்க, என் தலைவிதி இப்படி ஆயிட்டாலும், நீங்க மாறினா, என் கணவன் குடிகாரன் என்றாலும் குடிகாரன் மகள் நான் இல்லை என்று பெருமைப்படுவேன்'' என்றாள்.

'இனி குடிக்கமாட்டேன்' என்று சத்தியம் செய்தான். அன்று முதல் மாரியப்பன் உண்மையாகவே திருந்திவிட்டான்.

இந்தத் திடீர் திருப்பத்துக்கு காரணமானதைப் பற்றி மங்காத்தா தன் மருமகனை மிகவும் பெருமையுடன் போற்றினாள்.

**லோகதிலகம் விஜயராஜ்**



வெள்ளித்திரை

# பதுமைகள் சொல்லிய படக்கதைகள் 3

மூன்றும் வாரத்தின் முதல் நாளில் ஜெய மன்மதன் போஜனை மருந்தி தாம்பூலம் தரித்து, முக்காடு அணிந்து தியேட்டரின் மூன்றும் படியில் காலை வைக்கும் போது அப்படிக்குக் காவலாயிருந்த மந்திர மனோன் மணிப் பதுமை பார்த்துக் குலுங்கக் குலுங்கச் சிரித்து, கெக்கலி கொட்டி வாய் திறந்து சொல்லிய விஷயம் யாதெனில்:

ஓகோ முக்காடு அணிந்த ஜெயமன்மதரே எங்கு போகிறீர் ? நில்லும், நில்லும், போன வாரம் இரண்டாம் படிப்பதுமை சொல்லிய கதைகளைக் கேட்டு நீரொன்றும் உணராமல், உரையாமல் ஓடிப் போனீரே ! மானபங்கமா யில்லையா ? இப் படிகளைக் கடந்து தியேட்டரில் வீற்றிருக்கும் ரசிகப் பெருமக்களைப் போல் உம்மால் விஸிலடித்து ஆர்ப்பாட்டம் செய்ய இயலுமா ? கைகொட்டி ஆரவாரந்தான் செய்ய இயலுமா ? அங்கே நடைபெறும் 'சிவப்பு நிலா' பற்றியும் அந்நிலவைப் பார்த்துப் பரவசமடைந்து சந்தோஷப்பெருக்கால் சமுத்ர ராணி உண்டாக்கும் 'அலை ஓசை' பற்றியும் சொல்கிறேன் கேளும். ரசிகப் பெருமக்கள் போல் அதனை ரசிக்கும் கபாலியாய் நீர் இருப்பின் அடுத்த படியில் ஏறும் என்றவுடன் வெள்ளம் தலையை மீறி விட்டதால் முக்காடு நீக்கி வெளிப்பட்ட ஜெயமன்மதன் செவிசாய்த்துக் கேட்ட:—

மூன்றும் படிக்குக் காவலாகிய மந்திர மனோன்மணிப் பதுமை சொல்லிய

## அலை ஓசை

கிராமத்திலிருந்து ஒரு இளைஞன் பட்டணத்திற்குப் படிக்கப் போனால் என்ன செய்ய வேண்டும்?

பி. ஏ. முடித்தவுடன் வேலை, கீலை, தேடாமல் சொந்த கிராமத்திற்கே வந்து சேர வேண்டும். உடனே வேஷ்டி கட்டி வயலில் இறங்க வேண்டும் என்றோ, முண்டாசுகட்டி, நெசவுக்கு நூல் பிடிக்க வேண்டும் என்றோ அர்த்தம் பண்ணிக் கொண்டால் அது உங்கள் அதிகப் பிரசங்கித்தனம்.

குழு ஒன்று பாறை சூழ் வறட்டுப் பிரதேசத்தில் க்ளைமாக்ஸுக்காகக் காத்திருக்கிறது.

விஜய்காந்த் வாயைத் திறந்தாலே கனல் வீசுகிறது. தமிழ் தினசரிகளின் கொட்டை எழுத்து செய்தித் தலைப்புக்களை வாய் விட்டுப் படிக்கிற மாதிரி வசனவசனங்கள். ஏனோ தானோ நளினி, காஸ் போன சோடா வாய் கவுண்டமணி, இருகுரல் மன்னன் எம். ஆர். ராதாரவி, உணர்ச்சியற்ற சங்கிலி முருகன், ஒப்புக்கு ஒரு ஜூஸ் மோகன், என்று நிறைய சரக்குள்ள நட்சத்திரங்கள் பதினாறு ரீல்களிலும் விரயமாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இளையராஜா மியூஸிக் பற்றி சொல்லியே ஆகவேண்டும், எந்தப் படத்திலும் விலை



மூன்றும் படிக்குக் காவலாகிய
மந்திர மனோன்மணிப் பதுமை சொல்லிய

## சிவப்பு நிலா

ஆம்பிளே போலீஸ்தான் மாறுவேஷத்தில் போய்க் குற்றவாளிகளைப் பிடிப்பார்களென்று கேள்விப்பட்டிருக்கிறோம். அதை அப்படியே உல்டா பண்ணி சுஜாதாவை வேஷம் போடச் செய்து குற்றவாளியைக் கையும், 'மெய்'யுமாகப் பிடித்து ஒரு புரட்சியைச் செய்திருக்கிறார் டைரக்டர். படம் பார்ப்பவர்களை முதல் இரண்டு காட்சிகளிலேயே ஏமாற்றும் கெட்டிக்காரர்தான்.

சுஜாதா, ஜெய்சங்கர் — இருவருக்கும் ராஜபார்ட். சுரேஷ் சசிகலா, சந்திரசேகர்—வனிதா இவர்களுக்கு இளவரசன், இளவரசி பார்ட். சிவசந்திரனுக்குச் சின்ன கள்ளபார்ட் வேஷம். பெரிய கள்ளபார்ட் யாராம்? இடைவேளை வரை ராஜபார்ட் என்று நினைத்திருந்த ஜெய்சங்கர்தானாம்! வேடிக்கையாயில்லை? ஜெய்சங்கரின் அந்தர்பல்டி அதிர்ச்சி நம்பர் டு ரசிகர்களுக்கு.



என்ன கதை ?

கடமையிலிருந்து வழுவாத ஒரு பெண் போலீஸ் அதிகாரி கடைசியில் தன் கணவனைக் கூடத் தீர்த்துக் கட்டுவாள் என்ற மாபெரும் நீதியை உணர்த்துவதே கதை.

போலீஸ் அதிகாரி வீட்டில் அவமானப்பட்ட சுஜாதா கணவனுடன் வீட்டிற்கு வந்து 'நாளைக்கே உங்களுக்குப் பார்வை வரலாம். ஆனா அவருக்கு வழுக்கை திருமா?' 'வழுக்கைத்தலே, வழுக்கைத்தலே, வழுக்கைத்தலே' என்று பொருமுகிறாரே, இயற்கையாய் ரசிக்கும்படி இருக்கிறது. தேவதாஸ் ஸ்டைலில் சந்திரசேகர் பாட்டிலும் கையுமாய் தத்துவம் பேசுவது கேட்கும்படியாய் இருக்கிறது.

அப்புறம் கனவுஸீன், ஸ்டண்ட் ஸீன், கண்ணீர்ஸீன் துப்பாக்கி சுடும் ஸீன், டூயட் ஸீன் என்று நிறைய ஸீன்கள். அடுக்கடுக்காய் வருகின்றன. விசில் அடிப்பவர்கள் விசில் அடிக்கிறார்கள். எஸ். எஸ். சந்திரன் ஆரம்பத்தில் சுவாரஸ்யம் தந்தாலும் போகப் போக புஸ்ஸாகிறார். சங்கர் — கணேஷ் இசை என்று சொல்லியிருக்க வேண்டாம். அப்புறம்?

எவ்வளவு சொன்னாலும் இராம. நாராயணன் அவர் பாணியை மாற்றப்போவதில்லை. சொன்னால் என்ன? சொல்லாவிட்டால் என்ன?

---

சிகப்பு சட்டை, வெள்ளை பான்ட் போட்டு நாலைந்து காட்சிக்கொரு முறை 'வேலே, வேலே' என்று கேட்க வேண்டும். மற்ற நேரமெல்லாம் இடுப்புயரப் பொடியனோடு தண்ணீர் மணல் என்று வெட்டிப் பொழுதாய்ப் போகிற ஊர் நியாயம் பற்றி நினைத்துக் கொண்டாற் போல் கேட்க வேண்டும். தூண்டிலில் தாவணி பிடித்து 'தையத்தக்கா' டூயட் ஆட வேண்டும். வசதி படைத்த 'பெரிய' மனிதர்களோடு மல்லுக்கு நின்று வம்பு செய்யவேண்டும். இன்னும் இந்த ரீதியிலேயே நிறைய வேண்டும்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

அதுதான் சிறுமுகை ரவியின் ஃபார்முலா.

விஜயகாந்திற்கு டிரஸ் மாட்டித் திரைக்கு அனுப்பி விட்டார்.

ஊர் பிரஸிடெண்ட், மாஜி மணியம், மைனர் எல்லாம் உண்டு. அவர்கள் செய்யும் கொடுமைகள், கற்பழிப்புகள் இதுபற்றியெல்லாம் தட்டிக் கேட்க இளைஞர் போகாத ட்யூன்களை எல்லாம் இங்கே தனிமையில் கட்டிவிட்டார்.

தியேட்டரில் இருக்கும் நாலு பேரும் அனுராதா டான்ஸுக்காக இருப்புக் கொள்ளாமல் இடுப்பு நெளியக் காத்திருந்து டான்ஸ் முடிந்தவுடன் கிளம்பிப் போன காட்சி. ப்ரொஜக்டர் ரூமிலிருந்தும் கேட்கும் குறட்டை சத்தம்.

பீச்சில் போய் மூன்று மணிநேரம் அலைஓசை கேட்பவர்கள் புத்திசாலிகள்.

* * *

அகோ, ஜெயமன்மதரே! ஓகோ ஜெயமன்மதரே! நில்லும்! நில்லும்! எங்கே ஓடுகிறீர்! இன்னொரு கதை சொல்கிறேன், சுவையான கதை, கேளும், கேளும்! ஜெயமன்மதரே... ஜெயமன்மதரே...

(அடுத்த வாரம் அதிர்ஷ்ட வாரமாய் இருக்கக் கடவது. ஓம், ஹ்ரீம், க்ரீம்.)

-ஜெயமன்மதன்





# ராகமாலிகா பட்டு சேலைகள்

சுகன் ஆர்கேட்,

நெ. 12பி, நாகேஸ்வரராவ் ரோடு, பனகல் பார்க் எதிரில்

தியாகராய நகர், சென்னை-600 017

(ஞாயிறு கடை உண்டு)

# அன்புள்ள ஹேமா ஆனந்ததீர்த்தன் அவர்களுக்கு,

**வ**ணக்கம்.

தங்கள் கடிதத்தில் காணப்படும் ஐயப்பாடுகளும் என் பதில்களும்:

**குமுதம் இதழ் மேல் தங்களுக்கு உள்ள கோபத்தில்...... நீங்கள் ஆத்திரம் அடைவது நியாயமல்ல.**

எனக்குக் கோபமே கிடையாது. குமுதம் வழி எமது வழியல்ல. என்றாலும் குமுதம் ஆசிரியர் குழுவினரையும், நிர்வாகத்தையும் மிகவும் வியந்து போற்றி மதிக்கிறவன் நான். அவர்கள் உழைப்பும், திறமையும் யாருக்கும் வராது. என்றாலும் அவர்கள் செய்கிற ஒரு காரியம் எங்களிடையே நிலவும் நல்லெண்ணத்தைப் பாதிக்கிறபோது நான் பேசித்தான் ஆகவேண்டியிருக்கிறது. அது முற்றிலும் நியாயமே.

**ஒரு எழுத்தாளரின் தொடர்கதைகள் ஒரே சமயத்தில் இரண்டு என்ன நாலு பத்திரிகைகளில் கூட வெளிவருவது தமிழ்ப் பத்திரிகை உலகுக்குப் புதிதல்லவே?**

ஒரே சமயத்தில் வெளிவருவதை நான் பிரச்சினையாக்கவில்லை. ஒரே சமயத்தில் ஆரம்பமாவதைத்தான் ஆட்சேபிக்கிறேன். ஓரிரு மாதங்கள் கழித்து இன்னொரு பத்திரிகையில் ஆரம்பிக்கட்டும். தடையில்லை. மேலும் புதிதல்ல, பழகிவிட்டது என்பதால் ஒரு காரியம் சரியானதாகி விடாது.

**இப்படி நிபந்தனை விதிப்பது எதற்காக?**

இதற்கான காரணங்களை ஊகிப்பது யாருக்குமே சிரமமில்லை. ஒன்றும் தெரியாதது போல் தாங்கள் கேட்பதுதான் வியப்பு.

**இதனால் சர்க்குலேஷன் பாதிக்கப்படப் போவதில்லை. எழுத்தாளர் சுதந்திரமும் தன்மானமும் பாதிக்கப்படுகிறது.**

குமுதத்துக்கோ, கல்கிக்கோ சர்க்குலேஷன் குறைவதோ, கூடுவதோ பத்திரிகை நிறுவனங்களில் உள்ள எங்கள் பிரச்னை. அதுபற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லாமலிருக்கலாம். ஆனால் எழுத்தாளர் சுதந்திரம், தன்மானம் பற்றி நீங்கள் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. எனது கோரிக்கை எழுத்தாளரின் சுதந்திரத்தையோ, தன்மானத்தையோ எப்படிப் பாதிப்பதாகும்? என் வேண்டுகோளுக்கு இணங்க ஓர் எழுத்தாளருக்குச் சம்மதமில்லையெனில் அதைச் சொல்லிவிட்டுப் போக வேண்டியதுதானே? அவரை நாங்கள் வற்புறுத்த முடியுமா என்ன? மேலும் ஓர் எழுத்தாளர் ஒரே சமயத்தில் இரு தொடர் கதைகளை இரு பத்திரிகைகளில் ஆரம்பிக்கத் தமக்குச் சுதந்திரம் உண்டு என்றால் ரொம்ப சரி, ஏற்கிறோம். அதேபோல் பத்திரிகைக்கும் சில கொள்கைகளை வகுத்துக் கொள்ள உரிமையும், சுதந்திரமும் உண்டு என்பதை நீங்கள் மறுக்க இயலுமா?

**கல்கியில் இரண்டு மூன்று வார அறிவிப்பு பார்த்த பிறகு குமுதம் இப்படி செய்திருக்க வேண்டாம் என்கிறீர்களே அவர்கள் செய்ததில் என்ன தவறு?**

நிச்சயம் தவறுதான். பி. வி. ஆர். குமுதத்துக்குத் தொடர்கதை எழுதித் தரவில்லை. மாலைமதிக்குத் தான் நாவல் எழுதிக்கொடுத்தார். அதைத் தொடர்கதையாகக் குமுதத்தில் போடுமுன்னர் ஆசிரியரின் அனுமதி பெறுவதே முறை. அப்படிப் பெறாமல் போடுவது எழுத்தாளர் சுதந்திரத்திலும், தன்மானத்திலும் தலையிடுவதாகத் தங்களுக்குத் தோன்றாதது பரிதாபம்.

**பி. வி. ஆர். தங்களுக்கு அளித்த வாக்குறுதி பற்றி அவர் குமுதத்துக்குத் தெரிவித்திருந்து அவர்கள் அலட்சியப்படுத்தியிருந்தால் தவறு என்று கூறலாம்...**

இது என்ன ஸார், விதண்டா வாதம்! மாலைமதிக்குத் தரப்பட்ட நாவலைத் தொடர்கதையாகக் குமுதத்தில் அவர்கள் வெளியிடுவார்கள் என்று பி. வி. ஆர். எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்? அதனால்தான் அவர் தாம் கல்கிக்குத் தொடர்கதை எழுதப் போவது பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கவில்லை.

**பி. வி. ஆரின் மற்றொரு நாவல் மாலைமதியில் ஜனவரியில் வந்திருக்கிறதே...**

வந்தால் என்ன ஸார்? இரண்டு நாவல்களை அவர் மாலைமதிக்கென்று எழுதித் தந்திருந்தால் அதில் என்ன தப்பு? அவருக்கு ஆற்றல் இருக்கிறது. நேரம் இருக்கிறது. எழுதுகிறார். இதையும் தீபாவளி மலர் சிறுகதையைச் சாதாரண இதழில் போடுவது போன்ற சம்பந்தமில்லாத விஷயங்களையும் பிரச்னையில் இழுத்துக் குழப்பாதீர்கள்.

**நண்பர் பி. வி. ஆர். உள்ளூர மகிழ்ச்சி அடைந்திருப்பார்!**

நண்பரைப் பற்றிய அநாகரிக வார்த்தைகள்.

**இது பிரச்னையே அல்ல...**

உங்களுக்கு இது பிரச்னையாக இல்லாமலிருக்கலாம். ஆனால் எங்களுக்கு – இந்த நிறுவனத்துக்கு மட்டுமின்றி, பொதுவாகத் தமிழ்ப் பத்திரிகை உலகுக்கே ஒரு பிரச்னையாகத் தோன்றுவதால்தான் உடைத்து விடத் தீர்மானித்தோம்.

**—ஆசிரியர், கல்கி**



ஹாலந்தில் பல இடங்களில் காணப்படும் விண்ட் மில்

## 15

அடுத்துப் போக வேண்டிய இடம் ஹாலந்து நாட்டின் தலையாய நகரமாகிய ஆம்ஸ்டர்டாம். பிரஸ்ஸல்ஸின் விமான நிலையத்திலிருந்து ஆம்ஸ்டர்டாமின் 'ஷிப்போல்' விமான நிலையத்திற்கு இரவு ஒன்பது — ஒன்பதரை மணிக்குப் போய்ச் சேருகிற மாதிரி ஒரு ஃப்ளைட்டில் என் பயணம் ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருந்தது. ஆம்ஸ்டர்டாமில் தங்குவதற்கு டஸ்ஸில்டார்ஃபிலிருந்து அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் மூலம் 'ஓட்டல் ஒனல்' இல் தங்க ஏற்பாடு செய்தாயிற்று. 'ஆந்தை' என்று பொருள்படப் பெயர் சூட்டியிருந்ததால்தான் இரவு எவ்வளவு நேரமானாலும் அந்த ஓட்டல் கொட்டக் கொட்ட விழித்திருக்கிறதோ என்று தோன்றியது.

முன்பு ஹாலந்து என்று அழைக்கப்பட்ட இப்போதைய நெதர்லண்ட்ஸில் ஆம்ஸ்டர்டாம், ராட்டர்டாம், ஹேக் ஆகியவை முக்கிய நகரங்கள். ஜெர்மனியிலிருந்து பாய்கிற ரைன் நதி கடலில் சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ள ராட்டர்டாம் நெதர்லண்ட்ஸின் மிகப் பெரிய துறைமுக நகரமாக வாய்த்துள்ளது. பிரஸ்ஸல்ஸிலிருந்து மேல் எழும்பிப் பறந்த 'சபீனு' (பெல்ஜியன் ஏர் வேஸ்) விமானம் நெதர்லண்ட்ஸில் பிரவேசித்ததுமே கீழே குறுக்கும், நெடுக்குமாகத் தண்ணீரில் கோடுகள் இழுத்த மாதிரி கால்வாய்களும், படகுகளும், பெரிய பெரிய விண்ட் மில்களும் (காற்றாடி இயந்திரங்கள்) தென்பட ஆரம்பித்தன. விண்ட் மில் என்பது ஆம்ஸ்டர் டாம் நகரத்தை ஞாபகமூட்டும் சின்னமாகவே ஆகிவிட்டது. ஏராளமான கால்வாய்களும், படகுகளும், படகுகளிலேயே வசிக்கும் பழக்கமும், நம்முடைய காஷ்மீரின் ஸ்ரீநகரை நினைவூட்டின. ஆனால், ஸ்ரீநகர் கடல் மட்டத்திற்கு மேல் பல ஆயிரம் அடி உயரத்தில் இமயமலையில் இருக்கிறது; ஆம்ஸ்டர்டாமோ கடல் மட்டத்திற்குக் கொஞ்சம் கீழே சம தரையில் இருக்கிறது.

ஓரிரு நாட்கள் தங்கத் தேவையான அத்தியாவசியச் சாமான்களை மட்டும் ஒரு சிறு பையில் எடுத்துக் கொண்டு மற்றவற்றை ஆம்ஸ்டர்டாமின் 'ஷிப்போல்' விமான நிலையத்திலேயே சாமான்கள் வைப்பதற்குரிய இடத்தில் ஒப்படைத்துவிட்டு நான் நகருக்குள் புறப்படும் கோச்சுக்காக வந்த போதே இரவு பத்து மணிக்கு மேல் ஆகியிருந்தது.

அங்கே ஆம்ஸ்டர்டாம் விமான நிலையத்திலிருந்து கே.எல்.எம். ராயல் டச் ஏர்லைன்ஸ்காரர்கள், நகரின் இரு முக்கிய பகுதிகளுக்கு இருபது நிமிஷத்திற்கு ஒரு கோச் விதம் விடுகிறார்கள். பாதாள ரயிலும் இருக்கிறது. அகாலமாகிவிட்டதால் பாதாள ரயிலில் கூட்டமே இராதென்று நான் கோச்சில் போக முடிவு செய்தேன். ஐரோப்பாவில் உள்ள முக்கிய விமான நிலையங்களின் வாசலில், கோச் புறப்படும் இடங்களில் — புறப்படும் நேரம் — வரும் நேரம் எழுதிப் போட்டிருக்கிறார்கள். அந்த நேரப்படி கோச் வருகிறது. புறப்படுகிறது. சிறு மாறுதல்கூட நேர்வதில்லை. நான் செய்த ஒரே தவறு, போய்த் தங்க வேண்டிய ஓட்டல் நகரின் எந்தப் பகுதியில் இருக்கிறது என்று தெரிந்து வைத்திராததுதான். ஓட்டல் இருந்த பகுதியிலிருந்து நேர் எதிரான திசையில் ஐம்பது கிலோமீட்டர் தூரம் போகும் ஒரு பஸ்ஸில்

ஏழு நாடுகளில்
எட்டு
வாரங்கள்

விழிப்புடன் விளங்கும்



⌘ ஆம்ஸ்டர்டாமில் ஒரு பிரசித்தமான பாருக் கால்வாய்

எஃ்ற இருந்தேன். முன்ஜாக்கிரதை உணர்வு தூண்ட, கோச்சில் ஏறுமுன் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒருவரை விசாரித்தபோது அவர் தக்க சமயத்தில் என்னைத் தடுத்தாட் கொண்டு வழிகாட்டினார்.

ஆம்ஸ்டர்டாம் பல கால்வாய்களும் படகுப் போக்குவரத்தும் உள்ள நகரமாகையினால் கால்வாய்களின் மேல் குறுக்கிடுகிற சாலைப் பாலங்கள்—பெரிய படகுகள் கடந்து போகிற நேரத்தில் மேல் நோக்கி உயர்ந்து—மற்ற நேரங்களில் கீழிறங்கிவிடுகிற விதத்தில்—அதாவது பாம்பன் பாலம் மாதிரி அமைந்திருக்கின்றன. விமான நிலையத்தில் புறப்பட்ட எங்கள் கோச் இப்படி இரண்டு மூன்று இடங்களிலே சில சில நிமிஷங்கள் காத்து நிற்கவேண்டியிருந்ததால் கடைசியாக ஆம்ஸ்டர்டாம் சென்ட்ரலில் எங்களை இறக்கி விடும்போது இரவு பதினொரு மணிக்குமேலாகி விட்டது. அங்கிருந்து ஒட்டல் ஆந்தையை அடைய என்ன செய்யலாம் என யோசித்தேன்.

ஒவ்வோர் ஊரிலும் தோராயமாக இவ்வளவு செலவழியும் என்று கணக்கிட்டு நம்மிடமுள்ள டிராவலர்ஸ் செக்கையோ, டாலரையோ அந்த ஊர் நாணயமாக மாற்றிக் கொள்கிறோம். அப்படி மாற்றுவதில் கமிஷன் கொஞ்சம் போய்விடும். செலவழியாத அளவு நிறைய லோகல் நாணயமாக மாற்றியிருந்தாலோ — திருப்பிக் கொடுத்து மறுபடி மாற்றும்போது இன்னும் கொஞ்சம் கமிஷனாகப் போய்விடும். சில்லறைக் காசுகளாகவோ, அரைகுறையாகவோ மீதமாகிய உள்ளூர் நாணயங்கள் திருப்பி மாற்றிக் கொள்ள முடியாதவை. அவை எல்லாமாகச் சேர்ந்து தாய்நாடு திரும்பும்போது நம்மிடம் அரை கிலோ அல்லது ஒரு கிலோ காசுகளாகிச் சுமையாக மீதமிருக்கும். இந்த முன் யோசனையால் நான் கையில் மாற்றி வைத்துக் கொண்டிருந்த ஐந்நூறு — அறுநூறு ஆம்ஸ்டர்டாம் கில்டர்கள் (ரூபாய் போன்றது) அளவில் செலவை முடித்துக் கொள்ள வேண்டியிருந்தது. என்னுடைய எட்டு வாரப் பயணத்தில் ஏழு நாடுகளிலும் நான் மேற்கொண்ட ஓர் அம்சப் பொருளாதாரத் திட்டம் இதுதான். இல்லாவிட்டால் பற்றாக் குறையில் வந்து முடிந்துவிடும்.

ஆம்ஸ்டர்டாம் சென்ட்ரல் ரயில் நிலைய வாசலில் வரிசையாக நின்ற டாக்ஸிகளில் ஒன்றில் ஒரு தாளில் 'ஒட்டல் ஒஸல்' என்று எழுதிக் காட்டி மீட்டர்ப்படி என்ன சார்ஜ் வரும் என்று விசாரித்தேன்.

'' அதிகம் ஆகாது! பயப்படாதீர்கள். பக்கத்தில்தான் இருக்கிறது. இருபது அல்லது இருபத்தைந்து கில்டருக்குள்தான் வரும் '' என்று ஆறுதலாகப் பதில் கிடைத்தது. அப்போதே இரவு மணி பதினொன்றரை. அடுத்த நாள் பிறப்பதற்குள்ளாவது ''ஆந்தை''யை அடைந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் நான் வரவில்லை என்று எண்ணி 'அமெரிக்கன் எக்ஸ்பிரஸ்' மூலம் செய்யப்பட்டிருந்த 'புக்கிங்கை' ஆந்தை ரத்துச் செய்துவிடலாம் என்ற பயம் வேறு இருந்தது.

'' சரி! இருபத்தைந்து கில்டர்தானே, போனால் போகிறது என்று துணிந்து டாக்ஸியில் ஏறினேன். சென்ட்ரல் ஸ்டேஷனைத் தாண்டி ஊருக்குள் நுழைந்தால் ஜெகஜ்ஜோதியாக ஊர் விழித்துக் கொண்டிருந்தது. பல வண்ண நியான் எழுத்துக்கள் பளிச்சிட்

# விந்தை உலகம்

நா. பார்த்தசாரதி

டன. ஆம்ஸ்டர்டாம் ஊரே ஆந்தை போல் விழித்துக் கொண்டிருந்தது. தெருக்கள் சந்து பொந்துகளில் புகுந்து டாக்ஸி விரைந்தது. பச்சை நிறத்தில் சிவப்புக் கண்களுடன் ஒரு பெரிய நியான் ஆந்தை பளீரென்று கண்களில் தென்பட்ட ஒரு கட்டடத்தின் முன் டாக்ஸி நின்றது. மீட்டரைப் பார்த்தேன். இருபத்திரண்டு கில்டர். புது ஊரின் 'புதுக் கரன்ஸியாகையால் ஜாக்கிரதையாக ஒரு தடவைக்கு இரு தடவையாக எண்ணி இருபத்திரண்டு கில்டர்களை டாக்ஸி டிரைவரிடம் கொடுத்துவிட்டுக் கைப் பையுடன் ஆந்தைக்குள் நுழைந்தேன். ஆந்தை. ஆந்தையின் ரிஸப்ஷன், ரிஸப்ஷனில் இருந்த இளம் ரிஸப்ஷனிஸ்ட், எல்லாருமே கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருந்தார்கள்.

நான் உள்ளே நுழைந்து என்னை அறிமுகப் படுத்திக் கொள்ளத் தொடங்குமுன்பே, ''யெஸ்... யுவர் அக்காமடேஷன் இஸ் அரேன்ஜ்ட் பை அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் ஃப்ரம் டஸ்ஸில்டார்ஃப். யு ஆர்...மிஸ்டர்'' என்று தொடங்கிச் சொல்ல முயன்று... முடியாமல் புன்னகையோடு தோள்களை ஒருகுலுக்குக் குலுக்கிக் கொண்டு... ''ஐயாம் ஸாரி! யூ ஹாவ் எ வெரி காம்ப்ளிகேடட் இண்டியன் நேம்...''என்று முடித்து ''யுவர் ரூம் இஸ் ரெடி ஃபார் ஆக்குபேஷன்'' என்று சாவியையும் ரிஸர்வேஷன் கார்டையும் எடுத்துக் கொடுத்தார்.

அறைக்குப் போய்ச் சாமான்களை வைத்து விட்டு மறுபடி அரை மணி கழித்துச் சென்ற போதும் அந்த ரிசப்ஷனிஸ்ட் உற்சாகமாக வரவேற்றுப் பேசினார். ஆம்ஸ்டர்டாமையும், சுற்றுப்புறப் பகுதியையும் பார்க்க வசதியான டூரிஸ்ட் கோச் ஏற்பாடுகளைப் பற்றி விசாரித்தேன். ஒரு விநாடிகூடத் தாமதிக்காமல், காலையில் பார்த்துக் கொள்ளலாம் என்று சாக்குப் போக்குச் சொல்லாமல்—நான் விசாரிப்பதற்காகவே காத்திருந்தவர்போல் பல்வேறு டூரிஸ்ட் கோச்களின் திட்டங்கள்—விவரங்கள் அடங்கிய ஒரு கத்தைப் பிரசுரங்களை எடுத்துக் கொடுத்து, ''உங்களுக்கு இதில் எந்த டூர் ஷெட்யூல் ஒத்து வருமோ அதைக் குறித்துக் கொடுத்தால் இப்போதே அவர்களுக்கு போன் செய்து காலையில் இங்கு வந்தே உங்களைப் 'பிக் அப்' செய்து கொள்ளும்படி ஏற்பாடு செய்துவிடுகிறேன்'' என்றார். அம்ஸ்டர்டாமும் சுற்றுப்புறங்களும் டூர் ஷெட்யூல் ஒன்று, இரண்டு, மூன்று என வரிசையாக அச்சிட்டு எந்தெந்த ஷெட்யூலில் எதை எதை எல்லாம் சுற்றிக் காண்பிக்கிறார்கள் என்று படங்கள் – நேரங்கள் குறிப்பிட்டு விளக்கங்கள் இருந்தன. என்ன கட்டணம் என்றுகூடச் சிலவற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நான் ஷெட்யூலை முடிவு செய்து குறித்துக் கொடுத்தவுடனே, ''இந்த ஷெட்யூலுக்கு மொத்தம் இருநூற்றைம்பது கில்டர் செலவாகும். அதை நீங்கள் இப்போதே தர வேண்டும் என்ற அவசியமில்லை. ஹோட்டல் பில்லுக்குப் பணம் செலுத்தும் போது சேர்த்துக் கொடுத்தால் போதுமானது. இதோ உடனே புக் பண்ணிவிடுகிறேன்'' என்று ஃபோனைச் சுழற்றினார். அந்த நள்ளிரவுச் சுறுசுறுப்பைப் பார்த்தபின் 'ஆந்தை' என்ற பெயரின் அர்த்த நிறைவு இன்னும் அதிகமாவது போல் உணர்ந்தேன்.

(தொடரும்)




கமல் பலவித கோணங்கள்

கோபமான, சாந்தமான, வேகமான,
சிரிப்பான, சிந்தனையான, அடக்கமான
கமல், கமல், கமல், கமல், கமல்!

இன்றிரவு ஜனவரி 31உ 9-30க்கு

கல்கி வழங்கும்

நேரம் நல்ல நேரம்

விவிதபாரதி சென்னை,
திருச்சி வானொலி
தயாரிப்பு: எஸ். வி. ரமணன்



● பகவான் ஸ்ரீ ரஜனீஷ் பற்றி தராசு பதில் (13—1—85 கல்கி) கொடுத்ததைக் கண்டு வருத்தம். இளைஞர்கள் விழிப்புணர்வு பெறுவதற்காகப் பல வகை (200க்கு மேல்) தியான முறைகளைக் கொடுத்தவர். பரம் பொருளை இங்கு இவ்விடமே கணத்துக்குக் கணம் அறிய முடியும் என்ற பேருண்மையை நடைமுறையில் செயல்படுத்தி வருகிறார்.

புதுக்கோட்டை ஆனந்தத்துனி

● பொதுமக்களிடம் சிக்கித் தவித்து உயிரை இழந்த சிங்க வால் குரங்குகள் பற்றிய கட்டுரை (மாணவர் பக்கம்) சிந்திக்க வைத்தது.

சென்னை-5 எஸ். சம்பத்குமார்

● நாங்கள் கொடுத்த காசு தண்டமாகி விடுவதைக் கண்டு அளவு கடந்த ஆத்திரத்தில் இருக்கிறோம். உமது விமர்சகர் ராஜாத்தி ரோஜாக்கிளி படம் பார்த்துவிட்டு நேரம் போனதே தெரியவில்லை என்கிறார். ஒரு பாண் என்றால் இப்படியா ஒரேயடியாக ஜால்ரா தட்டுவது!

சிவகாசி கே. ராகவன்

● அ. தி. மு.க.வில் தற்போது இருக்கும் தகராறுகள் போதாதா? முதல்வருக்குப் பெண்பால் என்ன என்று எம்.ஜி.ஆர். கேட்பது போல் கார்ட்டூன் போட்டு எரியும் தீயில் எண்ணெய் ஊற்றுகிறீர்களே, இது நியாயமா?

திருச்சி எம்.பி.பாலசுப்பிரமணியம்

● பசுமை, நீர்வளம் நெல்வளம் — பின் அட்டைப்படம் வெகு ஜோர்! கண்ணிற்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் ஓர் அருமையான காட்சியைப் படம் பிடித்து வெளியிட்டிருக்கிறீர்கள்.

சென்னை-4 வெ. முத்துகிருஷ்ணன்

● இருபது அம்சம் எதற்கு, இரண்டு அம்சங்களை எடுத்துக்கொண்டு தீவிரமாகச் செயலாற்றி அவற்றில் வெற்றி பெற்றால் போதாதா என்ற தங்கள் தலையங்க யோசனை சிறப்பானது.

மேலகிருஷ்ணன்புதூர் ஆர். கே. லிங்கேசன்

● சிக்கனமாக நீரைச் செலவிடுவது பற்றியும் வெள்ளத் தடுப்பு பற்றியும் தஞ்சை இணை வேளாண்மை இயக்குநர் திரு கதிர்வேல் அவர்கள் கூறிய விவரங்கள் தஞ்சை மாவட்ட விவசாயிகள் மற்றும் அனைவருக்கும் பயனளிக்கும் முறையில் சிறப்பாக இருந்தது.

கும்பகோணம் பா. கிருஷ்ணதாஸ்

● கல்கியின் அட்டைப் படத்தை அலங்கரிக்கும் ஸ்ரீநிதி மிகவும் அழகாக இருக்கிறார். அவரது நடனம் போலவே பேட்டியும் ஏ ஒன்!

தேரழுந்தூர் சி. கப்பு

● சிமெண்ட் ஊழல் நிரூபிக்கப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று துணிச்சலாகக் கூறும் நிலையில் சென்னைப் பல்கலைக் கழக துணைவேந்தர் இருக்கிறார் என்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

சென்னை-5 குமரிஜெய்

# வீடு திரும்ப வசதி தேவை

● வாசகர்களின் "தூக்கத்தில் ஓர் அனுபவம்" படிப்பதற்குச் சுகமாக இருந்தது!

மதுரை-1 பி. எல். பரமசிவம்

● மாணவர் பக்கத்தில் வெளியான இரு கட்டுரைகளும் சிந்தனையைத் தூண்டுவதாக இருந்தன.

அரூர் மு. மதிவாணன்

● குட்டிகிருஷ்ணன் கட்டுரை கடைசிக்குப் போய்விட்டாலும் முதல்தரமான கட்டுரை. ராஜாஜியின் கருத்துக்கள் நூற்றுக்கு நூறு உண்மை.

ஈரோடு ஸ்ரீராஜசௌந்திரன்

● சென்னை நகரின் முக்கிய பேருந்துத் தடங்களைக்கூட 10.00 மணியுடன் முடித்துக் கொள்கிறார்கள். சில 9-40க்கே முடிகின்றன. அதிலும் பெரும்பாலான பேருந்துகளை கடைசி 'ட்ரிப்' என்பதையும் மறந்து(?) டிரைவர்கள் முன்னாலேயே எடுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள். இரவு வீடு வந்து சேருவதற்குள் போதும் போதுமென்றாகி விடுகிறது. எல்லா தடங்களிலும் கடைசி பேருந்து 10.30 மணிக்குப் புறப்பட பல்லவன் நிர்வாகம் ஆவன செய்யுமா?

சென்னை-57 ஆ. செழியன்

(கடைசிக் கடிதம் பரிசு பெறுகிறது)

○ வண்ணை கணேசன், சென்னை-11.

? மெட்ராஸ் பாஷை யார் பேசினால் நன்றாய் இருக்கும்?

! டாப்லு மறைந்து சுழன்டுவிறு இன்னுவோ சொல்வாங்களே, இன்னாது — ஆராவா? அவரை வுட்டா வேற யாராவது அந்த கமால் வித்தை காட்ட முடியுங்களே?

? ஒரு படம் எத்தனை நாள் ஓடினால் போட்ட பணம் கிடைக்கும்?

! பத்து வாரப் படத்துக்குப் பண நஷ்டம் இடையாது. - படத்துறைப் புதுமொழி.

○ பத்மினி சுரேஷ், கோவை.

? எந்த வாழைப்பழம் சாப்பிடப் பிடிக்கும்?

! செவ்வாய்க்கிழமை விரதம். சோறு கிடையாது என்று வீட்டில் சொல்லிவிட்டால், அப்போது வயிறு கொஞ்சமாவது நிறைய பெரிதாக ஒரு பச்சை வாழைப் பழம் பிடிக்கும். போனஸ் சமயம் கையில் காசு நிறையப் புரளும் போது மலைவாழைப்பழம் பிடிக்கும். ரயில் பயணத்தின்போது கொடை ரோடில் சிறுமலைப்பழம் ஒரு டஜன் வாங்கி ஒவ்வொன்றாக விள்ளாமல் உள்ளே தள்ளப் பிடிக்கும்.

? இளம் வயதில் எத்தனை முறை பஜ்ஜி சொஜ்ஜி சாப்பிட்டிருக்கிறீர்?

! ஊஹூ ஊஹூம்! ஏக்கப் பெருமூச்சு கோவை வரை எட்டியிருக்குமே!

○ புதுவை ஷீலா, புதுவை.

? டெல்லிக்கு நேரில் வர வேண்டாம் கார்டில் கடிதம் எழுதுங்கள். பிரச்னைகளைத் தீர்க்கிறேன் என்று மரகதம் அம்மாள் கூறுவது எப்படி இருக்கிறது?

! வாக்கியத்தின் முன்பகுதி ஆச்சர்யக்குறியாகவும், பின்பகுதி கேள்விக்குறியாகவும் இருக்கிறது.

○ லட்சுமி செங்குட்டுவன், வேலூர் (சேலம்).

? இனிமேல் அரசியல் சகவாசமே தனக்குத் தேவையில்லை என்று சோக கீதம் பாடும் என் கணவருக்கு நீங்கள் கூறும் ஆறுதல்?

! பிரசவ வைராக்கியமாக முடிந்துபோகும், கவலைப்படாதீர்கள்! சில காலத்தில் மறுபடி மேடைப்பேச்சு, சவால் எதிர் சவால் என்று ஆரம்பமாகும் போது காதல் மீதுற அரசியலை மீண்டும் கட்டி அணைப்பீர்கள்.

○ எஸ். தேவராஜு, வந்தூர்.

? காதலிக்கப் பொறுமை தேவையா? திறமை தேவையா?

! காதல் தேவை.

○ கவி கண்ணன், போடிநாயக்கனூர்.

? கல்தூர் இனி என்ன செய்வார்?

! காத்திருப்பார், காலம் மாறும் என.

○ ஜோ. பன்னீர் செல்வம், காரைக்குடி.

? படித்தவர்களுக்கே வாக்குரிமை கொண்டு வந்தால்...?

! அறிவாளிகளின் ஆணவத்துக்கு அறியாதார் பலியாவார்கள் என்ற காந்திஜியின் எச்சரிக்கையைப் புறக்கணித்தவர்களாவோம்.

○ எஸ். ரவி, கும்பகோணம்.

? சபாநாயகராக பல்ராம் ஜாக்கர் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பது குறித்து...?

! பல்வேறு குண இயல்புகளைக் கொண்ட பல்வேறு மனநிலைகளில் வருகிற பல்வேறு மொழி பேசுகிற நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தட்டிக் கொடுத்தும் குட்டிக் கொடுத்தும் சமாளித்துச் சபையின் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொண்டு போவது என்பது இலேசுப்பட்ட காரியமில்லை. அதில் அவர் ஜாக் அல்ல எஸ். இதை நகைச்சுவை உணர்வோடு செய்ததால் ஜாக்கர் அல்ல ஜோக்கர்.

○ குமரி ஜெய், சென்னை-5.

? திருநாவுக்கரசு அடுத்த எஸ். டி. எஸ். ஆவாரா?

! எஸ். டி. எஸ். சாடியது தலைமையை. திருநாவுக்கரசு சாடுவது இரண்டாம் அணியை. ஆக இவர் எப்படி அவராக முடியும்? அவசரப்பட்டு விட்டதாக வருந்த இடமிருக்கலாம் என்றாலும் முன் ஜாக்கிரதையாகத் தலைவருக்குத் தண்டம் சமர்ப்பித்தும் வருகிறாரே.





○ கவர்ச்சியான நடை ○ தலைவருக்குத் தண்டம்

○ எரிமலை





எளிமையாக

○ ஆ. பூபாலன், கிருஷ்ணகிரி.

? நான் எப்போது அ. தி. மு. க. விலிருந்து விலகினேன்? என்று கேட்கிறாரே எஸ். எஸ். ஆர்.?

! Yes, Yes, R.! வேறு எப்படிப் பேசுவார்?

○ ந. சத்தியநாராயணன், அயன்புரம்.

? தங்களைக் கவர்ந்தது யாருடைய கிரிகெட் வர்ணனை?

! ஆங்கிலத்தில் நரோத்தம்புரி — சாரலைகளைத் தொகுத்துச் சொல்வதில். தமிழில் வி. ராமமூர்த்தி — கவர்ச்சியான மொழி நடையில்.

○ ஏ. எம். பழனிச்சாமி, கோவை. ★

? எது மனிதாபிமானம்?

எது மனிதாபிமானம் இல்லை என்று சொல்லும் புரிந்து கொள்வீர்களில்லையா!





○ 'ஏல்'

○ ! ?

வள்ளுவர் கோட்டம், திருவள்ளுவர் விழா. மூன்று மணியிலிருந்தே பரிசு பெறும் நூலாசிரியர்களையும் பதிப்பாளர்களையும் அழைத்துக் கொண்டிருந்தார்கள் பதிவு செய்து கொள்ள என்று. பரிசளிப்பு நடந்ததோ இரவு பத்து மணிக்கு. பரிசுத் தொகை நூல்களுக்கா இவ்வளவு பொறுமையாகக் காத்திருந்த சாதனைக்கா என்று கேட்கத் தோன்றியது. இதைவிடப் பெரிய சோகம் வயது முதிர்ந்த அறிஞர்களுக்கு உதவித் தொகை அளிப்பதாகச் சொல்லி அவர்களைப் பசியோடும் முதுமைத் தளர்ச்சியோடும் ஐந்து மணி நேரம் காத்திருக்கச் செய்தது. சத்துணவு சாம்ராஜ்யத்தில் இது மனிதாபிமானமாகப் படவில்லை என்பதோடு மேடையிலிருந்தவர்கள் இதே நேரத்தில் சாப்பியும் இதர பானங்களும் மாறி மாறி விழுங்கிக் கொண்டிருந்தது அதி அநாகரீகமாகவும் தெரிந்தது.

○ சாமு. நெல்லிக்குப்பம்.

? ஜெயலலிதா எரிமலையாக வெடித்திருக்கிறாரே?

! அடக்கி அடக்கி வைத்திருந்த மனக் குமுறல் பொங்கிப் பிரவகித்திருக்கிறது.

# நீங்கள் கேட்டவை

## — தராசு





○ கமால் வித்தை

○ Yes Yes R

அனுதாபப்படலாம் என்றாலும் அவசரப்பட்டுவிட்டார் என்றே தோன்றுகிறது. எம். ஜி. ஆர். சென்னை வர சில தினங்களேதான் இருக்கின்றன என்னும்போது பொறுமையாயிருந்திருக்கலாம். அவரைச் சந்தித்துத் தெளிவு பெற்றிருக்கலாம். தம் நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்டுமிருக்கலாம். இப்போது அவரது குற்றச்சாட்டுக்கள் அவரையே குற்றவாளியாக்கிவிட வாய்ப்பிருக்கிறது. இந்த இக்கட்டிலிருந்து அவர் மீள்வது எம். ஜி. ஆரின் பெருந்தன்மையைச் சார்ந்திருக்கிறது.

○ எஸ். சம்பத்குமார், சென்னை.

? இந்தியாவுக்கென்று உள்ள பெருமை என்ன?

! இன்னமும் ஜனநாயக நாடாக நீடித்திருப்பது.

○ ஹேமதாசன், பூண்டி.

? முத்தம் கொடுத்தால் ஆயுள் குறையுமாமே, உண்மையா?

! மூட நம்பிக்கை என்று அடியோடு ஒதுக்கிவிட முடியாது. கட்டுப்பாடின்றியும் அநாகரிக அளவிலும் முத்தங்கள் பொழிவதால் குழந்தைகளானாலும் சரி, பெரியவர்களானாலும் சரி, வியாதிகள் பரவ வாய்ப்புண்டு. ஆனால் அன்பைப் புலப்படுத்தி ஆரோக்கியமான முறையில் முத்தம் தருவது ஆயுளை நீடிக்கவே செய்யும்.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:

ஏ. எம். பழனிச்சாமி,
நியூ ராயல் பேக்கரி ஸ்டால்,
சாந்தி தியேட்டர் அருகில்,
கோவை—641 018.

**வெடித்திருக்கிறாரே ஜெயலலிதா?**

# கமல் பதில்கள்

**43. எஸ். ராஜலட்சுமி, சென்னை-63.**
**நடிகன், தியாகி, விஞ்ஞானி, எழுத்தாளன், கவிஞன் — இவர்களில் யாருடைய புகழ் காலத்தால் அழியாதது?**

காலத்தால் யார் புகழை வேணா அழிக்க முடியும். அதனால நான் 'காலத்தாலஅழிக்க முடியாத புகழ்'னு சொல்லவே மாட்டேன். பாம்ப்பை மாதிரி பூகம்பத்துல அழிஞ்சு போன ஒரு நகரம், காலத்தால் அழிக்கப் பட்ட நகரம் இருக்க வழியுண்டு. அதில் எத்தனை புகழ் வாய்ந்தவர்கள் அழிந்து போனார்களோ, நமக்குத் தெரியாது. ஸோ, புகழெல்லாம் அப்படி ஈஸியா அழிச்சுடலாம்... என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் சொல்றதுன்னா உண்மையான, ரொம்ப நாள் நீடிக்கக் கூடிய புகழ், —ஆனா மறைமுகமாகத்தான் கிடைக்கும் அவனுக்கு — விஞ்ஞானியோட புகழ். ஏன்னா, அது பயன்படுத்தப்படும். அதுக்கு அடுத்தது எழுத்தாளனுடையது. ஒரு கார்ல் மார்க்ஸ் மாதிரி... ஜீஸஸ் கிரைஸ்ட் டைப் பத்தி எழுதின அந்தப் பதிமூணு அப்போஸல்களும் எழுத்தாளர்கள்தான். அடுத்தது கவிஞன் வருவான்.. கம்பராமாயணம் ஒரு உதாரணம். பல சமஸ்கிருத கவிதைகள்... பல ஆயிரம் ஆயிரம் வருஷங்களாக இருந்து வருவன. அதற்கு அடுத்தது தியாகி. அவன் எதற்காகத் தியாகம் செய்தான்? எந்த அரசியல் நோக்கத்துக்காக? எந்த நாட்டின் நன்மைக்காக? என்பதைப் பொறுத்து அவன் புகழின் பெருமை அமையும். தேச பக்திகள் மாறும்... ராஜராஜன் காலத்து தேசபக்தி சோழ நாட்டிலிருந்து தொடங்கி பிறகு, இந்தியா முழுதும் பரவியிருக்கிறது...இதற்கு முந்தைய—1000 ஆண்டுக்கு முன்னால் இருந்த தமிழனின் தேசபக்தி தஞ்சாவூரோடும், சுற்று வட்டாரத்தோடும் நின்றுவிடுகிறது. பாகிஸ்தான் பிரிந்து போகிறபோது அவர்கள் தியாகத்தை மறந்து விடுகிறோம், எதிரியாகிவிடுகிறார்கள். நடிகன் புகழ் அதிகமாக, வெகு விரைவாகக் கிடைச்சுட்டாக் கூட, எழுத்தாளனையும் கவிஞனையும், தியாகியையும், விட, நடிகன் என்ற ஸ்தானத்தில் அவன் புகழ் வெகு நாள் நீடிக்கும் என்று சொல்ல முடியாது. இது உண்மை; எனக்குத் தெரிந்த உண்மை. நீங்கள் உடனே சிவாஜி, எம். ஜி. ஆர்.. போன்றவர்களை உதாரணமாகச் சொல்வீர்களேயானால், அவர்கள் வெறும் நடிகர்கள் மட்டும் அல்ல. அதற்கும் அப்பாற்பட்டதில் சாதனைகள் அவர்களுக்குப் புகழ் சேர்த்திருக்கின்றன. நடிகனுடைய புகழ் நீடித்து இருக்கிறதோ இல்லையோ, அதனால பேனாவை எடுத்து எழுதிடலாம்; புதுக் கவிதை எழுதலாம், எழுத்தாளன் ஆகலாம்னு எனக்கு ஒரு ஆசை... ஏன்னா விஞ்ஞானியாகி ரேடியோவை என்னாலக் கண்டுபிடிக்க முடியாது. ஏற்கெனவே கண்டு பிடிச்சிட்டாங்க... நான் என்னத்தைப் புதுசாக் கண்டுபிடிச்சிடப் போறேன்...? வீடியோ டெக்னாலஜி எல்லாம் எனக்குப் புரியாத ஒண்ணா இருக்கு. எழுதறதுதான்



✖ ரஜினி - என் நண்பனின் பிரதிபலிப்பு

கொஞ்சம் ஈஸியா இருக்கற மாதிரி இருக்கு...

44. சி. என். வேலுச்சாமி, பொள்ளாச்சி.
உங்கள் நடிப்பைவிட, உங்கள் எழுத்து சில சமயம் சிலரிடம் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தி விடுகிறதே, அது ஏன்?

கெட்டுது போங்க! எதுல நான் சம்பாதிச்சிட்டிருக்கேனோ, அதை விட்டுட்டு வேற சைடுக்குத் திருப்பறீங்களே? இனிமே நான் எழுத்தாளனு உட்கார்ந்து சுஜாதா, பாலகுமாரன் போன்றவர்களோடு போட்டி போட எனக்குத் திறமையும், நேரமும், அதற்கான மனோபலமும், தமிழறிவும் கிடையாது. பேசாம உட்டுடுங்க நீங்க. இதையெல்லாம் பெரிசுபடுத்தி, மத்தவங்க நம்பி, என்னை எழுதச் சொல்லிடப் போறுங்க! அது வேறே!

45. ஆர். சுமதி, தெற்குப் பனையூர், திருவாரூர்.
ஏதாவது ஒரு படத்தில் ஸ்கிரிப்டில் உள்ளவற்றிற்கு மேல் நீங்கள் சொந்தமாக வசனம் பேசி, டைரக்டரிடம் பாராட்டோ அல்லது திட்டோ பெற்ற அனுபவம் உண்டா?

ஸ்கிரிப்டில் உள்ள வசனங்களை விடுத்து, அதுக்கு மேல பேசறதுங்கறது வழக்கமாக் காமெடி நடிகர்களுக்கே உரித்தான ஒரு விஷயம். வி. கே. ராமசாமி, டி. எஸ். பாலையா... என். எஸ். கிருஷ்ணன்... நாகேஷ் ... இப்படிப் பல பெரிய காமெடியன்ஸ் எல்லாம் ஸ்கிரிப்டில் கொடுத்ததை அப்படியே பேசிட்டிருந்தாங்கன்னு சொல்ல முடியாது. சில உன்னதமான ஜோக்ஸ் அவர்கள் வாயிலிருந்து சரமாரியா தெறித்து விழுந்த முத்துக்கள். படப்பிடிப்புக்கு முன்னாடி இதுதான் சொல்லுவோம்னுகூட, எதிர்பார்த்திருக்க மாட்டாங்க. 'டேக்'குல திடீர்னு அவங்களையும் அறியாம வரக்கூடிய ஒரு ஸ்பான்டேனியஸ் டயலாக். அதுதான் உண்மை. அந்த மாதிரியானவங்களுடன் பழகி, அவங்களை அண்ணாந்து பார்த்தே பழகிவிட்ட எனக்கு, ஸ்கிரிப்டை விட ஒண்ணு ரெண்டு வசனங்கள் என்னையும் அறியாமலே வரும். அது வழக்கமா இந்த இண்டஸ்ட்ரியிலே இருக்கறதுதான். ஹாலிவுட்ல முதக்கொண்டு. அதுவந்து... அதிகப்பிரசங்கம்னு ஒண்ணு இருக்கு இல்லையா? அப்படிப் பண்ணும்பொழுது அதற்கான திட்டும் வாங்கியிருக்கேன். அதிகமா அப்படி நடந்தது திரு. பாலசந்தர் அவர்கள் செட்டில்தான்... "ஏன் சார்... இப்படி சொன்னு நல்லா இருக்குமே..." என்று சொல்ல, "அசடு வழியாதே... சும்மா இரு!" என்று என்னைக் கட்டுப்படுத்தி அவர் விமர்சித்ததும் உண்டு. ஒரு டயலாக் சொல்ல, "அதுதாண்டா கமலஹாஸன்!"ன்னு சொன்னதும் உண்டு. ரெண்டும் சொல்லுவார். அதுதான் அவரிடத்தில் எனக்குப் பிடிக்கும். ஒரேயடியாக் கமலஹாஸன்னுத் தூக்கி வச்சுக்க மாட்டார். அதேநேரத்துல 'என்ன... இவன்லாம் ஒரு நடிகனு!'ன்னு உதாசீனப்படுத்தவும் மாட்டார். இந்த ட்ரீட்மெண்ட், எல்லா நடிகர்களுக்கும் அவர் காட்டக்கூடிய ஒரு ஒட்டுமொத்தமான ட்ரீட்மெண்ட். ஒரு நல்ல விஷயம் யார்ட்ட இருந்து வந்தாலும் ஏத்துக்குவார். கெட்ட விஷயமாயிருந்தா, அது யார்கிட்ட இருந்து வந்திருந்தாலும் 'ஸ்ஸ்...' என்று ஒரு சுள் கொட்டி, அது வேணும்னு விட்டுடுவார்.

46. கே. ராஜேந்திரன், கோவிந்தவாடி கிராமம்.
திரு. ரஜினிகாந்துடன் தாங்கள் நடித்த போது ஏற்பட்ட சுவையான நிகழ்ச்சி ஏதாவது உண்டா?

சுவையான நிகழ்ச்சிங்கறதைவிட, சோகமான நிகழ்ச்சின்னு வேணு சொல்லலாம். அது எங்கள் தொடர்பில் ஏற்பட்ட சோகம் இல்லே. முதன்முதலில் நான் ரஜினிகாந்த் அவர்களை 'அபூர்வ ராகங்கள்' படத்தில் சந்தித்தேன். அப்படிச் சந்திக்கும்பொழுது, என்னுடைய நண்பர் திரு. கோவிந்தராஜன் என்பவர் புற்றுநோய் வந்து மாண்டுகொண்டிருந்த நேரம்... அவர் ஒரு குறுந்தாடி வைத்திருப்பார். அதாவது ரஜினிகாந்த் 'அபூர்வ ராகங்களி'ல் வைத்திருப்பாரே அதுபோல். "இவர் சிவாஜிராவ். நடிகர். பெங்களூரிலிருந்து வந்திருக்கிறார்" என்று இண்ட்ரட்யூஸ் பண்ணிக் கைகுலுக்கும் பொழுது, அவருக்கு என்னுடைய நண்பரின் சாயல் நிறைய இருந்தது. அன்றைக்கு அந்த ஷூட்டிங் பார்க்க என்னுடைய அந்த நண்பர் கோவிந்தராஜன் வந்திருந்தார். அந்தக் காட்சி, "கான்சர் வந்து நான் செத்துக்கிட்டிருக்கேன்... எனக்கு ரொம்ப நாள் கிடையாது!"ன்னு சொல்ற காட்சி. இந்தக் காட்சியில ரஜினி சம்பந்தப்பட்டிருக்கற வசனங்களைப் பேசும்போது, இந்த கோவிந்தராஜன் அருகே இருக்கக் கூடாது என்பதற்காக நான் அடிக்கடி அவரைத் தூர உட்கார வைத்துவிட்டு வருவேன். திரும்பவும் அவர் வந்து என் கிட்ட உட்கார்ந்துக்குவார். இதுனுலேயோ, என்னவோ, ரஜினிகாந்த்தை நான் என்னுடைய நண்பனின் பிரதிபலிப்பாகப்பார்க்க ஆரம்பித்துவிட்டேன். ஆரம்பம் முதல்.

தொகுப்பு: சித்தார்த்

## நேரம் நல்ல நேரம்



# சறு தந்த சிறந்த நடிகர்



✖ ''நடிப்பில் காப்பி அடிப்ப தெல்லாம் நடக்காது. அப்படியே செய்தாலும் நிலைக்காது''

**1985** பிறக்க இரண்டு மணி நேரங்களே இருக்க, கே. கே. நகர் ஐ. ஓ. பி.யின் பின்புறம் உள்ள ராஜேஷின் வீட்டு காலிங் பெல்லை அழுத்தினேன்.

''யெஸ் கம் இன்''

வீடியோ, ஐந்தடுக்குக் கொண்ட புத்தக அலமாரி. ராஜாஜியின் ராமாயணம், பாரதம், கம்யூனிஸம் பற்றிய புத்தகங்கள்; கண்ணதாசனிலிருந்து நேற்று வரை வந்த கவிஞர்களின் மரபு, புதுக் கவிதைகளின் தொகுப்பு, சங்க இலக்கியங்கள் என்று பல வகை புத்தகங்கள் ஒரு பக்கம். பரிசுக் கேடயங்கள் கொண்ட கண்ணாடி பீரோ. அறையின் மூலையில் சவுக்கு இலைகளின் குடிசையில், குழந்தையாக ஏகநாதர்.

✖ ''மூன்றாவது நாலாவது டேக் என்றால் முதலில் செய்ததைவிட மோசமாகத்தான் போகும்!''



சுவரில் ராணுவ மேஜராகத் தொங்கிக் கொண்டிருந்தார் ராஜேஷ் (படம் : நான் நானேதான்) திரைப்படத் தயாரிப்பாளர் எஸ். ஏ. ராஜ்கண்ணு. (எனக்கு வாழ்வளித்தவர்!) இன்னொரு பக்கம் ஹாலிவுட் நடிகர் ஸ்டீவ் மெக்குவீன் (எனக்குப் பிடித்த நடிகர்)

''வணக்கம்.''

மௌனத்தை உடைத்து, லுங்கியுடன் ரொம்ப கேஷுவலாக உள்ளிருந்து வந்தார் ராஜேஷ். சாதாரணமாகப் பேசும்போதே ஆண்மையின் கம்பீரம் வெளிப்படுகிறது.

பட்டுக்கோட்டைக்கு அருகிலுள்ள அணைக்காடு என்ற அழகான கிராமத்தில் பிறந்தவர் ராஜேஷ். அம்மா டீச்சர். அப்பாவுக்குக் கல்வி இலாகாவில் வேலை. அடிக்கடி இட மாற்றங்கள். பள்ளிப் படிப்பை மதுரை மாவட்டம் சின்னமனூர் கிராமத்தில் உள்ள கிருஷ்ண ஐயர் உயர்நிலைப் பள்ளியில் முடித்தார். கல்லூரிப்படிப்பு காரைக்குடி அழகப்பா கல்லூரியில். வாத்தியாராக முதலில் வேலைக்குச் சேர்ந்தது சென்னையில் உள்ள கெல்லட் உயர்நிலைப் பள்ளியில்.

ராஜேஷுக்கு இரு சகோதரர்கள். அதில் ஒருவர் சினிமாவில் உதவி இயக்குநராக இருக்கிறார். ஒரே சகோதரி. ராஜேஷுக்கு வீட்டில் வைத்த பெயர் : சுவார்ட்ஸ் சாமுவேல்.

சொந்தத்திலேயே பெண் எடுத்துக் கல்யாணம் செய்து கொண்டிருக்கும் ராஜேஷ் கூடிய விரைவில் அப்பாவாகப் போகிறார்.



⌘ விரைவில் அப்பா ஆகப்போகிறார் ராஜேஷ்

கடின முயற்சி, உழைப்பு ஒன்றே வாழ்க்கையை உயர்த்தும் என்ற எண்ணம் கொண்டிருந்த ராஜேஷ் சமீப காலங்களில் உணர்ந்து கொண்டிருப்பது : அவைகளுடன் நல்ல நேரமும் சேர்ந்திருக்க வேண்டும்.

தற்போது ராஜேஷ் குடியிருக்கும் வீட்டில் தான் புகழின் உச்சக் கட்டத்தில் இருந்த போது (திருமணத்திற்குமுன்) நடிகை ஷோபா குடியிருந்தார்.

இனி பேட்டி...

நிருபர் : நீங்கள் நடித்த பாத்திரங்களைப் பற்றிச் சொல்லுங்களேன்.

ராஜேஷ் : 'கன்னிப் பருவத்திலே' நான் நடித்த முதல் படம். கிராமத்து வாலிபன் பாத்திரம். நல்ல அழுத்தமான பாத்திரம். 1972லிருந்தே சினிமாவில் நடிக்க முயற்சி செய்து கொண்டிருந்ததனால், ஸ்டுடியோ ஃப்னோர் போன்றவைகள் எனக்குப் புதுமையாகத் தெரியவில்லை. ஆனால் ஒரு புது முகத்துக்குண்டான எல்லா உணர்ச்சிகளும் என்னுள் இருந்தன. அடுத்த இரண்டு வருடங்களுக்கு எனக்கு நிறைய வாய்ப்புக்கள் வந்தும், படங்கள் எடுபடவில்லை.

நிரு : 'கன்னிப் பருவத்திலே' படத்தில் உங்கள் பாத்திரத்தைப் பற்றிச் சற்று விரிவாகச் சொல்ல முடியுமா ?

ரா : சுப்பையா என்ற கிராமத்து வாலிபன் வீரம் மிக்கவன். ஆனால் ஆண்மையற்றவன். நான் புதிதாக நடிக்க நுழைந்ததனால் இந்த மாதிரியான பாத்திரத்தை ஏற்று நடிக்க சற்றுப் பயப்பட்டேன். காரணம், இதே போன்ற பாத்திரங்களே தொடர்ந்து நமக்குக் கிடைக்குமோ என்று. ஆனால், மக்கள் என் நடிப்பைப் பாராட்டினார்கள். ஒரு புகழ் பெற்ற நடிகனுக்குச் சில பாத்திரங்களில் நடிக்கும்போது சில சோதனைகள் ஏற்படுவதுண்டு. மக்கள் அந்த நடிகனைச் சில தகுதிகளுக்குள் அடக்கிப் பார்ப்பதால், மோசமான கேரக்டரில் நடிப்பதற்குப் புகழ்பெற்ற நடிக, நடிகையர்கள் பயப்படுவார்கள். எனக்கு அந்த மாதிரியான பிரச்னையெல்லாம் அப்போது இல்லை. இதன் பிறகு சுமார் 20 படங்களில் நடிக்கும் வாய்ப்பு கிட்டியும் எல்லாம் தோல்வி. மனத்தில் பெரும் வேதனை. திரும்ப வாத்தியார் வேலைக்கே போய்விடலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தேன். அந்த சமயத்தில், என்னைத் திரையுலகத்தில் இருக்க வைத்தது பாக்யராஜ் ஸார்தான். 'கன்னிப் பருவத்திலே' படத்தில் அவரோடு நான் நடித்திருந்தேன். அந்த ஏழு நாட்கள் படத்தில் எனக்கு நல்ல பாத்திரத்தைக் கொடுத்ததன் மூலம் என்னைத் திரை உலகில் காப்பாற்றினார். பிறகு எனக்கு ரசிகர் செல்வாக்கைத் தேடித் தந்த படம் 'பாலசந்தரின்', 'அச்சமில்லை அச்சமில்லை'. ஒரு டிபிகல் அரசியல்வாதியின் வேஷம். ஆலய தீபம் என்ற இன்னொரு



⌘ ஐந்தடிக்குக் கொண்ட புத்தக அலமாரி





**ஆர். சி. சக்தி சொல்கிறார்:**

'சிறை' படத்தில் வரும் அந்தோணி பாத்திரத்துக்கு நான்கைந்து நடிகர்கள் பெயர் பரிசீலனைக்கு வந்தாலும் முடிவில் தயாரிப்பாளர், நான் மற்றும் யூனிட்டில் உள்ள அனைவரும் ஒருமித்த குரலில் கூறியது ராஜேஷின் பெயரைத்தான். அவருடைய உடல்வாகு அந்தப் பாத்திரத்துக்கு மிக்க பொருத்தமாக இருந்தது. அவர் நடித்த 'கன்னி பருவத்திலே' 'அந்த ஏழு நாட்கள்' படங்களைப் பார்த்து இருந்தேன். நல்ல நடிகர். அந்தோணி கேரக்டர் முரட்டுத்தனமான கேரக்டர் என்றாலும், ஆர்ப்பாட்டமில்லாத, அடக்கமான முரட்டுத்தனம். கொஞ்சம்கூட மிகைப்படுத்தாமல் பிரமாதமாக நடித்தார் ராஜேஷ். தமிழ்ப் பட உலகில் நல்ல எதிர்காலம் ராஜேஷுக்குக் காத்திருக்கிறது.

**ராஜேஷ் பற்றி பாக்கியராஜ்**

நடிப்பதற்கும், நடிகனாக வருவதற்கும் அநேகம்பேருக்கு ஆசை உண்டு. ஆனால் நடிக்க வேண்டும் என்ற அக்கறை ஒரு சிலருக்கே உண்டு. அந்த ஒரு சிலரில் திரு ராஜேஷ் ஒருவர்.

ஒவ்வொரு வார்த்தையின் உச்சரிப்பிலும் ஒழுங்கான தமிழைக் கேட்கலாம்.

அவர் முன்னைப் போன்ற முரட்டுத் தோற்றம். ஆனால் மலரைப் போல் மென்மையான இதயம்.

பொது அறிவில் கெட்டிக்காரத்தனம் நிரம்பிய ஒரு புத்தகப் புழு.

அதிர்ஷ்டம் அவரிடம் இன்னும் நெருங்கிப் பழக ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.



படம். ஸ்ரீதர் டைரக்ஷன். வயதான கேரக்டர். பால்ராஜ் சகானி, அசோக்குமார் போன்றவர்களின் நடிப்பை ஞாபகப்படுத்திக் கொண்டு ஆலய தீபத்தில் நடித்தேன். ஒரு நடிகன் நன்றாகப் புகழ்பெற்றுவிட்டான் என்றால் ஒரு 'இமேஜ்' உருவாகி அவனுக்கு ஒரே மாதிரியான பாத்திரங்கள் கிடைக்க வாய்ப்புண்டு. ஆனால் வளர்ந்து கொண்டே வரும் ஒரு நடிகனுக்குப் பலவித பாத்திரங்கள் வந்து சேரும். எதையும் ஏற்று நடிப்பது அவனுடைய திறமையைப் பொறுத்தது.

திரு : உங்களுக்கு மிகவும் புகழ் தேடித் தந்த 'சிறை' படத்தில் நீங்கள் கஷ்டப்பட்டு நடித்த காட்சி எது ?

ரா : பொதுவாகவே எல்லாக் காட்சிகளும் நன்கு வர வேண்டும் என்று கஷ்டப்பட்டுத்தான் நடிக்கிறேன். 'சிறை' படத்தைப் பொறுத்த வரை சொல்வதென்றால் பாரிச வாயு வந்து நான் பாதிக்கப்படுவதாக இருக்கும் கட்டம். ரொம்ப நிதானமாக, சிந்தித்து நடித்தேன்.

திரு : உங்கள் நடிப்பு ஒரே 'டேக்'கில் ஓ.கே. ஆகிவிடுமா ?

ரா: பெரும்பாலும் முதல் டேக்கில் ஓ.கே. ஆகிவிடும். மிஞ்சிப் போனால் இரண்டாவது டேக். மூன்று, நான்கென்றால், முதலில் செய்ததைவிட மோசமாகத்தான் போகும் !

திரு : சிறை படத்தில் 'அந்தோணி' கேரக்டர் பற்றி... ?

ரா : அந்தோணி கேரக்டர் தஞ்சாவூர் மைனர் கேரக்டர். அந்த மீசை தோற்றமுடைய ஆட்களைச் சிறிய வயதில் நான் தஞ்சாவூர்ப் பக்கம் பார்த்திருக்கிறேன். நான் இந்தப் பாத்திரத்தில் நடிக்கும்போது அந்த நினைவுகள் எனக்கு உதவி செய்தன. என்னுடைய கற்பனையும் டைரக்டரின் ஆலோசனையும் சேர்ந்து அந்தப் பாத்திரத்தைச் செய்யும் போது, மிக நன்றாக வந்தது.

திரு : 'அச்சமில்லை, அச்சமில்லை' படத்தின் அரசியல்வாதி பற்றி...?

ரா : 'உலகநாதன்' என்ற அரசியல்வாதி, மிகக் கொடூரமானவன். கொலை செய்வான், கற்பழிப்பான், கட்சி விட்டுக் கட்சி மாறுவான். ஏற்கனவே நான் சொன்னபடி 'ஒரு இமேஜை வளர்த்து வைத்துக் கொண்டிருப்பவர்கள் இந்த மாதிரியான கேரக்டரில் நடிக்க தயங்குவார்கள். ஆனால் வளரும் நடிகனான எனக்கு, இது ஒரு சவாலாக அமைந்தது. மக்களும் நன்றாக ரசித்தார்கள். திரை உலகில் என்னால் நன்றாகக் காலூன்றிக் கொள்ள முடிந்தது.

திரு : உங்களைச் சிறு வயதில் பாதித்த படங்களைப் பற்றி...?

ரா : பத்து வயதில் பார்த்த மதுரை வீரன், அன்னையின் ஆணை போன்ற படங்கள். அன்னையின் ஆணையில் சிவாஜியின் நடிப்பை ஃப்ரேம் பை ஃப்ரேமாக ரசித்தேன். மதுரை வீரனில் எம். ஜி. ஆரின் சுறுசுறுப்பான சண்டைக் காட்சிகளைப் பார்த்ததும் சினிமாவில் நுழைய வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

திரு : உங்கள் உடம்பைக் கட்டுக்கோப்பாக வைத்திருக்க என்ன செய்கிறீர்கள் ?

ரா : பத்து வருஷத்துக்குமுன் மிகவும் ஒல்லியாக இருந்தேன். சட்டையைக் கழற்றி

மார்பைக் காண்பிக்கவே எனக்கு வெட்கமாக இருக்கும். பிறகு பலவித உடற் பயிற்சிகள் செய்து உடம்பைத் தேற்றினேன். ஆனால் திரைப்படத் துறைக்கு வந்த பிறகு அளவுக்கு மீறி உடம்பு பருத்துக் கொண்டு போனதால் அதைத் தடுக்க உணவைக் குறைத்து, ஓடுவது நடப்பது, குதிப்பது என்று உடற்பயிற்சிகளைப் செய்து இப்போது ஓரளவு உடம்பைக் கட்டுப் படுத்தி வைத்திருக்கிறேன்.

நிரு : நடிப்பை 'காப்பி' அடிப்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ரா: நடிப்பில் 'காப்பி' அடிப்பதெல்லாம் நடக்காது. அப்படியே செய்தாலும் நிலைக்காது. செயற்கையாகத்தான் இருக்கும். இந்த நாட்டில் ஒரு சிவாஜி, எம்.ஜி.ஆர். ரஜனி, கமல் போதும். அதே போல் இன்னொருவர் செய்கிறேன் என்று கிளம்பி வந்தால் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இந்த விஞ்ஞானபூர்வமான உண்மையை நான் புரிந்து கொண்டிருக்கிறேன்.

நிரு: உங்களைப் பொறுத்த மட்டில் சில, குறிப்பிட்ட பாத்திரங்களில்தான் நடிக்க முடியும் என்று கருதுகிறீர்களா ?

ரா : ரசிகர்கள் ஒவ்வொரு நடிகரிடம் இருந்தும் சில குறிப்பிட்ட நடிப்புகளை எதிர் பார்ப்பார்கள். உதாரணமாக நான் 'டிஸ்கோ' டான்ஸர் வேஷத்தில் நடிப்பதை மக்கள் ரசிப்பார்கள் என்று சொல்ல முடியாது. காரணம் அந்த அளவுக்கு நான் என்னுடைய கேரக்டர்களை டெவலப் செய்து கொண்டு வந்திருக்கிறேன்.

நிரு: சினிமா நடசத்திரங்கள் அரசியலில் நுழைவது ஒரு ஃபாஷனாகிவிட்டதே, நீங்கள் அரசியலில் நுழைவீர்களா ?

ரா : இப்போதைக்கு அப்படிப்பட்ட எண்ணம் ஏதுமில்லை. அரசியலில் இறங்கித்தான் சமுதாயத்துக்குச் சேவை செய்ய முடியும் என்று நான் நினைக்கவில்லை. நாட்டு நடப்பைக் கவனித்துக் கொண்டிருக்கிறேன். நிறைய படித்துக் கொண்டிருக்கிறேன். இந்தத் துறையில் இன்னும் நன்றாக நிலைத்து நிற்க வேண்டும். அதற்கான முயற்சிகளைத்தான் இப்போது செய்துகொண்டிருக்கிறேன்.

பேட்டி: ப்ரியன்

படங்கள்: மனோ

மேலட்டை வண்ணப்படம்:

ஏ. வி. பாஸ்கர்

---

யோக்கியன் ஒருவனும், அயோக்கியன் ஒருவனும் தேர்தலில் போட்டியிட்டனர். ஒருவர் மற்றொருவரைப் பார்த்துக் கேட்டார் :

''நீ யாருக்கு வோட்டுப் போடப் போகிறாய்? யோக்கியனுக்கா இல்லே அயோக்கியனுக்கா ?''

''சந்தேகமென்ன? அயோக்கியனுக்குத்தான் !''

'' ஏங்க அப்படி ?''

'' எவன் பதவிக்குப் போனாலும் அயோக்கியன் ஆகிவிடுகிறான். எதற்காக ஒரு யோக்கியனை வீணாகக் கெடுக்க வேண்டும் ? பழைய அயோக்கியனே போகட்டும் !''

— கண்ணதாசன் கூறியது

—வெங்கட.ராமன்






'கின்னஸ்' புத்தகத்தில் இடம் பெறுவதற்குப் பலர் துடிக்கிறார்கள். பெங்களூரில் உள்ள ஒரு மருந்துக் கடை முதலாளியும் அதில் ஒருவர் ! மாத்திரைகளை எண்ணுவதில் ஒரு 'ரெகார்டு' ஏற்படுத்த பயிற்சி செய்து வருகிறார் அவர்! 100 மாத்திரைகளை 15 வினாடிகளில் எண்ணி முடித்து விடுகிறார் இவர் !


—அனிதா ராமச்சந்திரன்

---

ஜலந்தரைச் சேர்ந்த குர்நாம் சிங் என்பவர் போலியோ வாதத்தினால் ஒரு காலை இழந்தாலும் இன்னொரு காலினால் சைக்கிளில் உலகத்தைச் சுற்றிக் கொண்டு வருகிறார். 25 வயதான இவர் அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ப்ரான்ஸ் முதலிய நாடுகளுக்கும் சைக்கிளிலேயே சென்று உலக சாதனை ஏற்படுத்தியிருக்கிறார். மூங்கில் கழி ஒன்றே இவருக்குத் துணை.

நன்றி : ''ஸன்''

தகவல் : பத்மினி கிருஷ்ணன்



## பக்தி பத்திரிகைகள் வெகுமதி

எமது ருசிகரமான இனிப்பு, அல்லது கார பண்டங்களையோ நான்கு கிலோவுக்கு குறையாமல் வாங்குவோருக்கு பக்தி பத்திரிகைகள் ஒன்று ஓராண்டுக்கு வெகுமதியாக வழங்க ஏற்பாடு செய்வோம்.

**இனிப்புகள்:** பாதாம் ஹல்வா, தூத் ஹல்வா, கோதுமை ஹல்வா, சோன்பப்டி, குலாப் ஜாமூன், ரஸமலாய், லட்டு, மைசூர்பாகு, ஜாங்கிரி, சாக்லட் கேக், மங்களூர் போளி, தேங்காய் போளி, முந்திரி கதலி, பேரிவிளங்காய் உருண்டை முதலியன.

**காரம்:** கைமுறுக்கு, தட்டை, தேன்குழல், சீடை, நவரத்ன நவரத்னமிக்ஸர், உருளைக்கிழங்கு சிப்ஸ், மசாலா கடலை, சமோசா முதலியன.

**பொடிகள்:** இட்லிபொடி, பருப்புப்பொடி, ரசப்பொடி, சாம்பார் பொடி

**திருமண வைபவங்களுக்கு:** பருப்புத் தேங்காய், சீர்முறுக்கு, திரட்டுப்பால், கட்டிப்பருப்பு, காப்பரிசி, வறுபயறு முதலியன தயாரித்துத் தருகிறோம்.

## தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு, காந்திநகர், அடையாறு, சென்னை-600 020

போன்: 412557

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி, தேனாம்பேட்டை, சென்னை-18



ஸ்தாபிதம்: 1942 போன்: 2379

"சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு"

## கும்பகோணம், லலிதா பார்மஸி

(ஸ்தாபகர் – **Dr. V.R.L. சர்மா**)

(D.L. No. – 40

157, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை-609 001

தற்போது எமது பார்மஸியின் தலைமையகம் மேற்கண்ட விலாசத்தில் செயல்பட்டு வருகிறது.

தங்களுக்குத் தேவையான எமது தயாரிப்புகளை தபால் மூலமோ, நேரிலோ இவ்விடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். எமது மருந்துகள் யாவும் கீழ்க் கண்ட எமது கிளைகளிலும் கிடைக்கும்.

1. **லலிதா பார்மஸி**
39, ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை-600 017 போன்: 441454
2. **லலிதா பார்மஸி**
105, கச்சேரி ரோடு, மைலாப்பூர், சென்னை-600 004 போன்: 73007

நேரிலோ, தபால் மூலமோ வைத்ய ஆலோசனை பெற விரும்புபவர் எமது டாக்டரின் உதவியாளர் **Dr. R. தியாகராஜன்** அவர்களுடன் மயிலாடுதுறை விலாசத்துக்கு தொடர்பு கொள்ளக் கோருகிறோம்.

கடிதம் எழுதுவோர் 50Np தபால்தலை கடிதத்துடன் அனுப்பக் கோருகிறோம்.

**"எழுத்து தெளிவில்லாமலும், பதிலுக்கு 50Np ஸ்டாம்ப் அனுப்பாமலும் வரும் கடிதங்களுக்கு பதில் எழுதப்பட மாட்டாது."**

**N.B.** லலிதா பார்மஸியின் மருந்துகளும், வைத்ய ஆலோசனையும் இனி கும்பகோணத்திலிருந்து பெற இயலாது.

## மாணவர் பக்கம்

வானில்
அங்கங்கே நீலத்தின்
கவிதைப் பரவல்கள்...

மனம்
திரும்பத் திரும்ப
உன்னில் நனைகிறது!

ஞாபகச் சமவெளியில்
நடந்து நடந்து
கால்கள் வலிக்கின்றன

இதய வேர்களில்
கோர்த்திருக்கும் நீர்த்துளிகள்
விழிமலர்களிலும் துளிர்க்கின்
றன.

உன்னில் நனைந்த
உணர்வுக் குளிரில்
எண்ணம் சிலிர்க்கிறது!

மௌனப் பள்ளத்தாக்குகளில்
நின் நினைவுகளோடு நான்
சரிந்து கொண்டிருக்கிறேன்...

உன் நினைவின் வெளியில்
பறவை மிதப்பாய்ச்
சந்தோஷிக்கும் இதயத்தை
யதார்த்தத்தின் கனம்
கீழே, கீழே, கீழே, இழுக்கிறது

மண்ணில் விரிந்து கிடக்கும்
பச்சைக் கூந்தலின்
பாதை வகிட்டில்
மலர்க் குங்குமங்கள்
மங்களமாய்த் தெரியும்போது.

உன் விழிகள்
என்னுள் ஏற்றிய ஜோதி
நளினமாய் நடுங்குகிறது!

தென்னை மரங்கள்
காற்றில் சரம் முறித்துக்
களைப்பாறும் போது...

உன் கனிவால்
எனக்குள்
உயிர் பெற்ற ஊற்றுக்கள்
அருவியாகின்றன!
உன்
கண்களின் வார்த்தைகள்
கனவுப்புத்தகங்களில் தான்
அச்சேற முடியும்

இருப்பினும், இருப்பினும்
அவற்றை வாசிப்பதையே
மனம் நேசிக்கிறது!

ஞாபகச் சமவெளியில்
நடந்து நடந்து
கால்கள் இதமாய்
வலிக்கின்றன!

உன்னில்
நனைந்த உணர்வுக் குளிரில்
எண்ணம் சிலிர்க்கிறது.

-தி. உமாமகேச்வரி
இறுதியாண்டு, ஆங்கிலம்
பாத்திமா கல்லூரி,
மதுரை.





# கண்ணீர் கடிதம்

அன்புள்ள கல்கி ஆசிரியருக்கு,

சென்னைப் பல்கலைக் கழக ஐந்தாம் பருவ (Fifth semester) தேர்வுகள் எங்களுக்கு, 1984-ஆம் ஆண்டு நவம்பர் 26-27-28 தேதிகளில் நடந்தன. இதற்கான முடிவு இன்று (11-1-85) எங்களுக்குக் கிடைத்தது. முடிவு எங்களைத் திகைப்பில் ஆழ்த்தியது.

நவம்பர் 28-ம் தேதி நடந்த 'Fiscal Economics' எனும் Major Paper-ல் முதல் பத்து பேர், 30 மதிப்பெண்ணைக்கூடத் தாண்டவில்லை. எமது வகுப்பின் எண்ணிக்கை 24. இதில் முதல் பத்து பேர் தேர்ச்சி பெறவில்லை.

நாங்கள் 'revaluation' கேட்க முடியாது. அம்முறையை எடுத்து விட்டார்கள். இதனால் இதுவரை தேர்வில் தோல்வியே சந்திக்காத மாணவியர் தேர்ச்சி பெறவில்லை; இந்தச் சூழ்நிலை மாணவியரிடையே சோகச் சூழலை ஏற்படுத்தி உள்ளது. எங்கள் குறைகளைக் கேட்பார் இல்லையா? சென்னைப் பல்கலைக் கழகம் தூங்குகின்றதா?

மாணவியர் மதிப்பெண்களை வெளியே கூற அச்சப்பட்டுத் தற்கொலை முயற்சியில்கூட ஈடுபட இது தூண்டுகிறது: ஒரு தாளுக்கு நாங்கள் கட்டும் பணம் ரூ. 18. சென்னைப் பல்கலைக் கழகம் மீண்டும் மீண்டும் எங்களைப் பரீட்சை எழுத வைத்துப் பணம் சம்பாதிக்க முயல்கிறதா?

இன்று என்னுடைய சகோதரிகள் அழுத அழுகையையும், அவர்கள் குடும்பச் சூழ்நிலையையும் எண்ணி, எண்ணி வேதனைப்பட்டேன்.

ஒரிருவரைத் தவிர அனைவருமே ஏழைமை நிலையில் இருப்பவர்கள். பூமா, மேகலா, கல்யாணி என்போர் ஏழை ஆசிரியர்களின் குழந்தைகள். வேலை செய்து வீட்டைக் காப்பாற்ற வேண்டிய நிலையிலுள்ள மாணவிகள் மேரியும், சாந்திமதியும். இவர்கள் அனைவரும் மற்றத் தாள்களில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இன்றைய மாணவியரே நாளைய தலைமுறை. அவர்கள் இப்போதே தன்னம்பிக்கை இழக்காமலிருக்கச் செய்யுங்கள்.

நான் தேர்வில் வெற்றிபெறினும், அதிக மதிப்பெண்ணை பெறாமையால் 'distinction'ஐ இழந்துவிட்டேன்.

இதுவரை 100 சதம் தேர்ச்சி பெற்றுவந்த எம் வகுப்பு 50 சதம் கண்ணீர் வடிக்கின்றது. 24 பேரில் முதல் 11 பேருக்கே இந்த நிலை. பின்னுள்ள 13 பேரில் அதிகம் பேர் 60 சதத்துக்கு மேல் பெற்றுத் தேர்ச்சி பெற்றுள்ளனர். அவர்களில் ஒருவரும் தோல்வியடையவில்லை.

இது ஏன்?

முன்னால் பெயர் வந்த எல்லோரும் குற்றம் செய்தவரா?

நம்பிக்கையுடனும், தாழ்மையுடனும், அன்புடனும்,

வகுப்புத் தலைவி

காஞ்சி, 12-1-85 இரா. ஆனந்தி

(மூன்றுமாண்டு இளங்கலைப் பிரிவு மாணவியர் (பொருளியல்)
பச்சையப்பாஸ் மகளிர் கல்லூரி)

[மேற்படி கண்ணீர்க் கடிதத்தை சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரிடம் சேர்ப்பித்துள்ளோம். மாணவியருக்கு அநீதி நடந்திருந்தால் சரிப்படுத்தப்படும் என்று எதிர்பார்ப்போம். —ஆசிரியர்]

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran

# நறுமணத்துடன் புது மலர்ச்சிதரும் அந்த முதற் காப்பியின் சுவை...



## ...நாளில் எந்நேரத்திலும்.

ஆஹா ! ஒவ்வொரு காலையும் எத்தனை சிறப்பாக தொடங்கலாம். அம்மா தயாரித்த அந்த புத்துயிரூட்டும் அருமையான முதற் காப்பியுடன் ! ஈடு இணையற்ற அந்த கமகமவென்ற மணம் மற்றும் முழுமையான சுவைதரும் நிறைவு...உங்களுக்கு புத்துணர்ச்சியூட்டி, புலன்களைத் தட்டியெழுப்பும் அதன் மகிமை !

காலங்காலமாய் ஒரு சிறந்த எடுத்துக் காட்டு மாதிரி இருக்கும் அந்த காப்பியே எங்களையும் ஸன்ரைஸை தயாரிக்க ஊக்கமளித்தது.

**ஸன்ரைஸ். சிறந்த காப்பிக்கு ஒரு நற்சான்று.**

அம்மா தயாரிக்கும் காப்பி போலவே தயாரிக்கப்பட்டது ஸன்ரைஸ். புது மலர்ச்சியளிக்கும் அந்த முதற் காப்பியை எந்நேரத்திலும் விரும்பும் காப்பி அன்பர்களுக்காக. அந்த முதற் காப்பியின் நறுமணத்தையும், சுவையையும் எந்நேரத்திலும் நீங்கள் வேண்டும் போதெல்லாம் அளிக்கும் ஒரு சிறந்த காப்பி-சிக்கரி கலவை.




**Nestlé**

# ஸன்ரைஸ்

**இன்ஸ்டன்ட் காப்பி-சிக்கரி ப்ளெண்ட்**

## அம்மாவின் காலை காப்பியின் புத்துணர்ச்சியூட்டும் நறுமணத்துடன்.

FSL-8517A TAM

EGISTERED No. M. 4292
gistered as a Newspaper in Sri Lanka

